


# செய்தியே சித்திரமே!




**தமிழரசு**

1-5-75

மலர் 5 இதழ் 21



# வறட்சியை விரட்டிட...



## முதல்வர் கலைஞர்

**1974**-75-ஆம் நிதியாண்டில் வறட்சி நிவாரணப் பணிகளுக்கென்று திட்டத்திற்கு அப்பாற்பட்ட செலவாக ரூபாய் பத்து கோடி ஒதுக்கினோம்.

அவற்றில் 31.3.1975 முடிய முடிக்கப்பட்ட வறட்சி நிவாரண வேலைகளின் மதிப்பு ரூபாய் பத்து கோடி. செலவு செய்யப்பட்ட மொத்தத் தொகை எட்டுக்கோடியே எழுபது இலட்சம்.

நடப்பு நிதியாண்டில் (1975-76) வறட்சி நிவாரணப் பணிக்காக முதற் கட்டமாக ரூபாய் ஆறு கோடியே, முப்பது இலட்சம் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இது எல்லா மாவட்டங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. இவற்றில் 12.4.'75 வரை ரூபாய் 44.26 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டில் 12.4.'75 வரை முடிக்கப்பட்ட வறட்சிப் பணிகளின் மொத்த மதிப்பு ரூபாய் 1.25 கோடி.

சென்ற நிதியாண்டு இறுதியிலும், நடப்பு நிதியாண்டில் இதுவரையிலும் பதினாறுகோடி ரூபாய் அளவுக்கு வறட்சி நிவாரணத்திற்காக, திட்டத்திற்கு அப்பாற்பட்ட செலவாக மாவட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்துள்ளோம். இதற்கு மேலும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் ரூபாய் இரண்டு கோடியும், சென்னை மற்றும் முக்கிய நகரங்களுக்கும் ரூபாய் ஒரு கோடிக்கு மேலும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வறட்சி நிவாரணப் பணிகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

1974-75-ஆம் நிதியாண்டில் வறட்சி நிவாரணத்திற்காக மத்திய அரசு சிறப்பு நிதி உதவியாகக் கொடுத்துள்ளது ஏழரைக்கோடி ரூபாயாகும்.

இந்த ஆண்டு, அதாவது 1975-76, வறட்சி நிவாரணப் பணிகளுக்காக நிதி உதவி தருவதற்கு மத்திய அரசிடமிருந்து எந்தவிதத் தகவலும் இதுவரையில் இல்லை.

1974-75-ல் கொடுக்கப்பட்ட ரூபாய் ஏழரைக்கோடியும் திட்டத்திற்குத் தரும் நிதி உதவியின் அடிப்படையில் தான் (Plan Assistance) தரப்பட்டது; அதாவது கடன் 70 சதவிகிதம்; மானியம் 30 சதவிகிதம்.

ஆனால் இந்த நிதி உதவி 1975-76-ஆம் நிதியாண்டான இந்த ஆண்டு திருப்பிச் செலுத்தப்படத் தேவையில்லை.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், இனி வரும் நிதியாண்டுகளில்தான் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும்.

நாம் ஏற்கனவே மத்திய அரசை 1975-76-ஆம் நிதியாண்டுக்கு வறட்சி நிவாரணப் பணிகளுக்கு என்று திட்டத்திற்கு அப்பாற்பட்ட சிறப்பு நிதி உதவியாக ரூபாய் இருபது கோடி ஒதுக்கித் தரும்படி கேட்டிருந்தோம். இதை ஐந்தாவது திட்டக் காலத்தில் கழித்துக் கொள்ளக் கூடாது என்பது நம்முடையவாதம்.

இதற்கு நாம் கூறும் காரணங்கள்:

1. எதிர்பாராத விதமாக பருவமழை பொய்த்துவிட்ட காரணத்தால் ஏற்பட்ட வறட்சிக்குத்தரப்படும்நிதி உதவியை ஆண்டுத் திட்டங்களில் கழிப்பதன் மூலம் நம்முடைய நிதி ஆதாரங்கள் திட்ட அளவுக்குக் குறைவதோடு, பணிகளும் குறைந்து விடுகிறது.

2. திட்டங்களில் வறட்சி நிதியைக் கழித்துக் கொள்வது என்பது ஒரு கொள்கையானாலும், ஐந்தாவதுத் திட்டம் என்பது பெயரளவிற்குத்தான் இருக்கிறதே ஒழிய, உண்மையிலேயே நடப்பது ''ஆண்டுத் திட்டம்'' தான். எனவேதான் இதை நான் ''திட்டம் வரையறுக்கப்படாத திட்டகாலம்'' என்று கூறுகிறேன். (Plan period without plan)

ஐந்தாண்டுத் திட்டத்தின் காலம் 1974-75 முதல் 1978-79 வரை, ஐந்து ஆண்டுகள் என்று வரையறுக்கப்பட்டிருந்தாலும் இந்தத் திட்டத்திற்கு இன்னும் முழு வடிவம் கொடுக்கப்படவில்லை. திட்டத்திற்கு முழு வடிவம் கொடுக்கப்பட்டால்தான் மத்திய நிதி உதவியின் மொத்த அளவையும் நம்முடைய நிதி ஆதாரத்தையும் சேர்த்து திட்டக் காலத்தின் ஆண்டுத் திட்டங்களின் அளவை நாம் கணக்கிட முடியும். எனவேதான் இப்போது இருப்பதும் வெறும் ஆண்டுத் திட்டமேயன்றி ஐந்தாண்டுத் திட்டம் அல்ல என்பது நம்முடைய கருத்து.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் இரண்டு நடப்பு ஆண்டுகளில் (1974-75, 1975-76) நமது ஆண்டுத் திட்டத்திற்கு மத்திய அரசு ஆண்டுதோறும் தந்துள்ள நிதி உதவி ரூ. 41.15 கோடி.

இது நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கடைசி ஆண்டாகிய 1973-74-ல் நமக்குத் தரப்பட்ட நிதி உதவியின் அளவுதான். எனவே இந்த திட்ட உதவியில் எந்த வித

மான வளர்ச்சியும் கிடையாது. ஆகவேதான் வறட்சி நிவாரணத்திற்காக திட்டத்திற்கு அப்பாற்பட்ட சிறப்பு நிதி உதவியாகத் தருகின்ற மத்திய நிதி உதவியை இந்த ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் கழித்துக் கொண்டால் ஆண்டுத் திட்டங்களின் அளவு குறைவதோடு வளர்ச்சிப்பணிகளும் தடைப்படும் என்று நாம் இப்போது கூறுகிறோம்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை திட்டத்திற்காக மத்திய அரசு தரும் நிதி உதவியும் (Plan Assistance) மிகக் குறைவு.

வறட்சி நிவாரணத்தைப் பொறுத்தவரையில் ஆறாவது நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை ஏற்று அமல் நடத்துவதாக மத்திய அரசு வாதிடுகிறது. நம்முடைய கோரிக்கை எல்லாம், வறட்சிக்காகத் தரப்படும் நிதியைத் திட்டக் காலத்தில் தவணை முறையிலே கழித்துக் .கொள்வது என்பதை ஒரு கொள்கையாக ஏற்றுக் கொண்டாலும்கூட, ஐந்தாண்டுத் திட்டமே ஏற்றுக் கொண்டாலும்கூட, ஐந்தாண்டுத் திட்டமே செயல்படாதபோது ஆண்டுத் திட்டங்கள் என்கிற பெயரால் மத்திய உதவியும் மிகக் குறைவாக அளிக்கப்படுகிறபோது, வறட்சிக்கென தரப்படும் சிறப்பு நிதியைத் திட்டத்தில் கழித்துக் கொள்வது என்பது நடைமுறை சாத்தியமாகாது என்பதாகும்.

ஆகவேதான் இந்த ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் வறட்சி நிதியைக் குறைத்துக் கொள்ளக்கூடாது என்றும், ஆறாவது ஐந்தாண்டு திட்டக் காலத்திலிருந்து குறைத்துக் கொள்ளலாம் என்றும், நான் ஏற்கனவே சட்டப் பேரவையில் நமது அரசின் கோரிக்கையாக அறிவித்திருக்கிறேன்.

அண்மையில் தமிழகத்திற்கு வந்து, வறட்சிப் பணிகளைப் பார்வையிட்ட மத்திய அமைச்சர் அவர்கள் வறட்சிப்பணிகள் நல்ல முறையில் நடைபெறுகின்றன என்று கூறியிருப்பதோடு வறட்சி நிதியை ஆறாவது திட்டத்தில் கழித்துக் கொள்ள வேண்டும் என்ற நமது கோரிக்கையையும் தேசிய வளர்ச்சிக்குழு கூட்டத்தில் விவாதிக்கலாம் என்று கூறியிருப்பது வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

அந்த அடிப்படையில் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலும், அதற்குப் பின்பும் படிப்படியாகக் கழித்துக் கொள்ள வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி மேலும் நமக்குத் தேவையான வறட்சி நிதிக்காக மத்திய அரசுக்கு நமது அரசின் சார்பில் எழுதப்பட்டிருக்கிறது.

கே. ராசாராம்: முதலமைச்சர் இதுவரையில் பத்து கோடி ரூபாய், மார்ச் 31-ஆம் தேதி முடிய செலவாகியிருக்கிறது என்று சொன்னார்கள். இப்போது திடீரென்று நடந்து கொண்டிருந்த வேலைகள் எல்லாம் நின்று விட்டன.

முதல்வர் : அந்த பத்துக் கோடிக்குப் பிறகு அரசுச் சார்பில் 6.30 கோடி சமீபத்தில் ஒதுக்கப்பட்டிருருக்கிறது.

கே. ராசாராம்: வறட்சி நிவாரண வேலைகளிலேயே மிகப் பிரதான வேலை ஆர்.எஸ். மங்கலம் வேலைதான் என்று கருதுகிறேன்; அங்கு நிறுத்தப்பட்டுவிட்டதாக ராமகிருஷ்ணத் தேவர் சொன்னதைத் தான் சொல்கிறேன்.

முதலமைச்சர் : ஆர். எஸ். மங்கலத்தில் நடைபெறுகின்ற வேலை வறட்சி நிவாரண வேலைகளில் எடுத்துக்கொள்ளப்படவில்லை. சிறப்பு வேலையாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அங்கே நடைபெற வேண்டிய பால அடிக்கல் நாட்டுவிழா-ஆளுங்கட்சி நாடாமன்ற உறுப்பினர், காங்கிரஸ் கட்சியின் சட்டமன்றப் பிரதிநிதிகள், அத்தனை பேரும் கேட்டுக் கொண்டதற்கிணங்க வருகின்ற 23-ம் தேதி நடைபெறுவதாக இருந்தது. ஆனால் முன்னாள் குடியரசுத் தலைவர் ராதாகிருஷ்ணன் அவர்கள் மறைந்து விட்ட காரணத்தால் இந்தியா முழுமையும் துக்கநாள் அனுஷ்டிக்கப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்ட காரணத்தால், நாமும் அதைத் தொடர்ந்து 23-ம் தேதிவரை துக்கநாள் என்று அறிவித்து அந்த நாள் வரை எல்லா விழாக்களையும் நிறுத்திவிட்டோம். ஆனால் வேறு மாநிலங்களில் எல்லாம் விழா நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது. நாம் மாத்திரம்தான் அதனை ஒழுங்காக அனுஷ்டித்துக் கொண்டு வருகிறோம்; அதனால் தான் ஆர். எஸ். மங்கலத்தில் அந்த விழா நடைபெறவில்லை.

கே. ராசாராம் : வறட்சி இதுவரையில் நாம் காணாத அளவிற்கு இருக்கிறது. இந்த வறட்சி நிவாரணப் பணிகளில் சட்டசபை உறுப்பினர்கள் அனைவரையும் அரசு பயன்படுத்திக்கொண்டு வேலை வாங்க வேண்டும். இதிலே அரசியலுக்கே இடமில்லை.

முதல்வர் : வறட்சி நிவாரணப்பணிகளைக் குறித்து எதிர்க்கட்சித்தலைவர் குறிப்பிட்டார். இந்த அரசாங்கம், அந்தப் பணியை ஒரு ராணுவ நடவடிக்கைபோல கருதிதான் சில மாதங்களாக எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொண்டிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் ஒத்துழைக்க வேண்டுமென்று சொன்னார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒத்துழைக்கும் வகையில் இன்றைக்கு வறட்சி நிவாரண நிதிக்காக ஐநூறு ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். அதற்கான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மற்ற உறுப்பினர்களும் கொடுத்திருக்கிறார்கள் என்றாலும், தனித்தனியாக அத்தனை பேர்களுக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன் என்றாலும், தனித்துச் சொல்லக் காரணம், முதலில் அவர்கள் இந்த நிதியைக் கொடுப்பதில்லை என்று ஒரு அறிக்கை வந்தது. நான் கூட சட்டப்பேரவையில்அவை முன்னவர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கான பல்வேறு சலுகைகளை அறிவித்தபோது, நான் குறுக்கிட்டு ''நீங்கள் கேட்டதை எல்லாம் நான் கொடுத்திருக்கிறேன்; நான் கேட்ட வறட்சி நிவாரண நிதியினை நீங்கள் அனைவரும் கட்சி சார்பற்ற முறையில் தர வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டேன். நாடாளுமன்ற, சட்டமன்ற, மேலவை உறுப்பினர்களில் யார் யார் இதுவரையில் கொடுத்திருக்கிறார்கள் என்ற பட்டியல் பத்திரிகைகளில் வரவிருக்கிறது. கொடுக்காதவர்களின் பட்டியல் வராது. ஆகவே அதற்கு முன்பு எல்லாரும் அதனை வழங்கிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*[தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் 21-4-1975 அன்று கொண்டுவரப்பட்ட கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்குப் பதிலளித்து முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை].*

# தமிழ்நாட்டில் தொழிலாளர் நலத் திட்டம்

சமூக நலக் கொள்கையைக் கருத்தில் கொண்டு பெருகி வரும் தொழிலாளர்களுக்கு பாங்குடைய வசதியான குடியிருப்புகள் ஒதுக்குவது மிகவும் அவசியமானதாகும். ஏனெனில் அவர்களில் பெரும்பாலோருக்குச் சொந்த வீடுகள் வைத்துக் கொள்ள இயலாது அல்லது அவர்கள் பணியிடத்திலிருந்து வெகு தொலைவில் வசிப்பவர்களாய் உள்ளனர். சில தொழிலபதிபர்கள் தங்களுடைய பணியாளர்களுக்கும் ஊழியர்களுக்கும் குடியிருப்பு வசதிகள் அளிக்கிறார்கள். ஆனால் இது இடவசதிப் பிரச்சினையைச் சிறிதுகூடத் தீர்ப்பதாக இல்லை. பணியிடங்களுக்கு அருகில் வசதியுள்ள இடங்களில் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி அளிக்கக் குறைந்த விலையிலான வீட்டு வசதித் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

1948-ஆம் ஆண்டு தொழிற்சாலைச் சட்டத்தின் கீழ் வரும் தொழிலாளர்களின் நன்மைக்காக வீடுகள் கட்டப் பொதுத் துறை கூட்டுறவுத்துறை தனியார்துறை ஆகியவற்றுக்கு இத்திட்டத்தின் கீழ் நிதியுதவி அளிக்கப்படுகிறது. இரு சிறிய அறைகள் கொண்ட வீடு (இரண்டடுக்கு மாடிக் கட்டடம்) கட்டுவதற்கு உச்சவரம்பாக ரூ. 5,350-ம், இரு சிறிய அறைகள் கொண்ட வீடு (பல அடுக்கு மாடிக் கட்டடம்) கட்டுவதற்கு உச்சவரம்பாக ரூ. 6,050-ம் வழக்கமான இரு அறைகள் கொண்ட வீடு இரண்டடுக்கு மாடிக் கட்டடம் கட்டுவதற்கு உச்சவரம்பாக ரூ. 7,600-ம் வழக்கமாக இரு அறைகள் கொண்ட வீடு (பல மாடிக் கட்டடம்) கட்டுவதற்குக்கு உச்சவரம்பாக ரூ. 8,500-ம் நிதியுதவி அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. 1973-74-ஆம் ஆண்டில் தனியார் துறையை பொறுத்தவரை இத்திட்டத்தின் கீழ் 3.15 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டது.

அருணா ஷுகர்ஸ் லிமிடெட் பெண்ணாடம், வட ஆர்க்காடு மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை, வேலூர்; தமிழ்நாடு சிமெண்ட் தொழிற்சாலை, ஆலங்குளம், சேலம் கூட்டுறவு ஷுகர்ஸ் மில், மோகனூர், கெமிகல்ஸ், அண்ட் பிளாஸ்டிக்ஸ் லிமிடெட், மேட்டூர் அணை; சக்தி ஷுகர்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர்; தென் இந்தியக் கூட்டுறவு நூற்பாலை, பேட்டை ஆகியவற்றின் வீட்டு வசதித் திட்டங்களுக்கு 1974-75-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுட்டுள்ளது.

மலைத்தோட்டத் தொழிலாளர்கள் வீட்டுவசதித் திட்டம் மலைத்தோட்டச் சொந்தக்காரர்கள் தங்களது தொழிலாளர்களுக்குக் குடியிருப்புகள்கட்டித் தருவதை நோக்கமாகக் கொண்டது. அவ்வீடுகள் ஒவ்வொன்றும் ரூ. 3,200 உச்சவரம்பு செலவில் கட்டப்படுகின்றன. அத்தொகையில் 50 சதவிகிதம் கடனாகவும், 37.5 சதவிகிதம் உதவித் தொகையாகவும் இருக்கும்.

1974-75-ல், குள்ளக்கம்பை, சுல்தானா எஸ்டேட்டில் 20 வீடுகளும் வால்பாறை, சோலையாறு-கலையாறு எஸ்டேட்டில் 61 வீடுகளும் கட்டுவதற்கான செயற்குறிப்புகள் நிருவாகத்தினரிடமிருந்து வரப்பெற்றுள்ளன. அவை அரசின் பரிசீலனையில் உள்ளன. இம்மாநிலத்தில் உள்ள மலைத்தோட்டத் தொழிலாளர்களில் சுமார் 97 சதவீதத்தினருக்கு வசதியுள்ள தரமான வீடுகள் அளிக்கப்பட்டுள்ளன.

மலைத்தோட்டத் தொழிலாளர் வீட்டுவசதி ஆலோசனை வாரியத்தில் தொழிலதிபர் பிரதிநிதிகளும் தொழிலாளர் பிரதிநிதிகளும் உறுப்பினர்களாய் உள்ளனர். தொழிலாளர் நல-வேலை வாய்ப்புத்துறை செயலாளர் இதன் தலைவராவார். வாரிய உறுப்பினர்கள் எழுப்பும் வீட்டு வசதி குறித்த பொருள்கள் பற்றி விவாதித்து அது குறித்து மலைத்தோட்டத் தொழிலாளர் நலச் சட்டத்தின் விதித்துறைகளைச் சரிவர செயற்படுத்துவதன் வழிவகைகளைத் தெரிவிப்பதே வாரியத்தின் முக்கிய அலுவலாகும்.

தொழிலாளர்கள் கல்வித் திட்டத்தை இந்திய அரசு, இந்தியா முழுவதும் கொண்டு வந்துள்ளது. தமிழ்நாட்டில் இத்திட்டம் இந்த ஆய்வு ஆண்டில் தொடர்ந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது.

சென்னை, வட்டாரத் தொழிலாளர் கல்வி இயக்குநர் அலுவலகம், சென்னை, பல்லவன் போக்குவரத்துக் கழக ஓட்டுநர்களின் பயனுக்காகப்போக்குவரத்துக் காவல்துறை, மாநகரக் காவல்துறை ஆகியவற்றின் ஒத்துழைப்புடன், "சாலைப் பாதுகாப்பு" வகுப்பை நடத்தியது.

வட்டாரத் தொழிலாளர் நல நிறுவனம், சென்னையிலுள்ள தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிறுவனம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன், வட்டார இயக்குநர் அலுவலகம் பொதுத் துறை, தனியார் துறைகளைச் சேர்ந்த பல்வேறு நிறுவனங்களின் தொழிலாளர்கள்-ஆசிரியர்கள் நலனுக்காக ''தொழில் பாதுகாப்பு'' குறித்த சிறப்பு நினைவூட்டுப் பயிற்சி வகுப்புகளை 12.8.74 முதல் 17.8.74 வரையிலான கால அளவில் நடத்தியது. சிறந்த தொழில் உறவு பற்றிய தொழிற்சங்க வளர்ச்சி, தொழில் கல்வியின் பங்கு ஆகியவை குறித்த கருத்தரங்கு ஒன்று 17.8.74 அன்று வட்டார இயக்குநர் அலுவலகத்தால் நடத்தப்பட்டது. 1974, உலக மக்கட்தொகை ஆண்டைக் கொண்டாடுவதற்காக ''தொழிலாளர் குடும்ப நலன்'' பற்றி மற்றொரு கருத்தரங்கு நடத்தப்பட்டது.

வட்டார இயக்குநர் அலுவலகம், சென்னை அனைத்திந்திய வானொலி நிலையத்தின் ஒத்துழைப்புடன் அந்தந்த வட்டாரத்திலுள்ள பெரிய தொழில் நிறுவனங்களில் ''தொழிலாளர் கல்வி வானொலி'' மன்றங்களை அமைத்து வருகிறது. தொழிலாளர்கள், அனைத்திந்திய வானொலி அதிகாரிகளுக்கு குறிப்பிட்ட காலத்திற்கொரு முறை தொழில் சம்பந்தப்பட்ட விமர்சனங்களை அளித்திட இயலும் பொருட்டு சென்னை அனைத்திந்திய

வானொலி நிலையம் ஒலிபரப்பும் தொழிற்சாலை தொழிலாளர் திட்டங்கள் பற்றிய பொருட்களைக் கவனிப்பதற்குத் தொழிலாளர்களுக்கு வாய்ப்பளிப்பதையே இம்மன்றம் முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது. தொழிலாளர் சம்பந்தப்பட்டப் பொருட்கள் பற்றி குழுவாக இருந்து விவாதிப்பதன் மூலம் வானொலி நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளவும் இம்மன்ற உறுப்பினர்களுக்கு வாய்ப்பளிக்கப்படும். இதற்காக நிருவாகம் தொழிலாளர் கல்வி வானொலி மன்றத்திற்கு ''டிரான்ஸிஸ்டர்'' ஒன்றை வழங்கும். அப்போதுதான் உறுப்பினர்கள் முறையாக நிகழ்ச்சிகளைக் கவனிக்க இயலும். அதன்படி இரண்டு வானொலி மன்றங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

**தொழிலாளர் கல்வி நிலையம் மதுரை**

1974-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் கோவில்பட்டி திருவாளர்கள் லாயல் டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்தின் நடுத்தர நிருவாகப் பணியாளரது நலனுக்காக இந்த வட்டார இயக்குநர் அலுவலகம் சிறப்புப் பயிற்சித் திட்டம் ஒன்றை உருவாக்கியது.

முந்திய ஆண்டுகளைப் போலவே, தூத்துக்குடி மதுரா மில்ஸ் கம்பெனியில் செயல்படும் பல்வேறு தொழிற்சங்க அலுவலர்களின் நலனுக்காக 1974 ஏப்ரலில் சிறப்புப் பயிற்சித் திட்டம் ஒன்றை வகுத்தது.

அறிக்கை ஆண்டில் அதிகமான தொழிலாளர்களுக்குப் பயிற்சி அளிக்கக்கூடிய வசதி கொண்ட நிருவாக அமைப்புகளுக்கும், அதிகமான தொழிலாளர்களுக்கும் பயிற்சி அளிக்கக்கூடிய தொழிலாளர்-ஆசிரியர்களுக்கும்வட்டாரத் தகுதிப் பரிசுகள் வழங்கப்பட்டன.

**தொழிலாளர் கல்வி நிலையம் கோயம்புத்தூர்**

தொழிலாளர் கல்வி வட்டார இயக்குநர் அலுவலகம், நேரிடை விளம்பர இயக்குநர் அலுவலகம் தமிழ்நாடு அரசு ஆகியவற்றின் இணைந்த ஆதரவுடன் கோயம்புத்தூரில் ''பணவீக்கத்தைத் தடுப்பதற்கு அரசு எடுக்கும் நடவடிக்கைகள்'' பற்றிய சிறப்புக் கருத்தரங்கு ஒன்று நடத்தப்பட்டது.

## கேபிள்கள் மூலம் தொலைக்காட்சி

தொலைக் காட்சி நிகழ்ச்சிகளை கேபிள்கள் மூலம் அஞ்சல் செய்வதற்கான முறை ஒன்றை இந்தியப் பொறியியல் வல்லுநர்கள் கண்டுபிடித்துள்ளனர். சென்னையிலுள்ள இந்தியத் தொலைபேசி நிறுவனம் அஞ்சல் தந்தித் துறையின் தொலைத் தொடர்பு ஆராய்ச்சி நிலையத்துடன் இணைந்து, இப்புதிய வகைக் கேபிளை வளர்ச்சியடையச் செய்துள்ளது. இவ்வாண்டு பிற்பகுதியில் நடைபெறவிருக்கும் நிகழ்ச்சியை அஞ்சல் செய்வதற்குப் பயன்படுத்தப்படும். இக்கருவியைத் தயாரித்து அளிப்பதற்கான உலக ஒப்பந்தப்புள்ளி ஒன்றையும் இந்த நிறுவனம் பெற்ற குறித்த காலத்துடன் நிறைவேற்றியுள்ளது. இக்கருவியின் மூலம் கறுப்பு, வெள்ளை, வண்ணப்படங்களையும் அஞ்சல் செய்யலாம்.

இந்திய அரசினால் அமைக்கப்பட்டத் தொழிலாளர் நலக் குழு தேசீய தொழிலாளர் ஆணைக்குழு ஆகியவற்றின் பரிவுரைகளுக்கேற்ப, ரூ. 5 இலட்சம் தொடக்க மானியத்துடன் 1973-ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு தொழிலாளர் நலநிதி ஒன்றை அமைத்தது. தமிழ்நாடு தொழிலாளர் நிதிச்சட்டத்தை யொட்டி இது அமைக்கப்பட்டது.

1972-ஆம் ஆண்டில் தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம் இயற்றப்பட்டது. தொழிலதிபர்கள், தொழிலாளர்கள் ஆகியோர்களிடமிருந்து தொழிலாளர் நல நிதிக்குத் தொகைகள் வசூலிப்பதற்கு இச்சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. தொழிலாளர்கள் நலத்திட்டம் இச்சட்டத்தினால் . சட்டப்பூர்வமாக்கப்பட்டது. இச்சட்டம் 1973-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1-ஆம் நாள் முதல் செயலுக்கு வந்தது. அதன் கீழ் செய்யப்பட்ட தொழிலாளர் நல-விதிகள் 6-9-73-லிருந்து செயலுக்குக் கொண்டு வரப்பட்டன. இச்சட்டத்தின் பெக்டர்களாக நியமிக்கப்பட்

கீழ் தொழிற்சாலைகள் மலைத் தோட்டங்கள் ஆகியவைகளைப் பொறுத்த வரையில் தொழிற்சாலை இன்ஸ்பெக்டர்களும் தொழிற்சாலை உதவி இன்ஸ்பெக்டர்களும் மலைத்தோட்ட இன்ஸ்பெக்டர்களும் இன்ஸ்டனர். மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள், உணவகங்கள், பீடி நிறுவனங்கள், மேற்படி சட்டத்தின் 2 (டி) (5) பிரிவின் கீழ்வரும் நிறுவனங்கள் ஆகியவற்றைப் பொறுத்தவரை தொழிலாளர் நல இன்ஸ்பெக்டர்கள் தொழிலாளர் நலத் துணை இன்ஸ்பெக்டர்கள், ஆகியோர் இன்ஸ்பெக்டர்களாக இருக்கிறார்கள் சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தொழிலாளர் நல ஆணையாளர்களை இச்சட்டத்தின் கீழ் இன்ஸ்பெக்டர்களாக அரசு அறிவித்துள்ளது.

இதுவரை அரசு தொடக்கத்தில் வழங்கிய மானியம் தவிர ரூ. 40.28 லட்சம் இந்நிதிக்குப் பெறப்பட்டுள்ளது.

**தொழிற்சாலை விபத்துக்கள் இடர் உதவி நிதி**

தொழிற்சாலை விபத்துக்கள் இடர் உதவி நிதி ஒன்றை ஆண்டொன்றுக்கு ரூ. 15,000 தொடர் மானியத்துடன் அரசு ஏற்படுத்தியுள்ளது. கல் உடைத்தல், கண்ணி வைத்துத் தகர்த்தல், கிணறு தோண்டுதல், ஏனைய தொழில்கள் ஆகியவற்றில் பணிபுரிகையில் காயமேற்பட்டு நிரந்தர இயலாமை அடைந்த தொழிலாளர்கள் அல்லது மரணமடைந்த தொழிலாளரைச் சார்ந்துள்ளவர்களுக்கு இந்நிதியிலிருந்து உதவியளிக்கப்படும். 1923-ஆம் ஆண்டு தொழிலாளர்களுக்கு இழப்பீடு வழங்குச் சட்டத்தின்கீழ் இழப்பீடு வழங்குவதற்கு நிதி ஆதாரம் இல்லாத தொழிலதிபர்களின் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு அல்லது வேறு காரணங்களுக்காக இழப்பீடு பெற இயலாத தொழிலாளர்களுக்கு அல்லது அவர்களைச் சார்ந்துள்ளோருக்கு இந்நிதியிலிருந்து துயர் தணிப்பு உதவித் தொகையளிக்கப்படும். இத்தகைய நேர்வுகளில் இழப்பீடு வழங்கப் போதுமான நிதி ஆதாரம் இல்லாத சிறிய ஒப்பந்தக்காரர்களிடம் பணிபுரியும் தொழிலாளர்கள் இதனால் பயனடைவர். 1974-ஆம் ஆண்டில் ஒருவருக்கு இடர் உதவி நிதியாக ரூ. 1,000 வழங்கப்பட்டுள்ளது.

# தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் SIPCOT



## பாலையையும்...



## ...ஆலையாக்குகிறது

தனியார் துறையில் நடுத்தர, பெரிய தொழில்களை வளர்ப்பதும், பின்தங்கிய பகுதிகளைத் துரிதமாக தொழில்மயமாக்குவதும் 'சிப்காட்'டின் குறிக்கோள்கள். இந்நிறுவனம் ரூ. 81 கோடி மொத்த முதலீட்டை ஊக்குவித்து, 13,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பை நல்கியுள்ளது.

SIPCOT

விவரங்களுக்கு எழுதுக :

**சிப்காட்**
11 A/1, அண்ணா சாலை,
சென்னை-600 002.

# செவியும் கண்ணும் சேர்ந்து பெறும் விருந்து!



அட்டை சொல்லும் கட்டுரை

**வா**னெலியில் நாடகம் கேட்கிறோம்.

நம்மால் அந்த நாடகத்தில் நடிக்கும் நடிகர், நடிகையரின் வசனநடை, குரலோசை, இன்னிசை போன்றவைகளைக் கேட்க முடிகிறது; அதே நேரத்தில் அவர்களின் நடிப்பாற்றல், முகபாவம் போன்றவற்றை ஓரளவு மனக்கண்ணால் உணர முடிகிறது. ஆனால், கதாபாத்திரங்களை நேரில் காணுகின்ற வாய்ப்பில்லை.

வரலாற்று நாடகமாயிருந்தால் போர்க்களத்தில் நிகழ்கின்ற நிகழ்ச்சிகள் அதாவது குதிரைகளின் குளம்படியோசை, யானைகளின் பிளிறல், பீரங்கிகளின் வெறி முழக்கம், போர் வீரர்களின் வாளும் வேலும் மோதுகின்ற கொடூர ஒலி ஆகியவைகளை நம்முடைய செவிகளால் கேட்க முடிகின்றது.

இவையன்றி நடன, இசை நிகழ்ச்சிகள், சொற்பொழிவுகள், தொகுப்பு நிகழ்ச்சிகள்போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளை நாம் செவிகளால் மட்டுமே கேட்டு மகிழ்கின்றோம். ஆனால் இவைகளை நேரில்-திரைப்படம் போன்றவைகளில் காணுகின்ற மகிழ்ச்சியும், பரவசமும் வானொலியில் கேட்கும் பொழுது ஏற்படுவதில்லையே!

செவிகளுக்கு மட்டுமே விருந்தளிக்கிறது வானொலி; ஆனால் செவிகளுக்கும், கண்களுக்கும் ஒரே நேரத்தில் விருந்தளிக்கிறது திரைப்படம். வானொலி, திரைப்படம் இவை இரண்டும் இணைந்து காட்சியளிப்பதுதான் தொலைக்காட்சி ( Television ) ஆகும். வானொலிப்பெட்டியில் நமக்கு ஒலி எப்படிக் கிடைக்கிறதோ, அதேபோல் தொலைக் காட்சிப் பெட்டியின் மறையைத் திருகியவுடன் நமக்கு ஒலியோடு நிகழ்ச்சியும் ஒரே நேரத்தில் காட்சியளிக்கிறது.

ஒலி காற்றில் கலக்கப்பெற்று மீண்டும் அது வானொலி மூலம் திரும்பப் பெறுவது வானொலியாகும். இதேபோன்று ஒலியையும், நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளையும் புகைப்படமாக உருவாக்கி அவற்றைக் காற்றில் கலக்கச் செய்து அவை இரண்டையும் ஒருசேரப் பெற்றுத் தருவதுதான் தொலைக்காட்சி, விந்தைதான்!

இந்தத் தொலைக்காட்சியின் மூலமாக நாம் நாடகங்கள், நாட்டிய நிகழ்ச்சிகள் மட்டுமல்லாமல் நகரில் நடைபெறுகின்ற ஊர்வலங்கள், திருவிழாக் காட்சிகள், குதிரைப்பந்தயம், விளையாட்டுப்போட்டி போன்றவைகளையும் மற்றும் கல்வி சம்பந்தமான உரையாடல் நிகழ்ச்சிகள், போர்க்காலச் சம்பவங்கள் ஆகியவைகளையும் நேரில் கண்டு மகிழலாம். இத்தகு அரிய தொலைக் காட்சியினைக் கண்டுபிடித்த பெருமை 'விளாடிமிர் ஸ்வோரிகின்' என்னும் விஞ்ஞானியையே சாரும்.

மேலை நாடுகளில் பல்லாயிரக் கணக்கான தொலைக்காட்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன. அவை நாள்தோறும் பல கோடி மக்கள் கண்டுகளிக்கும் அளவிற்கு ஏராளமான நிகழ்ச்சிகளைக் காட்டி மகிழ்விக்கின்றன. நம் நாட்டில் தற்பொழுது டெல்லி, பம்பாய், கல்கத்தா போன்ற நகரங்களில் தொலைக்காட்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. அவை பற்பல நிகழ்ச்சிகளையும் ஒலிபரப்புகின்றன.

அங்குள்ளவர்களுக்கு மட்டுந்தானா இந்த வாய்ப்பு? நமக்கெல்லாம் கிடையாதா? என்று ஏங்கித் தவிக்கும் நம்மவர்களின் குறையைப் போக்கிடும் வண்ணம் விரைவில் சென்னை மாநகரில் தொலைக்காட்சி நிலையம் ஒன்று செயல்படவிருக்கிறது.

சென்னை நகரில் தொலைக் காட்சி நிலையம் செயல்படத் துவங்கி விட்டால் தொலைக் காட்சிப் பெட்டிகளின் தேவையும் எழுமல்லவா? எனவே, இவைகளைக் கருத்திற்கொண்டு தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் (TIDCO) நிதி உதவியுடனும், தனியார்துறையினரான திரு. ஓபுல்ரெட்டி மற்றும் அவர்களின் பங்குதாரர்களின் உதவியுடனும் தொலைக் காட்சிப் பெட்டிகள் தயாரிக்கும் கூட்டுநிறுவனமாக 'டைனவிஷன் லிமிடெட்' ( DYNAVISION LIMITED ) ஒன்று சென்னை அடையாற்றில் செயல்பட்டு வருகிறது.

இந்நிறுவனத்தினை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 9.1.75 அன்று துவக்கி வைத்தார்கள். தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் நிதி உதவியுடன் துவங்கப்பெற்றுள்ள முதல் கூட்டுத்துறை (JOINT SECTOR) இதுதான்! நம் நாட்டிலுள்ள தொலைக்காட்சிப் பெட்டிகள் தயாரான தொலைக்காட்சிப் பெட்டி பரிசோதிக்கப் படுகிறது.



தயாரிக்கும் மிகப்பெரிய நிறுவனங்களுள் ஒன்றான இது ஆண்டிற்கு 10,000 பெட்டிகள் தயாரிக்கின்ற இலக்கினைக் கொண்டதாகும். 96 இலட்ச ரூபாய் மதிப்பீடுள்ள இந்த மொத்தத் திட்டத்தில் ஆண்டு ஒன்றுக்கு 3 கோடி ரூபாய் மதிப்புக்குமேல் பொருட்களை உற்பத்தி செய்யவிருக்கிறது.

இந்நிறுவனத்தின் அதிகார பூர்வமான பங்கு ரூபாய் 25 இலட்சமாகும். 26 சதவிகிதம் தமிழ்நாடு தொழில்வளர்ச்சிக் கழகத்தாலும், 25 சதவிகிதம் தனியார் துறையினராலும் அளிக்கப்பட்டுள்ளன. மேலும் மாநில வங்கிகளின் கடனுதவியும் பெற்று வருகிறது.

தொலைக்காட்சிப் பெட்டிகளுக்குத் தேவையான சில பாகங்களை இவர்களே தயாரிக்கிறார்கள். சில பாகங்கள் டெல்லி, பம்பாய் போன்ற இடங்களிலிருந்து பெறப்படுகின்றன. முக்கியமான சில பாகங்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. படக்குழாய் (PICTURE TUBES) பாரத் மின் இயக்க நிறுவனத்திடமிருந்து (Bharath Electronic Limited) பெறப்பட்டு வருகின்றன. நிறுவனத்தின் முழுத் தேவையைப் பூர்த்தி செய்கின்ற அளவுக்கு இவை கிடைக்காததால் இவர்களே தயாரிக்கத் திட்டமிட்டுள்ளனர்.

வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்ற இந்நிறுவனத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கெனத் தமிழ்நாடு அரசு தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக அடையாறில் நான்கு ஏக்கர் நிலத்தினை ஒதுக்கியுள்ளது. கட்டடம் கட்டி முடிக்கும் வரை தற்பொழுதுள்ள கட்டடத்திலேயே பெட்டிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

இங்குத் தயாராகின்ற பெட்டிகள் நன்கு பரிசோதிக்கப்படுகின்றன. இதற்கென ஆய்வு மற்றும் வளர்ச்சித்துறை (Research and Development Department) இங்கே செயல்பட்டு வருகின்றது. இதனால் மற்றத் தயாரிப்புகளைவிட இது சிறந்து காட்சியளிக்கிறது. காலத்திற்கேற்ப வகை வகையான பெட்டிகளும் இங்குத் தயாராகின்றன. இதுவரை 6 வகைப் பெட்டிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. மேலும் இரண்டு வகைகள் தயாரிக்கப்படும்.

ஒரு தொலைக்காட்சிப் பெட்டியை உருவாக்க 12 மணி நேரம் ஆகிறது. சென்னையில் தொலைக்காட்சி நிலையம் செயல்படத் துவங்கியவுடன் மூன்று மணி நேரத்தில் ஒரு பெட்டியை உருவாக்குவார்கள். இப்பொழுது தயாராகின்ற பெட்டிகள் பம்பாய், டெல்லி போன்ற நகரங்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. இதுவரை 78 பெட்டிகள் அனுப்பப்பட்டுள்ளன.

தற்பொழுது ஒரு தொலைக்காட்சி பெட்டியின் குறைந்த விலை ரூ. 3,200. வரையிலுள்ளது. அதிகமான விலை ரூ. 4,000-க்கு மேற்பட்டுள்ளது. கறுப்பு வெள்ளை தொலைக் காட்சிப் பெட்டிகள் தான் இப்போது தயாராகின்றன. இந்தியாவில் இன்னும் வண்ணத் தொலைக்காட்சி செயல்படத் துவங்கவில்லை. செயல்படத் துவங்கினால் இங்கேயும் அந்தத் தொலைக் காட்சிப் பெட்டிகள் தயாரிக்கப்படும்.

தற்பொழுதுள்ள உலகப் போக்குக்கு ஏற்றவகையில் இங்குத் தயாரிக்கப்படும் பெட்டிகள் முற்றிலும் ஆற்றல் மிகு மின்விசைப்படுத்தப் பட்டவைகளால் (Fully Transistorised) செய்யப்பட்டதாகும். இதனால்குறைந்த செலவுள்ள சக்தியும் (Low Power Consumption), விரைந்த இயக்கமும் (Quick Operation), நீண்டகால உழைப்புச் சக்தியும் (Longer Life), சிறந்த ஒலியுடன் தரமான படமும் (Better Sound and Picture Quality) போன்ற சில பயன்கள் நமக்குக் கிடைக்கின்றன.



இணைப்புப் பணியில்...

குறைந்த விலையிலுள்ள சாதனங்களையும் அதே நேரத்தில் வலுவுள்ள பொருட்களையும் கொண்டு தொலைக்காட்சிப் பெட்டிகளைத் தயாரிப்பது இந்நிறுவனத்தின் நோக்கமாகும். இதனால் நடுத்தர வருமானமுள்ளவர்கள் பயன்படுத்துகின்ற வகையிலும் இந்நிறுவனம் தொலைக்காட்சிப் பெட்டிகளைக் குறைந்த விலையில் தயாரித்துத் தரும்.

சென்னை மாநகரில் தொலைக்காட்சி நிலையம் துவக்கியபிறகு நாம் அனைவரும் நாடகங்கள், நாட்டிய, இசை நிகழ்ச்சிகள், சொற்பொழிவுகள், விண்வெளி வீரர்களின் சாகசங்கள் போன்றவற்றைக் கண்டு களிக்கும் வாய்ப்பினைப் பெற்று மகிழலாம்.

நம்முடைய முன்னோர்கள் கண்டு கேட்டிராத தொலைக்காட்சியானது, நம்முடைய காலத்தில் கிடைத்துள்ளது ஒரு அரிய வாய்ப்பாகும்.

அறிவியல் வல்லுநர்களின் இடைவிடாத ஆராய்ச்சிகளின் பயனாக உருப்பெற்றுள்ள இந்தத் தொலைக்காட்சி, மனித இனத்திற்குக் கிடைத்துள்ள மாபெரும் வரப்பிரசாதம் என்றால் அது மிகையாகாது!

- ஆயிரம்.

விற்பனைக்குத் தயாராக உள்ள தொலைக்காட்சிப் பெட்டிகள்



# மேலான நாள்

## கவிஞர் கருணானந்தம்

மேலான நாளிதுதான் திருநாளென்று
மேதினியில் தொழிலாளர் விழாவெ டுப்பர்
ஆலாக இவ்வியக்கம் தழைப்ப தற்கே
அமெரிக்கர் செங்குருதி பாய்ச்சி ஞராம்!
நூலாலே முதியரான தமிழர் நாட்டில்
நூருண்டாய்க் காணுத புரட்சி யெல்லாம்
பாலாகித், தேனுகிப், பருகி இன்பப்
பயனுகித் துய்த்திடவே வகைகள் கண்டோம்!

உழுவானே உலகத்தில் மேலோன் என்றே
ஒப்பரிய குறள்தந்தான் உரைத்துச் சென்ருன்
தொழுவானுய், அழுவானுய்ப், பண்ணை யாளாய்த்
தொழுவத்து மாடாகக் கால மெல்லாம்
விழுவானுய், அழிவானுய்க், குந்து தற்கோர்
வீடற்று, நிலமற்று வீணுய் வாழ்வோன்—
எழுவானே என்றிருந்த ஐயம் போக்கி,
ஈடற்ற மேம்பாடு தந்தோம்; இன்று!

கூலிக்கும் வரம்புகளை நிர்ண யித்தோம்;
குத்தகையால் பிழைத்தோரைப் பாது காத்தோம்!
கேலிக்குப் பொருளான கலப்புச் சாதி
கிளைப்பதற்கும் ஊக்கமாகப் பதக்கம் தந்தோம்!
வேலிக்கும் வெளிப்புறத்தில் வாடி யோர்க்கு
விதவிதமாய் வசதியுடன் வீடு கண்டோம்!
போலிக்கும் உண்மைக்கும் மாறு பாட்டைப்
புரியவைக்க வகுப்புவாரி அலுவல் ஈந்தோம்!

தறியாளர் துயர்துடைக்க உறுதி யான
தக்கவழி மேற்கொண்டோம்! இதுநாள் எண்ணி
அறியாத விற்பனையைப் பெருக்கி விட்டோம்!
ஆலைவாழ் உழைப்பாளர் நிலைமை போற்றல்
குறியாக ஈடுபட்டோம்! முதலைப் போட்டோர்
குடிகெடுக்க நினைத்திட்டால் துடித்தெ ழுந்தோம்!
வெறியாடும் சுயநலத்தார் சூது மாய்த்து
வெற்றிபெறப் பாட்டாளிக் குதவி வந்தோம்!



முத்து



முதலாளி உற்பத்தி தொடங்கு கின்ருர்;
முன்னேற்றுந் தொழிலாளி பின்செல் கின்ருர்!
முதலாலே இலாபத்தை ஈட்டும் போதே
முழுவதுமே தமக்கென்று சுருட்டிக் கொள்வார்
பதமாகக் கேட்குங்கால், பயந்து கொண்டு
பத்திரமாய்ப் பூட்டிவிட்டே ஓடு வார்கள்!
அதனுலே பேருந்து வழித்த டங்கள்
அரசுடைமை ஆக்கி,பல நன்மை செய்தோம்!

உழைப்பவர்க்கும் முதலீட்டில் பங்கும், ஆங்கே
ஓட்டுகின்ற நிர்வாகப் பொறுப்புந் தந்தால்—
தழைப்பதற்குத் தடையேது அத்தொ ழில்தான்?
தன்னலமும் முன்னேங்கி நிற்ப தாலே—
பிழைப்பதனைப் பெருங்கடமை உரிமை யாக்கிப்
பிறழாது நேர்த்தடத்தில் நடப்பா ரன்ருே?
மழைப்பயனே மறந்திருக்கும் நாளில் இங்கு
மகத்தான பணிபுரியுந் தொழிலோர் வாழ்க!



நள்ளிரவு!

அந்த மாடி வீடு அமைதியில் ஆழ்ந்திருக்கிறது.

ஐந்து பேர் சுற்றும் முற்றும் பார்த்த வண்ணம் அந்த வீட்டை நோக்கி வருகின்றனர் ஒவ்வொருவராக மதிற்சுவரைத் தாண்டி உள்ளே குதிக்கின்றனர். ஒருவர்பின் ஒருவராகக் கழிநீர்க் குழாயைப் பிடித்துக் கொண்டு மொட்டை மாடிக்குச் செல்கின்றனர்.

வீட்டுக்காரர் மாடியில் ஒரு அறையில் நன்றாகத் தூங்கிக் கொண்டிருக்கிறார்.

மொட்டை மாடியிலிருந்து அந்த அறைக்குச் செல்லவேண்டும். முதலில் ஒருவன் சாமர்த்தியமாகக் கீழிறங்கி அந்த இடத்திற்கு வருகிறான். அதைப் போல மற்றவர்களும் வருகின்றனர்.

வீட்டுக்காரர் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருக்கிறார். படுக்கை அறைக்குள் ஐவரும் ஓசைபடாமல் நுழைகின்றனர்!

ஒருவன் சால்வையை எடுத்து இன்னொருவனிடம் கொடுக்கிறான். இன்னொருவன் அதை எடுத்து தூங்கிக் கொண்டிருப்பவரின் முகத்தை நன்றாக மூடிக் கழுத்தை நெறிக்கிறான். மற்றவர்கள்?

ஒருவன் கால்களை நன்றாகக் கட்டுகிறான்; இன்னொருவன் கைகளைக் கட்டுகிறான். உடல் இப்படியும் அப்படியும் அசைகிறது. ஒரு சில நிமிடங்களில் ஆளைத் தீர்த்துக் கட்டி விடுகிறார்கள்!

உடனே அடுத்த வேலை ஆரம்பமாகிறது! அலமாரிகளைத் துழாவுகின்றனர். நகைகளும், கத்தை ரூபாய் நோட்டுகளும் கைக்கு வருகின்றன.

மீண்டும் மொட்டை மாடிக்கே வருகின்றனர். வட்டமாக உட்கார்ந்து கொண்டு பணத்தைப் பங்கிட்டுக் கொள்கின்றனர்.





கீழே பிணம், மேலே பங்கு!

கொலையை நேரில் பார்க்கிறோம்; நம் மெய் சிலிர்க்கிறது!

'என்ன கொலையை நேரில் பார்த்தீர்களா?'

'ஆமாம். டெலிவிஷனில்!'

'டெலிவிஷனிலா?'

'ஆமாம். சென்னை எழும்பூர் காவல்துறை ஆணையாளர் அலுவலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த களவு போன பொருள்கள் கண்காட்சியில்தான், இந்தக் கொலையை டெலிவிஷனில் காட்டுகிறார்கள்'

மேற்கண்ட குற்றவாளிகள் இளைஞர்கள். இவர்களில் ஒருவனுக்குப் பதினைந்து வயதே ஆகிறது! அண்மையில் சென்னையில் நடந்த இந்தக் கொலை வழக்குத் தீர்ப்பில் ஒருவரைத் தவிர மற்ற நான்கு பேருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது.

காட்சியில் கொலை நடந்த வீட்டின் மாதிரியும் வைக்கப்பட்டிருக்கிறது.

கடந்த ஓராண்டில் சென்னை நகரில் நடந்த பல திருட்டுகளில், காவல்துறையினரால் கண்டுபிடிக்கப்பட்ட பொருள்கள் இந்தக் கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ளன.

''தமிழ்நாடு காவல்துறையின் பணிகள் நாளுக்கு நாள் சிறப்புப் பெற்றுத் திகழ்கின்றன என்பதற்கு இந்தக் காட்சிக்கூடம் ஒரு உதாரணமல்லவா?''

—என்று தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இக்கண்காட்சியை மார்ச் 31ஆம் நாளன்று துவக்கி வைத்துத் தம் கருத்தினைத் தெரிவித்துள்ளார்கள்.

தமிழக ஆளுநர் அவர்களும், சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் இக்கண்காட்சியைப் பார்வையிட்டுத் தமிழகக் காவல்துறையின் திறமையைப் பாராட்டியுள்ளார்கள்.

கண்காட்சிக்குள்ளே பார்வையைச் சுழல விடுகிறோம்.

பல்வேறு இடங்களில் களவாடப்பட்ட கடவுளர் சிலைகள், பழைய ஆராய்ச்சி மணி ஆகியவற்றைப் பார்க்கிறோம்.

இரவுக் கொள்ளைக்காரர்கள் பகல் கொள்ளைக்காரர்களின் 'திருவுருவ'ப் படங்கள் நமக்குத் 'தரிசனம்' தருகின்றன.

ஒரு கண்ணாடிப் பெட்டியில், கத்தை கத்தையாகக் கள்ள ரூபாய் நோட்டுக்கள் வைக்கப்பட்டுள்ளன.

நாமென்ன நகைக் கடைக்குள் வந்து விட்டோமா?

கண்ணைக் கவரும் பொன், வெள்ளி, வைர நகைகள் எத்தனை எத்தனை காட்சியளிக்கின்றன, இங்கே!

மேலே செல்கிறோம். விலை உயர்ந்த வண்ணப் புடவைகள் அடுக்கி வைக்கப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம்.

இவையன்றி டிரான்சிஸ்டர்கள், தட்டச்சுப் பொறிகள், கடிகாரங்கள், வெள்ளி, பித்தளைச் சாமான்கள், மின்விசிறிகள் முதலான பொருள்களும் இடம் பெற்றுள்ளன.

இந்தப் பொருள்களெல்லாம் கள்வனின் 'கைவரிசை'யைக் காட்டுவனவாக இருக்கின்றன. ஒவ்வொரு பொருளிலும் ஒரு கதையே அடங்கியிருக்கும் போலும்!

விஷ ஊசிக்காரர்களின் புகைப்படங்கள், இன்ஸ்பெக்டர் போல நடித்து மோசடி செய்தவரின் புகைப்படம், சென்னையில் போலிப் பயண அனுமதிச்சீட்டு பயன்படுத்தி மோசடி செய்த ஜெர்ரி லாயிட் என்ற வெளிநாட்டுக்காரரின் புகைப்படம் ஆகியவை இடம்பெற்றுள்ளன. கள்ள இருபது ரூபாய்நோட்டு இயந்திரமும், நடுக்கடலில் கள்வர்கள் களவாடிய பொருள்களும்கூட இங்கே இருக்கின்றன.

நகரில் நடக்கும் ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள், கிரிக்கெட் டெஸ்ட் போன்ற நிகழ்ச்சிகளின்போது காவலர்கள் செயல்படும் முறையை விளக்கும் படங்களையும் நாம் பார்க்கிறோம்.

கார்களைத் திருடி விற்கும் கூட்டத்தினரையும், வழிப்பறி செய்வோரையும் நாம் பார்க்கிறோம், புகைப்படங்களில்!

சந்தனக்கட்டைகள் கடத்திய காரும், வழிப்பறி செய்யப் பயன்படுத்திய டாக்சியும், களவு போன சைக்கிள்களும் இங்கே வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

''இந்தப் பொருள்களுக்கு உரிமையாளர்கள் யார்?''

இந்த வாசகம் பொறிக்கப்பட்ட தனிப்பிரிவு ஒன்றும் காட்சி தருகிறது. இங்கே நகை முதலான இழந்த பொருள்கள் ஏராளமாக வைக்கப்பட்டுள்ளன.

கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ள பொருள்களின் மொத்த மதிப்பு ரூ. 35 இலட்சமாகும்.

தமிழ்நாடு காவல்துறையின் தனித்திறமையை, சாதனையை எடுத்துக்காட்டும் வகையில் இந்தக் கண்காட்சி அமைந்திருக்கிறது.

இந்தியாவிலேயே தமிழ்நாட்டுக் காவல் துறைக்குத் தனிச்சிறப்பு உண்டு. காவலர் சம்பந்தமான பல்வேறு போட்டிகளில் தமிழகம் முன்னணியில் இருந்து வருவது இதனை நமக்கு நன்கு உணர்த்தும். துப்புத் துலக்குவதில் பெரும் புகழும் பெற்றுத் திகழும் தமிழ்நாடு காவல்துறையின் சாதனை சரித்திரத்தில் இடம் பெறத்தக்கவை என்றால் அது மிகையாகாது!

—பி. வி. ஜி.

# பனைப் பொருள்கள் வாழ்வளிக்கும் செல்வங்கள்

பனையின் எல்லாப் பாகங்களுமே நமக்குப் பயனளிப்பன.
துப்புரவிற்குப் பயன்படும் பனந்தும்பு பிரஷ்கள் —
எழில்மிக்க பனை ஓலைப் பொருள்கள் —
இனிப்பான பனஞ்சீனி, பனைவெல்லம், பனங்கற்கண்டு,
சாக்கலேட்டுகள், ஜாம், பழரசங்கள் முதலியன —
கோடையில் உவப்பூட்டும் பதனீர்,
'பாமோ குளிர் பானங்கள் அனைத்துமே
எங்கள் தயாரிப்புகள்—





# பதநீர் பருகுவோம்



சத்துணவுப் பட்டியலில் இடம் பெற்றிருக்கும் சுவை நீர் பதநீர் ஆகும். பதநீர் அருந்தி வந்தால், கண்நோய் வருவதில்லை என்று கண் மருத்துவர்கள் எல்லாம் சொல்லி வருகிறார்கள். அதனால்தான் தமிழ்நாடு, கதர் கிராமத் தொழில் வாரியம் பதநீர் விற்பனையை அதிகரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

சென்னையில், மாதவரம், வண்ணாரப் பேட்டை, எழும்பூர் ஆகிய மூன்று இடங்களில் பதநீர் பதனப்படுத்தும் நிலையங்கள் உள்ளன. சென்னையின் அருகில் உள்ள கிராமங்களிலிருந்து பதநீர் இறக்கப்பட்டு, இந்த நிலையங்களுக்குக் கொண்டு வரப்படுகிறது. இங்கே வடிகட்டப்பட்டு, குளிர்பதன இயந்திரத்தின் உள்ளே ஊற்றப்படுகிறது. ஏறக்குறைய இரண்டரை மணி நேரத்தில் பதநீர் குளிர்ச்சி பெறுகிறது. அதன்பின் பாலிதீன் பாட்டில்களில் அடைக்கப்பட்டு விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. குளிர்பதன இயந்திரத்திலிருந்து வெளி வந்துள்ள பதநீர் ஏறக்குறைய 4 மணி நேரத்திற்குக் குளிர்ச்சி குறையாமல் இருக்கிறது. வெளியில் விற்பனை நிலையங்களில் அவை ஐஸ் பெட்டியில் வைக்கப்பெற்றால் ஏறக்குறைய 6 மணி நேரம் குளிர்ச்சியுடன் திகழ்கிறது.



ஒவ்வொரு நிலையத்திலும் நாளொன்றுக்கு 6,000 பாட்டில் பதநீர் தயாராகிறது. ஜனவரி மாதக் கடைசியிலிருந்து ஜூலை 15 வரை இந்தப் பதநீர் விற்பனைக்கு நல்ல சீசன். மார்ச் ஏப்ரல்



மாதங்களில் நாளொன்றுக்கு 10 ஆயிரம் பாட்டில் தயாராகிறது.

நகரத்திலுள்ள பால் விற்பனை நிலையங்களில் காலை 7 மணியிலிருந்து பிற்பகல் 3 மணிவரை - (அதாவது பால் விற்பனை இல்லாத நேரங்களில்) பதநீர் விற்பனை செய்யப்படுகிறது. கதர்-கிராமக் கைத்தொழில் வாரியத்தின் ஊழியர்கள் இந்தப் பணியைச் செய்கிறார்கள். விற்பனை நிலையத்தைப் பயன்படுத்திக் கொள்வதற்குரிய வாடகை பால் வள நிறுவனத்துக்குக் கொடுக்கப்படுகிறது.

திருவல்லிக்கேணி, அண்ணா சாலை, புரசைவாக்கம், தியாகராயநகர், சௌகார்பேட்டை, புதுப்பேட்டை, விவேகானந்தர் இல்லம், லஸ், சேப்பாக்கம், கோடம்பாக்கம், கிண்டித் தொழிற்பேட்டை ஆக மொத்தம் 11 இடங்களில் உள்ள பால் விற்பனை நிலையங்கள் பதநீர் விற்பனை நிலையங்களாகப் பயன்படுகின்றன.

இவை தவிர, தலைமைச் செயலகம், சர்வோதய சங்கம், துறைமுக அலுவலகம், ஆகிய பகுதிகளில் பதநீர் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அண்ணாசாலையிலுள்ள காதி கிராமோத்யோக் பவனிலும் பதநீர் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

அண்ணாசாலையிலுள்ள காதி-கிராபட் கிளையின் அருகில் பதநீர் விற்பனை நிலையம் ஒன்று சிறிய அளவில் அமைக்கப்பட்டுள்ளது. இங்கே நாள் தோறும் பதநீர் அருந்துவதற்கு நிறையப் பேர் வருகிறார்கள்.

மூன்று சக்கர வண்டிகள் மூலமாகவும்; வேன்களின் மூலமாகவும் பதநீர் விற்பனை செய்யப்படுகிறது. வேன்கள் பெரும் பெரும் தொழிற்சாலைகள் இருக்கும் பகுதிக்கு நாள் தோறும் அனுப்பப்படுகின்றன. குறிப்பாக பக்கிங்காம் கர்னாடிக் ஆலை, இரயில் பெட்டித் தொழிற்சாலை முதலிய பகுதிகளுக்கு வேன்கள் செல்கின்றன. பதநீர் வேன்களைப் பார்த்தவுடன் போட்டிப் போட்டுக்கொண்டு ஓடி வந்து, பதநீரை வாங்கிச் சுவைத்து மகிழும் தொழிலாளர்கள் ஏராளம், ஏராளம். 40 காசு கொடுத்துக் காபியையோ, தேநீரையோ பருகுவதைவிட, வெய்யிற்காலத்தில் 25 காசு கொடுத்துப் பதநீரைப் பருகுவது மேலானது என்பது மட்டுமல்ல-உடல் நலத்துக்கு உகந்தது என்பதையும் நாம் மறக்கக்கூடாது. விலை மலிவு என்பதால் பொருள்களின் தரமும் மலிவானது என்று கருதிவிட வேண்டாம்.

கிராமங்களில் பனைத்தோப்புக்குச் சென்று காத்திருந்து பதநீர் வாங்குவார்கள்; இன்று பட்டணத்தில் நாமிருக்கும் பகுதியை நாடி வருகின்றன பதநீர் விற்பனை வண்டிகள்! வாங்கிப் பருகி, உடல் நலத்தைப் பேணிக் கொள்வது மக்களின் கடமை என்று எடுத்துச் சொல்வது தவறாகாது!

-த. பி.



# கோழிக்குஞ்சுகளை எங்கிருந்து பெறலாம்?

கோழிப்பண்ணை இலாபகரமாக இயங்க வேண்டுமானால், தரமான கோழிக் குஞ்சுகளையே வாங்கி வளர்க்க வேண்டும். அதிகமான முட்டைகளைப் பெற்று அதிக அளவில் வருவாய் பெற விரும்பினால் பின் கண்ட உயர்இன ரகங்களையோ (Pure line) அல்லது கலப்பின வீரிய ரகங்களையோ (Hybrid) வாங்கி வளர்ப்பதே சிறந்தது.

### உயர் இன ரகங்கள்

1. வெள்ளை லெக்கார்ன்.
2. மேயர் (எம். லைன்).
3. ஆஸ்டரலாப்.
4. விக்டோரியா.

### கலப்பின் வீரிய ரகங்கள்

1. ஆர்பரேக்கர்ஸ்.
2. யூனி சிக்ஸ்.
3. ஹை லைன்.
4. ராணி சேவர்ஸ்.
5. யூனி புரோ.
6. பாப்காக்ஸ்.
7. தான் பெர்.

மேற்கூறிய உயர் இன ரகங்களின் தரமான குஞ்சுகளை காட்டுப்பாக்கம் (செங்கற்பட்டு மாவட்டம்), ஒசூர் (தருமபுரி மாவட்டம்), கப்பலூர்(மதுரை மாவட்டம்) ஆகிய 3 இடங்களிலும் உள்ள கோழிக்குஞ்சு பொறிப்பு நிலையங்களிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

### கோழிக்குஞ்சுகள் கிடைக்குமிடம்

| கிடைக்கும் ரகம் | முகவரி |
|---|---|
| வெள்ளை லெக்கார்ன், எம். லைன், ஆஸ்ட்ரலாப், விக்டோரியா. | கணகாணிப்பாளர், கோழிப்பண்ணை, காட்டுப்பாக்கம், காட்டாங் கொளத்தூர் அஞ்சல, செங்கற்பட்டு மாவட்டம். |
| வெள்ளை லெக்கார்ன் | கண்காணிப்பாளர், கோழிக்குஞ்சு பொறிப்புக்கூடம், கப்பலூர் (அஞ்சல்)., மதுரை மாவட்டம். |
| வெள்ளை லெக்கார்ன், எம். லைன், ஆஸ்ட்ரலாப். | கண்காணிப்பாளர், மாவட்டக் கால்நடை பண்ணை, ஒசூர் (அஞ்சல்), தருமபுரி மாவட்டம். |
| 'ஹை-லைன்' | இராமு சகோதரர்கள் கோழிப்பண்ணை, மேட்டுப்பாளையம் ரோடு, கோவை-17 அல்லது இராமு சகோதரர்கள். 41, வெள்ளனூர், ஆவடி அஞ்சல், சென்னை-54. |
| 'ஆர்பர் ஏக்கர்' | உதய சூரியன் கேட்சரீஸ், 1-பி முதலாவது முக்கிய சாலை, சி. ஐ. டி. நகர், சென்னை-35. |
| 'இராணி சேவர்ஸ்' | சிக்ஸ் இந்தியா கோழிப்பண்ணை அலுவலகம், 10, பீச் ரோடு, கடலூர்-1. |
| 'யூனிசிக்ஸ்' | ஐவரி பண்ணை, 18-ஏ, சுத்தானந்த பாரதி தெரு, கணபதி புரம், தாம்பரம், சென்னை-45. |
| கலப்பின வீரிய ரகங்கள் | வாணன் கோழிப்பண்ணை, 9, ரண்டல்ஸ் ரோடு, வேப்பேரி, சென்னை-7. |

எக்காரணம் கொண்டும் தெருவில் விற்கும் சிறு கோழிக் குஞ்சுகளை வாங்க வேண்டாம். அவ்வாறு விற்கப்படும் குஞ்சுகள் ஆண் கோழிக் குஞ்சுகளே என்பதை மறந்து விட வேண்டாம்!

கலப்பின வீரிய ரகங்களின் தரமான குஞ்சுகளைத் தனியார் கோழிப்பண்ணைகளில் இருந்து வாங்கிக் கொள்ளலாம். உங்களுக்குத் தேவையான ரகங்களின் தரமான கோழிக் குஞ்சுகளைப் பின்கண்ட முகவரிகளில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

கிராமப்புறங்களில் கோழிப் பண்ணை வைக்க விரும்புகின்றவர்கள், ஊராட்சி ஒன்றிய கால்நடை விரிவாக்க அலுவலர் மூலம் தரமான உயர்இனக் கோழிக்குஞ்சுகளைப் பெறலாம். கலப்பின ரகங்களை வளர்க்க விரும்பினால், மேற்கூறப்பட்டுள்ள தனியார் நிறுவனங்களுக்கு எழுதி, விவரம் அறிந்து முன்பணம் அனுப்பி கோழிக் குஞ்சுகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

## முட்டை ஒரு சைவ உணவே !

பால், பசுவிலிருந்து கிடைக்கும் உணவுப் பொருளாகையால் முற்றிலும் சைவ உணவில் அதனைச் சேர்த்துக் கொள்ள இயலாது. இறைச்சியினுடைய சத்து பாலில் ஓரளவு இருக்கிறது. மருத்துவ ரீதியாக இதனை அசைவ உணவு எனக் குறிப்பிட்டுள்ளனர்.

இதற்கு மாருக முட்டையோ, ஒரு அசைவ உணவாக கருதப்படுகிறது. ஆனால் உண்மையில் அது சரியில்ல. தற்பொழுது கருவளர்ச்சிக்கு வாய்ப்பு இல்லாது முட்டைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. பெட்டைக் கோழி, சேவலையே பார்க்க வாய்ப்பு அளிக்கப்படாமல் முட்டை இடுகிறது. இந்த முட்டைகள் குஞ்சுகள் பொரிக்கும் தன்மை அற்றவை. ஆகையால் பால் உண்பவர்கள் முட்டையையும் உண்பதற்கு எவ்வித மான மறுப்பும் இருக்க முடியாது.

*காந்தியடிகள்*



## நிறைய முட்டையிடும் பெட்டைதனைத் தேர்ந்தெடுப்பது எப்படி ?

1. கொண்டையும், தாடியும், சிவந்து செழித்து வழவழப்பாய் பிரகாசமாக இருக்கவேண்டும்.

2. கனையோடு, ஒளிவீசும் கண்கள் பெற்றிருக்கவேண்டும்.

3. காது, வழவழப்பாய் பருத்து மென்மையோடு இருக்க வேண்டும்.

4. அகலமான ஆழ்ந்த அமைப்புள்ள உடம்பும், நேரான, பரந்த மார்புக்கூடும் இருக்க வேண்டும்.

5. மெதுவான, கொழுப்பில்லாத, குறைந்தது இரண்டு விரல் இடைவெளியுடைய இடை எலும்பு இருக்கவேண்டும்.

6. வயிறு, 4 விரலிடைக்கு குறையாததாயும், மிருவாயும் இருக்கவேண்டும்.

7. ஆசனம் பெரிதாயும், ஈரப்பசையுடனும், முட்டை வடிவமானதாயும் இருக்கவேண்டும்.

8. தோல் மிருதுவாயும், உடலோடு ஒட்டிக் கொள்ளாமலும் இருக்கவேண்டும்.

## ஆழ்குப்பை அமோக விளைச்சல் தரும்!

ஒரு டன் ஆழ்குப்பை (டீப்லிட்டர்) எருவில் கீழ்க்கண்ட அளவு சத்துக்கள் உள்ளன.

1. அம்மோனியம் சல்பேட்..... 300-325 ராத்தல்
2. சூப்பர் பாஸ்பேட்......... 250-300 ராத்தல்
3. பொட்டாஷ்.............. 100 ராத்தல்
4. மெக்னீஷியம்............ 15 ராத்தல்
5. சோடியம்............... 15 ராத்தல்
6. கால்சியம்.............. 60 ராத்தல்

எனவே ஆழ்குப்பை எருவிட்டு வேளாண்மை உற்பத்தியை மும்மடங்காகப் பெருக்கிடலாம்!

## உறைந்த, குளிர் பதனப்படுத்தப்பட்ட விந்து

நல்ல வம்சா வழியைக் கொண்டுள்ள காளைகளின் விந்துவை, அவைகள் இறந்த பிறகும், பல ஆண்டுகளுக்கு உபயோகப்படுத்த, இம்முறை பயன்படுகிறது. காளைகள் நல்ல நிலையில் இருக்கும்பொழுதே விந்துவைச் சேகரித்து, அதனுடன் சில திரவப் பொருட்களைக் கலந்து, அவ்விந்துவை 190 டிகிரி சென்டிகிரேடு வரையிலும் நைட்ரஜன் திரவத்தில் (Liquid Nitrogen) உறைய வைப்பதே இம்முறையாகும். அப்படி உறைய வைத்துவிட்டால், இவ்விந்து கட்டியாகப் போய், அவைகளில் இருக்கும் உயிர் அணுக்களின் சலனம் கட்டுப்படுத்தப்பட்டு, இவ்வணுக்கள் பல ஆண்டுகள் உயிருடனிருக்கும். இவ்விந்துவைச் சிறிய குழாய்களில் அடைத்து அவைகளை சுமார் 7 ஆண்டு வரையில் நல்ல நிலையில் பாதுகாக்கலாம்.

கால்நடை அபிவிருத்தியில் மேற்படி முறை மேலைநாடுகள் அனைத்திலும் அதிகமாகக் கையாளப்பட்டு, ஒவ்வொரு நல்ல இனத்திலும், பாதுகாப்புப் பெற்ற காளைகளின் சந்ததிகள் உருவாகியிருக்கின்றன. தமிழ் நாட்டில் இம்முறையைப் பரப்புவதற்கு ஏற்பாடுகள் தீவிரமாக நடந்து வருகின்றன.

# மறவாதீர்கள்;

# உங்கள் மகள் ஒருநாள்

# மணமகளாக அமர வேண்டியவள்!

திருமணம் என்றாலே - அதுவும் உங்களது மகளின் திருமணம் என்றால் — செலவுதான். அதற்கென இன்றே சேமிக்கத் துவங்கினால் எதிர்காலத்தில் எந்த செலவையும் சமாளிக்க இயலும். உங்கள் சேமிப்புத் தொகை உங்களுக்கு தக்க சமயத்தில் கைகொடுத்துதவும்.

பல சிறப்பு அம்சங்களுடன் உங்களுக்கென இரு சேமிப்பு திட்டங்களை நாங்கள் வழங்குகின்றோம். மாதச் சேமிப்புத் திட்டத்தின்படி ரூ. 20,000/- வரை டிபாசிட்டுகள் வரி விதிப்பின்றி ஏற்றுக்கொள்ளப்படும். ரெக்கரிங் டிபாசிட் திட்டத்தின் கீழ் ஒரு சிறப்புச் சலுகை அளிக்கப்படுகிறது — இதன் கீழ் கணக்குத் துவக்கியவர்கள் திடீரென மரணமடைந்தால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்கவேண்டிய தொகை முழுதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்த இரு திட்டங்களுக்கும் உங்களது சேமிப்புத் தொகையை உங்களது சம்பளப் பட்டியல் மூலம் மாதாமாதம் பிடித்துக்கொள்ள செய்யலாம். தற்போது அஞ்சலக சேமிப்புகளுக்கு அதிக வட்டி அளிக்கப்படுகிறது. அஞ்சலக காலவரை வைப்புத் திட்டங்களுக்கு 10% வட்டி அளிக்கப்படுகிறது.

இதோ சில முக்கிய விவரங்கள்

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது | 10 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| ரெக்கரிங் டிபாசிட் | 5/- | 375/- | ... |
| | 10/- | 750/- | ... |
| வளரும் மாதச் சேமிப்பு | 5/- | ... | 825/- |
| | 10/- | ... | 1,650/- |



இயக்குநர், சிறு சேமிப்புத் துறை, தமிழ் நாடு அரசு, சென்னை-600 002

# கோழிக்கு என்ன தீனி கொடுத்திட வேண்டும்?




**கோ**ழிப் பண்ணையில் எதிர்பார்க்கும் அளவுக்கு இலாபம் பெற விரும்பினுல், கோழிக்குச் சத்துள்ளத் தீனி கொடுத்து வளர்க்க வேண்டும். கோழிப் பண்ணைக்கு ஆகும் மொத்தச் செலவில் 60 சதவீதம் அளவுக்கு கோழித் தீனிக்கு ஒதுக்கினுல்தான் அதிக முட்டைகளைப் பெற்று அதிக இலாபம் பெற முடியும்.

கோழிகளுக்கான சத்துள்ள தீனி அரசினர் கோழித் தீனி உற்பத்தி நிலையங்களில் உற்பத்தி செய்யப்பட்டு, கார்டுகளின் மூலம் வழங்கப்படுகிறது. மேலும் சில தனியார் நிறுவனங்களும் கோழித் தீனிகளைத் தயாரித்து விற்பனை செய்து வருகின்றன.

மேற்கூறிய தீனிகளை வாங்கிட வசதியில்லாதவர்கள், தாங்களாகவே சொந்தமாகத் தீனியைத் தயாரித்துக் கொள்ளலாம். குஞ்சுகளுக்கும் பெரிய கோழிகளுக்கும் தனித் தனியே தீனி தயாரிக்கப்பட வேண்டும். கோழிக் குஞ்சுகளின் தீனியில் 22 சதப் புரதச் சத்தும், முட்டையிடும் பெரிய கோழித் தீனியில் 16 சதப் புரதச் சத்தும் இருக்குமாறு தயாரிக்க வேண்டும்.

கோழிக் குஞ்சுகளுக்கும், முட்டையிடும் பெரிய கோழிகளுக்கும் பின்கண்டவாறு தீனி தயாரிக்க வேண்டும்:

**மாதிரி கலவைத் தீனி**

| தீனியில் சேர்க்க வேண்டிய பொருள்கள் | கோழிக் குஞ்சுகளின் தீனியில் சேர்க்க வேண்டிய அளவு (பாகம்) | பெரிய கோழிகளின் தீனியில் சேர்க்க வேண்டிய அளவு (பாகம்) |
|---|---|---|
| மக்காச் சோளம் (சோளம் அல்லது கேழ்வரகையும் பயன்படுத்தலாம்) | 45 | 55 |
| கோதுமைத் தவிடு அல்லது அரிசித் தவிடு | 18 | 15 |
| கடலைப் பிண்ணுக்கு | 25 | 20 |
| மீன் தூள் | 10 | 8 |
| தாது உப்பு | 2 | 2 |
| வைட்டமின் கலவை (100 கிலோவிற்கு) | 25 கிராம் | 25கிராம் |
| 'எம்பசின்' (100 கிலோவிற்கு) | 50 கிராம் | 50கிராம் |
| மொத்தம் | 100 | 100 |

வைட்டமின் கலவையை வாங்குவதற்கு ''ரோவிமிக்ஸ்' என்னும் வைட்டமின் கலவையைப்பின் கண்ட நிறுவனத்தில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

ரோஷ் பிராடக்ட்ஸ் லிமிடெட்,
28, டார்டெஸ் ரோடு,
பம்பாய்—34.

'எம்பசின்' என்னும் நோய்த்தடுப்பு மருந்தை பின்கண்ட முகவரியில் இருந்து வாங்கலாம்.

மே. அண்ட் பேகர் இந்தியா பிரைவேட் லிமிடெட்,
அஞ்சல் பெட்டி எண். 693,
பம்பாய்.

வைட்டமின் கலவையையும், 'எம்பசின்' மருந்தையும் முதலில் 1 கிலோ தீனியில் நன்ருகக் கலந்து, பின் இரண்டு கிலோ தீனியுடன் கலந்து, பின் படிப்படியாக எல்லாத் தீவனக் கலவையிலும் நன்ருகக் கலக்கும்படி செய்ய வேண்டும்.

இவ்வாறு தயாரிக்கப்பட்ட தீனியையும், தண்ணீரையும் பின்கண்ட அளவில் கோழிகளுக்குக் கொடுத்து வளர்க்க வேண்டும்.

## 100 கோழிகளுக்குத் தேவையான தீனியும், தண்ணீரும்.

| கோழிகளின் வயது (வாரம்) | ஒரு வாரத்திற்குத் தேவையானத் தீனி (கிலோ) | அன்றாடம் தேவைப் படும் தண்ணீர் (லிட்டர்) |
|---|---|---|
| 1 | 7 | 2.0 |
| 2 | 13 | 3.5 |
| 3 | 19 | 5.5 |
| 4 | 26 | 7.0 |
| 5 | 32 | 9.0 |
| 6 | 40 | 11.0 |
| 7 | 45 | 13.0 |
| 8 | 48 | 15.0 |
| 9 | 50 | 17.0 |
| 10 | 52 | 19.0 |
| 11 | 55 | 21.0 |
| 12 | 57 | 23.0 |
| 13 | 59 | 25.0 |
| 14 | 63 | 27.0 |
| 15 | 65 | 29.0 |
| 16 | 67 | 29.0 |
| 17 | 77 | 29.0 |
| 18 | 77 | 29.0 |
| 19 | 77 | 29.0 |
| 20 | 77 | 29.0 |

மேற்கூறிய அளவில் சத்துள்ள தீனியையும், நல்ல தண்ணீரையும் கொடுத்துக் கோழி வளர்த்தால், அதிக முட்டைகளைப் பெற்று அதிக வருவாய் பெறுவது திண்ணம்.





## கன்றுகளின் அன்றாடத் தீவனப் பட்டியல்

| வயது | பாலின் அளவு | கலப்பு உணவு அளவு | பசும்புல் அல்லது வைக்கோல் |
|---|---|---|---|
| 1 முதல் 7 நாட்கள் | சீம்பால் உடம்பின் எடையில் 10 சதம். | ... | ... |
| 7 நாள் முதல் 1 மாதம் வரை | பால் அளவு உடம்பின்எடையில் 10 சதம் | ... | இளம் பசும்புல் சிறிதளவு. |
| 1 மாதம் முதல் 2 மாதம் வரை | பால் அளவு உடம்பின் எடையில் 5 சதம் | 0.75 கிராம் | இளம்பசும்புல் சிறிதளவு. |
| 2 மாதம் முதல் 3 மாதம் வரை | பால் அளவு உடம்பின் எடையில் 5 சதம் | 0.75 கிராம் | பசும்புல் அல்லது வைக்கோல் 1 கிலோ முதல் 2 கிலோ வரை. |
| 3 மாதம் முதல் 6 மாதம் வரை | உடம்பின்எடையில் 2 சதம் | 1 கிலோ | பசும்புல் 6 கிலோ அல்லது வைக்கோல் 2 கிலோ. |
| 6 மாதம் முதல் 1 ஆண்டு வரை | ... | 1 கிலோ | பசும்புல் 6 கிலோ அல்லது வைக்கோல் 2 கிலோ. |
| 1 ஆண்டு முதல் 2.5 ஆண்டு வரை | — | 1.5 கிலோ | பசும்புல் 20கிலோ அல்லது வைக்கோல் 6 கிலோ. |



# சீரணி ஆற்றும் பணிகள் செப்பவும் பெரிதே!

**மாண்புமிகு அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் :** தமிழ் நாட்டின் முதல்வராக பேரறிஞர் அண்ணா அவர்கள் பொறுப்பேற்றபோது, மக்களின் நலனுக்காகத் தீட்டப்படும் திட்டங்கள் முழு வெற்றி பெற மக்களும் ஆர்வத்துடன் ஒத்துழைக்க வேண்டுவது அவசியமென்றெண்ணி, தொண்டுள்ளம் கொண்டவர்கள், தங்கள் ஓய்வு நேரங்களில் பொது நலனுக்கென உழைக்க ஒரு மாபெரும் அணியை உருவாக்கினார்கள். மக்களின் நல்வாழ்வுக்கென தீட்டப்படும் திட்டங்கள் முழு அளவில் நிறைவேற்றப்பட அரசு மட்டும் முயன்றால் போதாது. அரசோடு மக்களும், தொண்டுள்ளம் படைத்த இளைஞர்களும் முன்வரவேண்டும். தங்களது குடும்பக் கடமைகளை ஆற்றிய பிறகு மீதமுள்ள நேரத்தை வெறும் பொழுதுபோக்குக் களியாட்டங்களில் வீணாக்காமல் நாட்டு மக்களின் நல்வாழ்விற்குத் தங்களின் உழைப்பினை நல்கிட வேண்டும். பொருள் படைத்தோர் நிதியும், ஆற்றல் மிக்கோர் ஆற்றலையும் அளித்து உழைப்பின் ஒரு பகுதியைச் சமுதாயப் பணிக்கு அளித்திட வேண்டும். இத்தகைய தத்துவத்தின் அடிப்படையில் பின்னப் பிணைந்ததுதான் சீரணி.

உணர்ச்சிப் பிழம்பாய், உள்ளத்துடிப்போடு நிற்கும் இளைஞர் சமுதாயத்தை ஆக்கப் பணியில் ஈடுபடுத்தவும், ''நாடு எனக்கென்ன செய்தது?'' என்று கேட்காமல், ''நாட்டிற்கு நான் என்ன செய்தேன்?'' என்று சிந்திக்க வைக்கவும், மக்களைத் தன்னலங்கருதாத பொதுப்பணிக்கு ஆயத்தப்படுத்தவும், எல்லாவற்றிற்கும் அரசின் உதவியையே எதிர்பார்க்கும் நிலையைப் போக்கி, தன்னால் முடிந்ததை நாட்டிற்குச் செய்ய அணி ஒன்று தேவை. அதுவும் அரசின் உதவியை நாடாத, ஊதியம், பணம், உத்தியோக உணர்வு வேண்டாத புதியதோர் அணி நாட்டிற்குத் தேவை என்று எண்ணினார் பேரறிஞர் அண்ணா. அவரது சிந்தனையில் உருவாயிற்று இச் சீரணி. நாட்டைச் சீர்படுத்த-சமுதாயத்தைச் செப்பனிட-மக்கள் வாழ்வைச் சீரமைக்க-அறிவைப் பரப்ப-ஆக்கப் பணிகள் ஆற்ற அமைக்கப் பட்டதுதான் சீரணி.

1967-ஆம் ஆண்டு இந்த இயக்கத்தைத் தொடங்கி, 'சீரணி' என்ற பொருத்தமான பெயரையும் அண்ணா அவர்களே சூட்டினார்கள். மக்களிடையே புதியதொரு சமுதாய விழிப்புணர்ச்சியைத் தோற்றுவித்து, நாட்டின் நல்வாழ்வுக்கு வழிவகுக்க வேண்டும் என்பதே சீரணி அமைப்பின் நோக்கமாகும். எந்த உயரிய இலட்சியத்திற்காக பேரறிஞர் அண்ணா அவர்கள் சீரணியைத் தோற்றுவித்தார்களோ அதைத் தொடர்ந்து, நமது மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த இயக்கத்திற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்துள்ளார்கள். கடந்த ஏழாண்டுக் காலத்தில், சீரணி, உருவிலும் வலுவிலும், பெரிதாக வளர்ந்துள்

தன்னலங் கருதாது பொதுநலம் காக்கும் சீரணியின் அமைப்பு முறைகள் பற்றியும் ஆற்றி வரும் அரும்பணிகள் பற்றியும் விளக்கிடும் அரியதொரு கலந்துரையாடல் இது.

இந்தக் கலந்துரையாடலில் உள்ளாட்சித்துறை அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் அவர்களும், அஞ்சுகம் அனாதை இல்லத்தலைவி திருமதி. அலமேலு அப்பாத்துரை அவர்களும், சென்னை மாவட்டச் சீரணியின் தலைவர் பி. கே. முத்துராமலிங்கம் அவர்களும் பங்கேற்றனர். இக்கலந்துரையாடல் சென்னை வானொலி நிலையத்திலிருந்து ஒலிபரப்பப்பட்டது.




எடுப்பு

உழைப்பே ஒருவன் துயர்போக்கும்—நல்
உழைப்பே நாட்டின் நலங்காக்கும்!

[உழைப்பே...]

தொகுப்பு

வறுமை நீக்கிடும் வாட்டம் போக்கிடும்
வாழ்வை உயர்த்திடும் வளம்பல குவித்திடும்

[உழைப்பே...]

முடிப்பு

சோம்பலை விரட்டி சுறுசுறுப் ·பளித்திடும்
சுதந்திர பூமியைச் சொர்க்கமாய் மாற்றிடும்
தேம்பிநின் றழுதிடும் இழிநிலை அகற்றிடும்
திரைகடல் ஓடியும் திரவியம் தேடிடும்

[உழைப்பே ...]

நெஞ்சம் மகிழ்ந்திட நிம்மதி ஈந்திடும்
நேர்மை மனத்துடன் வாழ்ந்திடச் செய்திடும்
பஞ்சம் மறைந்திட பாதை அமைத்திடும்
பட்டினி என்பதே இல்லையென் றாக்கிடும்

[உழைப்பே...]



ளது. தோன்றிய நாள்தொட்டு வரலாற்றில் நிலைபெறத்தக்க பல சாதனைகளைக் குவித்த இச் சீரணியைப் பற்றி, சீரணியின் மகளிர் பிரிவுத் தலைவியும், பொதுத் தொண்டில் ஈடுபாடு கொண்டு அஞ்சுகம் அனாதை இல்லத்தை நடத்தி வருபவருமான அம்மையார் அலமேலு அப்பாத்துரையிடமே கேட்போமே.

**அலமேலு அப்பாத்துரை :** சீரணி இயக்கத்தில் பெண்களும் அதிக அளவில் சேர்ந்துள்ளனர். இது, சீரணியின் சிறப்புக்கோர் அணியாகவே அமைந்திருக்கிறது. அந்த அளவுக்கு,ஆரம்பக்கட்டத்திலேயே அண்ணா அவர்களின் பத்துக் கட்டளைகள், தொண்டார்வம் மிக்க இளம் உள்ளங்களை ஈர்த்துள்ளன.

**அமைச்சர்:** சரியாகச் சொன்னீர்கள். சீரணி தொடங்கப் பெற்றபோது, எங்கும் இந்தப் பத்துக் கட்டளைகள் பற்றியே பேசப்பட்டது. பேரறிஞர் அண்ணா நமக்கிட்ட அந்தப் பத்துக்கட்டளைகள் என்னென்ன என்பது பற்றி, தமிழ்நாடு, சீரணி இயக்கத்துக்கென அமைந்த தனி அலுவலர் திரு. அப்துல் ரஹீம் அவர்கள் சொல்லட்டுமே.

**அப்துல்ரஹீம் :** சீரணிக்கென பேரறிஞர் அண்ணா அவர்கள் இட்ட, இந்தப் பத்துக் கட்டளைகள், இந்த நாட்டின் ஒளிமயமான எதிர்காலத்தில் அக்கறை கொண்டுள்ள அனைவரும் நினைவில் கொள்ளத்தக்கவையாகும். 1. ஓய்வு நேரத்தில் ஊதியம் பெறாது, பொதுநலப் பணியாற்றல், 2. தன்னலங் கருதாப் பொதுப்பணி, 3. தன் மதிப்பையும், தன்னம்பிக்கையையும் வளர்த்தல், 4. உழவும், தொழிலும் வளர உறுதுணையாக நிற்றல், 5. கல்வி அறிவும், பொது அறிவும் வளர வகை செய்தல், 6. பொதுநலம் காண துப்பரவுப் பணி மேற்கொள்ளல், 7. தீண்டாமைக் கொடுமைகளை அகற்றுதல், 8. அன்பு வழியாகச் சமூக கேடு களைதல், 9. திக்கற்றவர்களுக்குத் துணை புரிதல், 10. அறவழி நின்று அனைவருக்கும் உதவுதல் என்பனவே அந்தப் பத்துக் கட்டளைகளாகும். இவையே சீரணி தொடர்ச்சியாக பெற்றுவரும் வெற்றிக்குத் தாரக மந்திரமாகும்.

**அலமேலு அப்பாத்துரை :** சீரணியின் செயல் திட்ட

அமைப்புக்களேயும், அதன நீடித்த வெற்றிக்குக் காரண மாகக் கொள்ளலாம்.

**அமைச்சர் :** உண்மைதான், கிராமங்களுக்குத் தேவையான திட்டங்களை உருவாக்கி, ஒன்றிய அளவில் செயல்படுத்தவும் கோட்ட அளவில் மேற்பார்வை யிடவும், மண்டல அளவில் ஆய்வு செய்யவும், மாநில அளவில் திட்டத்தின் சாதனை களைப் பரிசீலிக்கவும், கூற்றம், கோட்டம், மண்டலம், மாநிலம் எனப் பிரித்து, குழுக்களேயும், தலைவர்களையும் நியமித்து, 'சீரணி'யின் பணிகள் செவ்வனே நடைபெற வகை செய்யப்பட்டுள்ளது. சீரணித் தொண்டர்களுக்கு அரசின் சார்பில், கூற்ற அளவில் ஒன்றிய ஆணையாளர்களும், கோட்ட அளவில் கோட்டாட்சித் தலைவர்களும், மண்டல அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர்களும் உதவுகிறார்கள். சீரணிப் பணிகளை ஆய்வு செய்யவும், மேலும் பல புதிய ஆக்கப்பணிகளையும், திட்டங்களையும் உருவாக்கவும், கூற்றம், கோட்டம், மண்டலம், மாநில அளவில் ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தப் பயனுள்ள அமைப்பு முறை திட்டவட்ட மான, பயனுள்ள பணிகளைச் செய்து முடிக்க தக்கதொரு புக்க பலமாக அமைந்துள்ளது.

சென்னைமாநகரைப் பொருத்த வரை அமைப்பு முறை வேறு னது. இந்த உரையாடலில் பங்கு கொண்டுள்ள திரு. பி.கே முத்துராமலிங்கம் அவர்கள், மாவட்ட சீரணித் தலைவராக நேரடியாகப் பங்கு கொள்ப வர். எனவே அவர்களை விளக்கிச் சொல்லும்படி வேண்டு கிறேன்.

**பி. கே. முத்துராமலிங்கம் :** சென்னை நகரம் 12 தொகுதி களாகப் பிரிக்கப்பட்டிருக் கிறது. ஒவ்வொரு தொகுதிக் கும் ஒரு தலைவர் இருக்கிறார். வடசென்னை தென்சென்னைப் பகுதிகளுக்கு இரு சீரணிச் செயலாளர்கள் நியமிக்கப்பட் டுள்ளனர். இவர்கள் மாவட்ட சீரணித் தலைவரின்கீழ் பணி புரிகின்றனர். இவர்களுக்கு ஆலோசனைகள் கூற நிருவாகக் குழு ஒன்றும் இருக்கிறது.

**அலமேலு அப்பாத்துரை :** சென்னை மாவட்டத்தில் என் னென்ன பணிகள் மேற்கொள் ளப்படுகின்றன?

**பி. கே. முத்துராமலிங்கம்:** துப்புரவுப்பணி, பேருந்துப் பயணிகளுக்கு நிழற்குடைகள் அமைத்தல், சீரணி அரங்கம், பள்ளிக் கட்டடங்கள் கட்டு வது போன்ற பணிகள் நடை பெற்றுள்ளன. சென்னை நகரில் மட்டும் 410 மையங்களில் 820 சீரணித்தொண்டர்கள் குடிசை வாழ் குழந்தைகளுக்கும், கரு வுற்றப் பெண்டிருக்கும் சத்து ணவு வழங்கும் திட்டத்தில் ஈடுபட்டு, வாரத்தில் ஐந்து நாட்கள் பணிபுரிகின்றனர். அணிவகுப்புப் பயிற்சி பெற்ற தொண்டர்கள் சென்னையில் 970 பேர் இருக்கின்றனர்.

**அலமேலு அப்பாத்துரை:** தமிழ கத்தில் சீரணித்தொண் டர்கள் எத்தனை பேர் இருக் கிறார்கள்? அவர்கள் திறமை யாகப் பணியாற்ற தக்க பயிற்சி பெறுகிறார்களா?

**அமைச்சர்:** சீரணியினர் தீ தடுப்புப் பணிகளில் உதவு வதற்கும், அமைதி காக்கும் பணிகளில் ஈடுபடவும் பயிற்சி அளிக்கப்படுகிறது. சீரணித் தொண்டர்களுக்கு ஊரக விரி வாக்கப் பயிற்சிப் பள்ளிகளில் தீவிர வேளாண்மை முறை, கால்நடை வளர்ச்சி, கிராமங் களில் தலைமைப் பொறுப்பை மேற்கொள்ளுதல் போன்ற வற்றில் ஒவ்வொரு வருடமும் 320 தொண்டர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. துவக்கக் கட்டத்தில் மாவட் டத்திற்கு 1000 தொண்டர்கள் சேர்க்கப்படலாமெனத் திட்ட மிடப்பட்டது. இன்று தமிழக மெங்கும் சுமார் 40,000 பேர் சீரணியில் சேர்ந்து, தன் னலங்கருதாது ஒய்வு நேர உழைப்பினைத் தந்து பொதுச் சொத்துக்களை உருவாக்கித் தருவதில் முனைந்துள்ளனர். இதில் 1,250 பெண்கள் பங் கேற்றுள்ளனர்.



மயிலாப்பூர் கபாலீசுவரர் திருக்கோயில் திருக்குளத்தைச் சீரணியினர் தூர்ப்படுத்தும் பணியை முதல்வர் கலைஞரும் அமைச்சர் பெருமக்களும் தொடங்கி வைத்தனர்.

**பி.கே. முத்துராமலிங்கம்:** கிராமப்புறங்களில் மக்களின் அறியாமையை அகற்ற சீரணி அறிவகங்கள் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றன.

**அப்துல் ரஹீம்:** தமிழகமெங்கும் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும், தேர்ந்தெடுக்கப்பட்ட பேரூராட்சிகளிலும் 512 சீரணி அறிவகங்கள் செயற்படுகின்றன. ஒவ்வொரு அறிவகத்திலும் ஒரு சீரணித் தொண்டர் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். அறிவகங்களுக்கு நாள், வார, மாத இதழ்கள் வழங்கப்பெறுகின்றன. மக்களின் அறியாமையை அகற்றவும், நாட்டின் நடைமுறைகள், தமிழக அரசின் சாதனைகள், முற்போக்கு நாடுகளின் முன்னேற்ற நிலை, ஆகியவற்றினைத் தெரிவித்து, சமுதாயக் கேடுகளைப் போக்கிடும் பகுத்தறிவு மன்றங்களாக இவை செயல்படுகின்றன.

**பி.கே. முத்துராமலிங்கம்:** சீரணி அறிவகங்கள் ஊர்ப்புறங்களில் சமூகக் கல்வி நிலையங்களாகவே செயற்படுகின்றன. பொதுப் பணிக்கு மக்களின் ஒத்துழைப்பைத் திரட்ட, சீரணி அறிவகங்கள் பெரிதும் பயன்படுகின்றன.

**அலமேலு அப்பாத்துரை:** இதுவரை சீரணியினர் ஆற்றிய ஆக்கப்பணிகள் — இன்று சமுதாயத்திற்குப் பெரிதும் பயனளிக்கும் பொதுச் சொத்துக்களாக மாறியுள்ளனவல்லவா? அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் சில வார்த்தைகள் சொல்லுவார்களா?

**அமைச்சர்:** ஒன்றல்ல இரண்டல்ல—தமிழ்நாடு எங்கும் சீரணியின் முத்திரை பதிந்துள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில், கோட்டூரில் சீரணித் தொண்டர்களும், ஊர் மக்களுமாகச் சேர்ந்து, 8 மைல் நீளமுள்ள சாலையை ஒரே நாளில் அமைத்தனர். எல்லா அரசியல்கட்சிகளுக்கும் பயன்படும் வகையில் சென்னை கடற்கரையில், சீரணி அரங்கம் ஒன்றைச் சீரணித் தொண்டர்கள் 21 நாட்களில் கட்டி முடித்தனர். சென்னை வியாசர்பாடியில், 5 பர்லாங் நீளமுள்ள ஒரு வடிகால் தோண்டப்பட்டது. ஊரூர் என்னுமிடத்தில் பத்தே நாட்களில் ரூ. 30,000 மதிப்புள்ள பள்ளிக் கட்டடத்தையும், சைதாப்பேட்டையில் நரிக்குறவர் இனத்தைச் சேர்ந்த மாணவர்கள் தங்கிப் படிக்க வசதியாக மாணவர் விடுதியையும், 170 வீடுகள் கொண்ட குடியிருப்பு ஒன்றையும் கட்டி முடித்துள்ளனர். நமது முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் 48-வது பிறந்த நாளின் தொடர்பாக சீரணித் தொண்டர்கள் உழைப்பின் மூலமும், பொது



மக்களின் நன்கொடை மூலமும் 48 பேருந்து நிலையங்களில் நிழற்குடைகள் அமைக்கப்பட்டன. 49-வது பிறந்த நாளையொட்டி, மாவட்டங்களில் 49 திறந்தவெளி அரங்குகள் முழுவதும் பொது மக்களின் நன்கொடை மூலமே, சீரணியினரால் கட்டப்பட்டன.

**அப்துல் ரஹீம்:** உணவு உற்பத்திப் பெருக்கத்திற்கும் சீரணியின் தொண்டு பெரிதும் உதவியுள்ளது. திருச்சி மாவட்டம் குடுமியான் மலையில் உள்ள மாநில வேளாண்மைப் பண்ணையில் நிலச்சீர்திருத்தப் பணியை மேற்கொண்டனர். அச்சமயத்தில் முற்றிலும் மறைந்து போனதொரு குளத்தைக் கண்டு, அதைப் புதுப்பித்து, சுமார் 45 ஏக்கர் நிலம் பாசனம் பெற சீரணித் தொண்டர்கள் உதவினர். அவ்வப்போது, தனிப்பட்ட நிகழ்ச்சிகளின் மூலம் திருச்சி வானொலியின் வாயிலாக, வேளாண்மைத் தொழில் நுட்பங்களை செயல்படும் கிராம வானொலி மன்றங்களுக்கு, தமிழகமெங்கும் சுமார் 300-க்கு மேற்பட்ட வானொலி மன்றக் கட்டடங்களைக் கட்ட சீரணியினர் பெரிதும் உதவியுள்ளனர்.

**அமைச்சர்:** கன்னியாகுமரி மாவட்டத்தில் விளவங்கோடு ஊராட்சி ஒன்றியத்தில் நடைபெறும் மடிச்சல் கால்வாய் திட்டம் குறிப்பிடத்தக்கதாகும். கிராம மக்களின் ஒத்துழைப்போடு 2.5 மைல் நீளத்திற்கு இந்தக் கால்வாய் தோண்டும் பணியினைச் சீரணியினர் மேற்கொண்டுள்ளனர். இக்கால்வாய் வெட்டுவதற்கு சீரணியின் முயற்சியின் பேரில் ரூ. 1.5 இலட்சம் மதிப்புள்ள 10 ஏக்கர் நிலத்தை நன்கொடையாகவே பெற்றுள்ளனர். சுமார் ரூ. 4.00 இலட்சம் மதிப்புள்ள இப்பணியினைச் சுமார் ஒரு லட்ச ரூபாய் அரசு செலவில் முடிக்கத் திட்டமிடப்பட்டு, கால்வாய் வேலை முடிவுறும் தறுவாயில் இருக்கிறது. இக்கால்வாயினால் சுமார் 431 ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி கிடைக்கிறது. இதனால் 500 மெட்ரிக் டன் நெல், உற்பத்தியாகி, 850 குடும்பங்கள் பயனடையும். இப்பணியைச் சீரணித் தொண்டர்கள் மேற்கொள்வதால் தமிழ்நாடு அரசுக்குச் சுமார் ரூ. 3.00 இலட்சத்திற்கு மேல் செலவு மிச்சமாகிறது. சீரணித் தொண்டர்களின் சலியாத உழைப்பின் மூலம், உருவாக்கப்பட்ட மடிச்

சல் கால்வாய், ஊதியம் பெரு உழைப்பின் மூலம் சமுதாய நலனுக்குச் செய்யப்பட்டுள்ள மாபெரும் சாதனையாகும்.

**முத்துராமலிங்கம் :** இதுவரை மாநில அளவில், அரசு, சீரணி இயக்கத்துக்காக, அளித்த உதவித் தொகையும், நடைபெற்ற பணிகளின் எண்ணிக்கையும், அதன் மதிப்பீடும் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**அப்துல் ரஹீம் :** 1967-ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் 1974 மார்ச் வரை தமிழகமெங்கும் 46,301 ஆக்கப்பணிகளை சீரணியினர் முடித்துள்ளனர். இந்தப் பணிகளின் மொத்த மதிப்பு சுமார் ரூ. 2 கோடியே 26 இலட்சம். இதில் அரசின் செலவு ரூ. 86.00 இலட்சமேயாகும். இதிலிருந்து மக்களிடையே பொது நன்கைக்காக ஒன்றுபட்டு உழைக்கும் ஆர்வம் மிகப் பெரிய அளவில் தூண்டப்பட்டு வரலாறு காணாத விதத்தில் ஆக்கப்பணிகளில் மக்கள் ஈடுபட்டிருப்பது தெரிகிறது.

**அலமேலு அப்பாத்துரை :** மக்களிடையே தொண்டார்வம் வளர்வதற்குத் தமிழ்நாட்டில் சீரணி இயக்கம் தக்கதொரு பக்கபலமாகவே அமைந்திருக்கிறது. இந்திய அரசையும், பிற மாநிலங்களையும் நமது சீரணி இயக்கம் கவர்ந்துள்ளதா?

**அமைச்சர்:** கடந்த ஏழாண்டுகளில், சீரணி, தனது ஒப்பற்ற சாதனைகளின் மூலம், மற்ற மாநிலங்களையும், மத்திய அரசையும் பெரிதும் கவர்ந்துள்ளது. இப்பணிகளை நேரில் கண்ணுற்ற பெரியோர்கள், மத்திய அரசைச் சார்ந்த அமைச்சர்கள் பெரிதும் பாராட்டியுள்ளனர். மத்திய அரசின், மக்கள் ஒத்துழைப்பு இயக்குநர் டாக்டர் பால் சௌத்திரி அவர்கள் தமிழகத்துக்கு வருகை தந்து, சீரணியின் அரும்பெரும் சாதனைகளைப் பார்வையிட்டு, பெரிதும் பாராட்டியுள்ளார். அத்துடன் பிற மாநிலங்களிலும் இத்திட்டத்தினைச் செயல்படுத்த பரிந்துரை செய்து, நாட்டின் எல்லா மாநிலங்களுக்கும் தமிழ்நாட்டின் சீரணியின் செயல்முறை பற்றிய கடிதம் அனுப்பியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இதைச் சொல்லும்போது 'சீரணியின் தொடக்க விழாவில் ''சீரணி மிகுந்த வெற்றியினைப் பெறும் என்ற எனது இந்த நம்பிக்கை வீண் போகாத அளவுக்குப் பணியாற்றுவார்கள் என்பதால், சீரணியை மெத்த மகிழ்ச்சியோடும், நம்பிக்கையோடும் துவக்கி வைக்கிறேன்' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னது என் நினைவிற்கு வருகிறது. அமரர் அண்ணா அவர்கள் நம்பியபடியே, நற்பணியாற்றிடும் பேரணியாக இச்சீரணியினை ஊக்குவித்து வருகிறார்கள் நமது முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள். சீரணியின் சாதனைகள் நாட்டு மக்களின் இதயங்களில் பதிந்திடவும், அவர்கள் தம் இதயத்தினை ஈர்த்திடவும் திரைப்படம் ஒன்றினையும் உருவாக்கித் தந்துள்ளார்கள். சீரணியின் கடந்த காலச் சாதனைகளை நோக்குமிடத்து, சமுதாயத்தில் அடித்தளத்தில் வாழும் மக்களின் நலனுக்காகச் சீரணி, ஓர் இன்றியமையாத இயக்கமாக வளர்ந்து வருகிறதென்பது தெளிவாகிறது. என்றென்றும் சமுதாய உயர்வுக்கான வழியில் சீரணி பணிபுரியும் என்பது திண்ணம்.

---


*எங்களது அங்கத்தினர்களுக்கும், வாடிக்கையாளர்களுக்கும் உளம்நிறைந்த*

**தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்**

# ''அமராவதி''

**கூட்டுறவு சிறப்பு அங்காடி**

**● திருச்சி ரோடு. ● ஜவஹர் பஜார்.**
**● மணப்பாறை. ● கரூர்.**

——|| கிளைகள் ||——

திருச்சி கைலாபுரம் ஷாப்பிங் சென்டர், திருச்சி கைலாசபுரம் 'பி' செக்டார்,
திருச்சி ராஜாஜி டி. பி. சானடோரியம் திருச்சி சிங்காரத்தோப்பு துணிப்பிரிவு
திருச்சி ராம்ஜிநகர் (பஞ்சு மில்) திருச்சி 'ராக்கோ' அச்சகம்

**(திருச்சிராப்பள்ளி மாவட்டக் கூட்டுறவு வினியோக விற்பனை சங்கத்தின் அங்கம்)**

*தங்களன்புள்ள,*
**P. B. K. ராஜாசிதம்பரம்,**
தலைவர் மற்றும் இயக்குநர்கள்.



# உலகப் புகழ் பெற்ற அறிவுச் சுடர்

— முதல்வர் கலைஞர் —

ஏறத்தாழ எட்டு மாத காலம் மரணத்தை எதிர்த்துப் போராடிய மாமேதை டாக்டர் ராதாகிருஷ்ணன் மறைந்து விட்டார்.

திருத்தணியில் நடுத்தரக் குடும்பமொன்றில் பிறந்து, வேலூர் சென்னை கல்லூரிகளில் பயின்று ஆசிரியராகப் பணியாற்றி, துணைப் பேராசிரியராகச் சிறந்து, பேராசிரியராக விளங்கி பல்கலைக் கழகங்களின் துணைவேந்தராகக் கோலோச்சி, இருமுறை இந்தியக் குடியரசின் துணைத் தலைவராகவும், பின்னர் குடியரசுத் தலைவராகவும் பொறுப்பேற்று, உலகப்புகழ் பெற்ற அறிவுச் சுடர் அவர்.

அடக்கம், அமைதி, அறிவாற்றல், இவைகளே அவரது எளிய இயல்பினைச் சேர்த்த எழிலார்ந்த அணிகலன்களாக விளங்கின.

"இந்தோனேசியத் தலம் உருப்படிய
தீவனமா"
என்று பத்துப்பாட்டு வரிகளைக் கொண்டு இவர்
எடுத்து நாட்டியிருக்கிறார்.

உலக நாடுகளின் பயணத்தில் அவர் கண்டிய
செய்திகளும் அந்தந்த நாட்டுப் பெருமை
-களாக அமைந்துள்ளன.

அந்தந்த நாடுகளின் பல்வேறு பகுதிக்
கருவூலங்கள் அவருக்குத் தந்த விளக்க உரைகளை
கேட்டு, பொறுப்போடு தொகுத்து அவற்றைப்
புகைப் படங்களாக ஆக்கியிருக்கின்றார்.

தென் நாடுகளுக்கும் சென்ற
நாடுகளுக்குச் சென்று அவர் அங்கு பாடமாகத்
தொகுத்தார்.

பாராட்டுப் பட்டம் அவரை நாடி வந்தது
பல்வேறு விருதுகள் அவருக்கு வழங்கப்
பெற்றன. ஜோசப் பரிசுக் கழகத்தின் இருந்து பெற்ற
நூல், "டெம்பிள்டன்" என்னும் உயர்ந்த பரிசு
அவருக்கு வழங்கப்பட்டது. அதன் தொகையான
96,000 டாலர் ஆகும். அத்தொகைப் பரிசு என்று
நன்கொடையிட, உலகம் ஒரு உயர்ந்த மனித
ரைக் உயர்த்திக் காண்பது என்பதைத்
தெரிந்துகொண்டது.

மிகப் பெரிய ஒரு நூல்நிலையம் என்று
டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்களைக் குறிப்
பிடலாம். அவர் மறைந்து விட்டாலும்,
அந்த நூல்நிலையம் நம்மோடு அவருடைய
கருத்துக்களை நூல்களாகத் தொடர்ந்து
வழங்கிக் கொண்டேயிருக்கும்.

"ஜனநாயகம் என்பது அதிகாரம் கொண்ட
பட்டமல்ல; அது பொதுநலமான உழைக்கும்
பொறுப்புக்கட"
என்று செம்மிய கருத்தை வெளியிட்டவர்
அவர்.
பிறருக்கு சொல்ல கூறுவதற்கு முன் தானும்
தன் பக்கத்திலும் அருகிலும் இருப்பவர்களை
ஆகவே நல் நெறிப்படுத்தும் கொள்கை
கொண்டவர் என்று பெண்மை உரிமைக்கு
செம்மல் அவர்.

அமைதியான தோற்றம் கொண்ட
இனிமையான பண்புகளும் சொற்களும்
நடைமுறை, உள்ளமும் வெறுப்பற்ற தூய்மை
கொண்டவர் அவர் உறுதியான கொள்கை.

நீர் சாய் பொருக்கும், செம்மை மிகு
மேகம், நெஞ்சிலும் வாழ்வும். பெருமக்
களிப்புடைமை உவர்ந்த அரசு மாமேதை
யின் புகழ் என்றும் நிலைத்திருக்கும்.
அமிழ்நாட்டு மக்களின் சார்பில் என்
இதயமார்ந்த இரங்கல் அஞ்சலியை
தெரிவித்துக் கொள்கிறேன்.



# மலைப்பகுதிகளில் உணவுக்காளான் பயிரிடும் முறை

உணவுக்காளான் என்பது சதைப்பற்றுள்ள பூஞ்சாளமாகும்! மழைக் காலங்களில் உணவுக்காளான் அங்கும் இங்கும் வளர்ந்திருப்பதை நாம் காணலாம்! ஆனால் இந்த உணவுக்காளான் வகையை நாம் எப்பொழுதும் வளர்த்து இதை ஒரு இலாபகரமான உப தொழிலாக மேற்கொள்ளலாம். இது மிகவும் சத்துள்ள உணவாகும். இதில் 'புரோட்டீன்', தாது உப்பு மற்றும் உயிர்ச் சத்துக்கள் அடங்கியுள்ளன. இதில் மாவுச்சத்து இல்லாததால் நீரழிவு நோயுள்ளவர்களுக்கு நல்ல உணவாகும். மேலும் இதில் 'கார்போ ஹைட்ரேட்' எனப்படும் சர்க்கரைப் பொருளும், கொழுப்புச் சத்தும் மிகவும் குறைவாக இருப்பதால் அதிக எடையுள்ளவர்கள் தங்கள் எடையை குறைப்பதற்கு இதை உணவாகக் கொள்ளலாம்.

விவசாயிகளும், மற்ற தொழில் செய்பவர்களும் உணவுக்காளான் பயிரிடுவதை ஒரு இலாபகரமான உப தொழிலாகக் கொள்ளலாம். இதற்கு அதிக மூலதனம் தேவையில்லை. எளிய சில நுட்பங்களைக் கற்றுக் கொண்டால் போதுமானது. பயிரிடும் நிலத்தை உபயோகிக்காமலேயே — வீட்டின் ஒரு அறையிலேயே — இவ்வகைக் காளானைப் பயிரிடலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

**உணவுக்காளானின் வகைகள்**

இரண்டு வகையான உணவுக்காளான்கள் பயிரிடுவதற்கு ஏற்றவை. வெப்பப் பிரதேசங்களில் பயிரிடுவதற்கு—'வால்வேரியல்லா டிப்ளேசியா' (Volvariella diplasia) என்னும் ஒரு வகைக் காளானும், மித வெப்பப் பிரதேசங்களில் பயிரிடுவதற்கு 'அகாரிக்கஸ் பைஸ்போரஸ்' (Agaricus bisporus) என்னும் ஒருவகையும் ஏற்றதாகும்.

நீலகிரி, கோடைக்கானல் முதலிய மித வெப்பமலைப்பிரதேசங்களில் 'அகாரிக்கஸ் பைஸ்போரஸ்' என்னும் வகை நன்றாக வளரும். இதைப் பயிர் செய்வதற்கு ஒரு வகை 'பிரத்தியேக கம்போஸ்ட்' தேவை. மித வெப்ப உணவுக்காளான் வகையைப் பயிரிடும் முறை கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

**'கம்போஸ்ட்' தயார் செய்தல்**

கோதுமைப் பயிரின் தழையையும் (தோகை), உர உப்புகளையும், கீழே குறிப்பிட்டுள்ள விகிதத்தில் கலந்து காற்றோட்ட நிலையில் மக்கச் செய்து 'கம்போஸ்ட்' தயார் செய்யப்படுகிறது.

ஒரு டன் கோதுமைத் தழைக்கு கீழே கொடுக்கப்பட்டுள்ள உர உப்பு வகைகள் தேவைப்படும்.

1. கால்சியம் அமோனியம் நைட்ரேட் அல்லது அமோனியம் சல்பேட்—20 கிலோ

2. சூப்பர் பாஸ்பேட்—20 கிலோ.

3. பொட்டாசியம் சல்பேட்—14 கிலோ

4. யூரியா—5 கிலோ.

5. கோதுமை உமி—35 கிலோ

இந்தப் பொருள்களைக் கலந்து வைத்துக் கொள்ள



வேண்டும். முதலில் கோதுமை தழையை சுமார் 6 அங்குல நீளத்தில் சிறு சிறு துண்டு களாக வெட்டி, ஒரு சிமெண்ட் டுத் தொட்டியில் 3 நாட்கள் நீரில் ஊற வைக்க வேண்டும். பிறகு ஊற வைத்த கோது மைத் தழையை ஒரு சிமெண் டுத் தரையில் 6 அங்குல உய ரத்திற்கு, 4 அடி சதுரப்பரப் பில் பரப்ப வேண்டும். மேற் கண்ட உர உப்புக் கலவையை கோதுமைத் தழையில் சிறிது பரப்ப வேண்டும். இதுபோல் கோதுமைத் தழையையும், உர உப்புக் கலவையையும் மாற்றி மாற்றி பரப்பி 4 அடி முதல் 5 அடி உயரம் வரை அடுக்க வேண்டும். உர உப்புக் கல வையைச் சேர்க்கும் ஒவ்வொரு முறையும், சிறிது தண்ணீர் தெளிக்க வேண்டும். இந்த 'கம்போஸ்ட்' கலவையை பின்கண்டவாறு திருப்பிமாற்றி (Resetting) அமைக்க வேண்டும். இவ்வாறு செய்வதால் கோது மைத் தழை முழுவதும் ஒரே சீராக மக்குவதற்கு உதவும்.

முதல் திருப்பு—6-ஆம் நாள்.

இரண்டாவது திருப்பு—10-ஆம் நாள்.

மூன்றாவது திருப்பு—15 - ஆம் நாள்.

நான்காவது திருப்பு—18-ஆம் நாள்.

ஐந்தாவது திருப்பு—21 - ஆம் நாள்.

ஆறாவது திருப்பு—22 அல்லது 23-ஆம் நாள்.

'கம்போஸ்ட்' 25 நாட்களில் தயாராகி விடும். மூன்றாவது முறையாக 'கம்போஸ்டை' திருப்பி விடும் வரை தண்ணீர் தெளிக்க வேண்டும். பிறகு திருப்பி விடும்போது தண்ணீர் தெளிக்கக் கூடாது. மூன்றாவது திருப்புக்குப் பிறகு 'கம் போஸ்ட்டின்' வெப்பம் அதி கரித்து 65 டிகிரி சென்டி கிரேடு வரை செல்லும். 'கம் போஸ்ட்' நன்றாக மக்கிய வுடன் வெப்பம் குறைந்து விடும். கம்போஸ்ட் அமிலத் தன்மை வாய்ந்ததாக இருத் தல் கூடாது. இதன் PH 7.0 முதல் 7.2 வரை இருப்பது நல்லது. இதற்கு 'கம்போஸ்ட் டை' நான்காவது முறையாக திருப்பும் பொழுது, இரண்டு கிலோ சுண்ணாம்பை நன்றாகக் கலக்க வேண்டும்.

### காளான் பயிரிட உதவும் மரப் பெட்டி தயாரித்தல்

பிரத்தியேகமாகத் தயா ரித்த 'கம்போஸ்ட்டை' மூடி யில்லாத மரப்பெட்டியில் பரப்ப வேண்டும். இதற்கான பெட்டி 90 சென்டி மீட்டர் நீளமும், 60 சென்டி மீட்டர் அகலமும், 15 சென்டி மீட்டர் உயரமும் இருத்தல் நல்லது. இந்த பெட்டியின் நான்கு மூலையிலும் 20 சென்டி மீட் டர் நீளத்தில் கால்கள் உட் புறமாகப் பொருத்தப்பட்டி ருக்க வேண்டும். இது ஒன்றின் மேல் ஒன்றாக 5 அல்லது 6 பெட்டிகள் வரை அடுக்க உப யோகமாக இருக்கும்.

### காளான் விதை

பிரத்தியேகமாகத் தயா ரித்த 'கம்போஸ்ட்டை', காளான் பெட்டியில் ஒரே சீராக 10 சென்டி மீட்டர் உயரத்திற்குப் பரப்பி நன்றாக அமுக்கி விட வேண்டும். அதன் மேல் காளான் வளர்ந்த சோளத்தைப் (Spawn) பரப்ப வேண்டும். அதன் மேல் சிறிது 'கம்போஸ்ட்டைப்' பரப்பி இரண்டாவது தடவை யாக காளான் வளர்ந்த சோளத்தைப்பரப்பவேண்டும். பிறகு பெட்டியின் மேல் ஒரு பத் திரிகை காகிதத்தை 'டைத் தேன் இசட் 78' கலவையில் (0.2சதம்) நனைத்து மூடிவைக்க வேண்டும். இவ்வாறு விதைத்த 'கம்போஸ்ட்' பெட்டிகளை ஒரு சுத்தமான அறையில் ஒன்றின் மீது ஒன்றாக அடுக்கி வைக்க வேண்டும். அறையின் வெப்ப நிலை 20 டிகிரி சென்டிகிரேடு முதல் 22 டிகிரி சென்டி கிரேடு வரை இருத்தல் நல்லது. 'டைத்தேன் இசட் 78' கல வையைத் தினமும் அல்லது ஒரு நாள் விட்டு ஒரு நாள் பெட்டியின் மேல் பரப்பில் உள்ள காகிதத்தில் தெளிக்க வேண்டும். பிறகு பெட்டிகளி லுள்ள 'கம்போஸ்ட்டின்' மேற் பரப்பில் வெண்ணிற நூல் போன்ற பூஞ்சாளம் வளர ஆரம்பிக்கும். விதைத்த 21 முதல் 25 நாட்களில் பூஞ்சா ளம் நன்றாக வளர்ந்து விடும். இந்த நிலையில் 'கம்போஸ்ட் டின்' மேல் நுகர்ந்து பார்த் தால், காளான் மணம் வீசும்.

### மண் மூடுதல்

பூஞ்சாளம் வளர்ந்த நிலை யில் 'கம்போஸ்ட்டின்' மேல் 2 சென்டிமீட்டர் உயரத் திற்கு நுண்கிருமிகள் இல்லாத




(Sterilized) மண்ணைப் பரப்பி, சிறிது அழுத்தி விட வேண்டும். இதையே ஆங்கி லத்தில் 'Casing' என்று அழைக்கிறோம். மண்ணில் உள்ள நுண் கிருமிகளை அழிக்க ஒரு சதம் பார்மலின் (Formalin) கலவையை மண்ணு டன் கலந்து, ஒரு வாரத்திற்கு 'ஆல்கத்தீன்' (Alkathene) காகிதத்தால் மூடி வைக்க வேண்டும். பிறகு ஒரு வாரம் இந்த மண்ணைக் காற்றோட்ட மாக வைத்திருந்து கம் போஸ்ட் பெட்டியில் பரப்ப உபயோகிக்கலாம். மண் மூடிய பிறகு இரண்டாவது நாளி லிருந்து 'கம்போஸ்ட்' பெட்டி யின் மேல் 'டைதேன் இஸட்-78' என்ற மருந்தை (0.2 சதம்) தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும். அதிக நீர் தெளிக்கக் கூடாது. ''கேசிங்'' செய்த நாளிலிருந்து 20 நாட்கள் கழித்து உணவுக் காளான் உருண்டையாக குடை போன்று வளர ஆரம் பிக்கும். இதிலிருந்து 2 முதல் 3 மாதம் வரை காளான் வளர்ந்து கொண்டேயிருக்கும்.

### காற்றோட்டம்

காளான் வளர்க்கும் அறையை ''கேசிங்'' செய்த பிறகு காற்றோட்டமாக வைக்க வேண்டும். ஜன்னலைத் தினமும் 30 நிமிடமாவது திறந்து வைக்க வேண்டும். இது, காளான் வெளியிடும் கரி யமில வாயுவை வெளியேற்ற உதவும்.

### தூய்மை

உணவுக்காளான் பலவகை யான நோய்களாலும், பூச்சி களாலும் பாதிக்கப்படக்கூடும். எனவே, காளான் பயிரிடும்

காளான் பயிரிடும் அறையின் தரையையும் காளான் வளர்க்கும் பெட்டிகளையும் ஒரு சதம் 'பார்மலின்' தெளித்துத் தூய்மைப் படுத்த வேண்டும்.

**காளான் அறுவடை செய்தல்:**

காளான் உருண்டையாக வளர்ந்து குடையாக விரிவடைவதற்கு ஒரு நாள் முன்னதாகவே, காளானைத் திருகி, வேருடன் எடுக்க வேண்டும். அடிப் பாகத்தில் உள்ள மண்ணை, 'பிரஷ்' மூலம் மெதுவாக அகற்ற வேண்டும். அறுவடை செய்த காளானை துவாரம் இடப்பட்ட 'பாலித்தீன்' பைகளில் இட்டு விற்பனைக்கு அனுப்பலாம். காளான் பறிக்கப்பட்டதால் 'கம்போஸ்டின்' மேல் உண்டான குழியில் சிறிது 'கேசிங்' மண்ணை இட்டு நிரப்ப வேண்டும். காளான் பறிக்க ஆரம்பித்த நாளிலிருந்து இரண்டு மாதம் வரை வாரம் ஒரு முறையோ அல்லது இரு முறையோ தொடர்ந்து பறித்துக் கொண்டிருக்கலாம். முற்றிலும் அறுவடை செய்த பிறகு, 'கம்போஸ்டை' பயிர் நிலங்களுக்கு எருவாக உபயோகிக்கலாம்.

> தமிழ்நாடு முழுவதும் கதர் கிராமத் தொழில் பொருள்களை உற்பத்தி செய்வதற்கென 594 வாரிய நிலையங்களும், 2,435 கூட்டுறவு நிறுவனங்களும் இயங்கி வருகின்றன.

**நிகர லாபம்**

ஒரு காளான் பெட்டியிலிருந்து (90 செ.மீ. × 60செ.மீ × 15 செ.மீ. ) இரண்டு கிலோ காளான் சாதாரணமாகக் கிடைக்கும். இதன் விலை இடத்திற்கு இடம் வேறுபடலாம். ஒரு கிலோகுறைந்த பட்ச விலை 10 ரூபாயாகக் கொண்டால், ஒரு பெட்டியில் இருந்து ரூபாய் 20 வருவாய் கிடைக்கும். ஒரு பெட்டிக்கு ஆகும் செலவு 8 ரூபாய்க்கு மேல் போகாது. ஆகவே, ஒரு பெட்டி காளான் பயிரிடுவதால் நிகர இலாபம் ரூபாய் 12 கிடைக்கும். காளானின் விலை அதிகமாக இருக்கும்போது நிகர இலாபம் இன்னும் அதிகமாகக் கிடைக்கலாம். மேலும் இதை அதிக அளவில் பயிரிடும்போது செலவு குறைவாக அமைவதால், அதிக நிகர இலாபம் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

**இந்திய ஜெர்மாயனியமேம்பாட்டுத் திட்டத்தின் பங்கு**

உணவுக் காளான் தயாரிப்பதற்கு வேண்டிய 'ஸ்பான்' (Spawn) எனப்படும் காளான் வளர்ந்த பாட்டில்கள்குறைந்த விலைக்கு விற்கப்படுகிறது. காளான் வளர்ப்பதில் விருப்பம் உள்ளவர்களுக்கு உபயோகமான யோசனைகள் (Technical advice) கூறப்படுகின்றன. எனவே காளான் பயிரிட விருப்பமுள்ளவர்கள் ஆக்க பூர்வமான யோசனை பெற உதகையில் உள்ள இந்திய—ஜெர்மானிய நீலகிரி மேம்பாட்டுத் திட்டத்தின் திட்ட அலுவலர் அவர்களையோ அல்லது உதவி பயிர் நோய் வல்லுநர் அவர்களையோ அணுகலாம்.

—ச. பொன்னையா,
பி.எஸ்சி (வே).,
—என். இராமதாஸ்,
பி. எஸ்சி (வே).,
இந்திய ஜெர்மானிய நீலகிரி
மேம்பாட்டுத் திட்டம்,
உதகமண்டலம்.

எங்கள் அங்கத்தினர்களுக்கும், வாடிக்கையன்பர்களுக்கும்

**"சிந்தாமணியின்" தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள் !!**

தரமான சரக்கு ! சரியான எடை !! குறைந்த விலை !!!

குடும்பத் தேவைகள் அனைத்தும் ஒரே இடத்தில் பெற சிறந்த இடம்

**சிந்தாமணி** கூட்டுறவு சிறப்பு அங்காடி, திருச்சி.

(திருச்சிராப்பள்ளி கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின் அங்கம்)

தலைமையகம் :
தொலைபேசி :
புத்தூர் : 3311, 3355

கிளைகள் :
தொலைபேசி :
தெப்பக்குளம் : 5519
பெல் (கைலாசபுரம்) : 280

எமது சேவை நிலையங்கள் :

* தையல் நிலையம் ** கடிகாரம் பழுதுபார்க்கும் நிலையம் *** ரேடியோ மற்றும் மின்சார சாதனங்கள் பழுதுபார்க்கும் நிலையம்

# ஆடோ ஆடு!



மேச்சேரி இன ஆடுகள்.

ஏழை எளியவர்களும் எளிதில் வளர்த்திடுவதற்கு ஏற்றதாயுள்ள செம்மறி ஆடுகளை கம்பள உரோமம் உடையது, கம்பள உரோமம் அல்லாதது என இரு இனங்களாகப் பிரிக்கலாம். தரமுள்ள இறைச்சியையும், கம்பளியையும் தரும் அவைகளின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

## கம்பள உரோமம் உள்ள ஆடுகள்

**கோயம்புத்தூர் இனம்:** இவ்வினம் வெண்மையும், கருப்பும் அல்லது வெண்மையும் பழுப்பும் கலந்த நிறமாக இருக்கும். இவ்வினத்தின் தலையிலும், கழுத்திலும் கருப்பு நிறம் காணப்படும். உடல் பருமன் ஆகவும், நல்ல இறைச்சி தரும் திறனும் உடையது இவ்வினம். இவ்வினம் விரைவாக கம்பள உரோமம் கொடுக்கக் கூடியது. ஒரு ஆட்டிலிருந்து ஒரு ஆண்டில் 500 முதல் 700 கிராம் கம்பள உரோமம் பெறலாம்.

**நீலகிரி இனம்:** இந்தியாவிலேயே சிறந்த கம்பளி உரோமத்தைக் கொடுக்கும் இனம், நீலகிரி செம்மறியாட்டினமே யாகும். இவ்வின ஆடு ஒவ்வொன்றும் ஒரு ஆண்டில் 0.75 கிலோ கம்பளி உரோமம் தர வல்லது.

## கம்பள உரோமம் இல்லாத ஆடுகள்

**சென்னைச் சிவப்பு இனம்:** தமிழ்நாடெங்கும் இவ்வினம் காணப்படுகிறது. இவ்வினம் ஒட்டி உலர்ந்த வயிற்றையும், இலேசான, ஆனல் உறுதியான கால்களையும், சிறிய வாலையும் கொண்டிருக்கும். கிடாக்களின் கொம்புகள் தடித்தும், சுருண்டும், வெளிப்பக்கமாகவும், கூராகவும் வளர்ந்து இருக்கும்.

இந்த இனம் தடித்த, குறுகலான உரோமம் உள்ளதாகவும், பழுப்பு நிறம் கொண்டதாகவும் இருக்கும். பெண் ஆட்டின் சராசரி எடை 18 முதல் 25 கிலோ வரை இருக்கும்.

**நெல்லூர் இனம்:** வெண்மை அல்லது பழுப்பு கலந்த வெண்மை நிறமாக இருக்கும் இவ்வினம், நல்ல வளர்ச்சி உடையதாகும். இவ்வினத்தின்



இராமநாதபுரம் இனம்

கால்கள் குட்டையானதாகவும், தசை நிரம்பியதாகவும் இருக்கும். கிடாக்களின் கொம்பு பருத்தும், தடித்தும், சுருண்டும் இருக்கும். இவ்வினத்தின் சராசரி எடை ஏறத்தாழ 35 முதல் 45 கிலோ வரை இருக்கும்.

**மேச்சேரி இனம்:** நல்ல இறைச்சி கொடுக்கக்கூடிய இவ்வினம் மிகக் குறைந்த தீவனத்தில் வளரக்கூடியது. இவ்வினத்தின் பிறப்பிடம் சேலம் மாவட்டத்தில் உள்ள ஓமலூர் வட்டமாகும். செம்மண் பகுதிகளிலும், கருமண் பகுதிகளிலும் வளரக்கூடியது. இவ்வினத்தின் நிறம் வெண்மை; ஆனல் நெற்றியிலும், உடலின் அடிப்




பாகத்திலும் கருப்பு உரோமங்மங்கள் அதிகமாகக் காணப்படும். நீண்டதலை, குறுகிய நெற்றி, உறுதியான சதைப் பிடிப்பான கால்கள், பெட்டை ஆடுகளில் கொம்பு இல்லாமை ஆகியவை இவ்வினத்தின் குணங்களாகும். இவ்வினத்தின் சராசரி எடை 35 முதல் 45 கிலோ வரை இருக்கும்.

**கீழக்கரிசல் இனம்:** மழைக் குறைந்த இராமநாதபுரம் மாவட்டத்தின் கருப்பு மண் பகுதிகளில் மிகக்குறைந்த தீவனத்தை உட்கொண்டு நன்கு வளரக்கூடிய இவ்வினம், இறைச்சிக்கு ஏற்றஇனமாகும். ஆழ்ந்த பழுப்பு அல்லது சிவப்பு நிறமாக இருக்கும் இவ்வினத்தின் பின்கால், முழங்கால், உடலின் அடிப்பாகம் ஆகியவை மட்டும் கருப்பாக இருக்கும். நீண்ட தலை, பரந்த நெற்றி, சிறிய தடித்தக் கொம்பு ஆகியவை இவ்வினத்தின் குணங்களாகும். சராசரியாக இவ்வினம் 30 முதல் 40 கிலோ எடையுள்ளதாக இருக்கும்.

**திருச்சி கருப்பு இனம் :** இறைச்சிக்கு ஏற்ற இவ்வினம் கருப்பு நிறமாகவும், நடுத்தர உருவம் கொண்டதாகவும் இருக்கும். இவ்வினக் கிடாக்களின் கொம்பு சுருண்டு இருக்கும். பிறந்தவுடன் கிடாக் குட்டிகள் 2 கிலோ எடையுள்ளதாகவும், பெட்டைக் குட்டிகள் 2 கிலோ எடையுள்ளதாகவும் இருக்கும். 4 மாதத்தில் கிடாக்குட்டிகள் 8.5 கிலோ, பெட்டைக் குட்டிகள் 8 கிலோ எடையுள்ளதாக வளரும். 1 ஆண்டு 3 மாதம் 12 நாட்களில் பருவமடையும். 12 முதல் 15 மாத வயதில் கிடா 24 கிலோ, பெட்டை 18 கிலோ என்ற அளவில் இருக்கும்.

**மாண்டியா இனம்:** இறைச்சிக்கு ஏற்றச் சிறந்த இனம் இது. குட்டையான கால்கள், உருண்டையான உடல், குட்டையான வால், ஆழ்ந்த அகலமான மார்பு, பழுப்பு கலந்த வெண்மை நிறம், கால்களிலும் உடம்பிலும் முகத்திலும் முரட்டு ரோமம் ஆகியவை இவ்வினத்தின் குணங்களாகும். பிறந்தவுடன் கிடாக்குட்டி 2.1 கிலோ எடையும், பெட்டைக் குட்டி 2.1 கிலோ எடையும் இருக்கும். நான்காவது மாதத்தில் அவை 8.5 கிலோ எடையுள்ளதாக இருக்கும். 1 ஆண்டு 1 மாதம் 15 நாட்களில் பருவம் அடையும். 12 முதல் 15 மாத வயதில் கிடா 33 கிலோ எடையுள்ளதாகவும், பெட்டை 21 கிலோ எடையுள்ளதாகவும் இருக்கும்.

## வெளி நாட்டு இனங்கள்

நீலகிரி, கொடைக்கானல், போன்ற மலைப் பகுதிகளில் 'மெரினோ' 'ரோம்னி மார்ஸ்', போன்ற ரஷியா நாட்டு இனங்களை வளர்ப்பதே சிறந்தது. இவ்வினங்கள் தரம் மிகுந்த கம்பள உரோமங்களைத் தந்து, அந்நியச் செலாவணியை ஈட்டிட உதவுகின்றன.

### கலப்பினம்

'மெரினோ' இன ஆடுகள் உலகிலேயே சிறந்த கம்பளி உரோமத்தைக் கொடுக்கின்றன. நீலகிரி மாவட்டத்தில், சாந்தி நல்லா என்ற இடத்தில் உள்ள செம்மறியாட்டு இனப் பெருக்க ஆராய்ச்சி நிலையத்தில், 'நீலகிரி' இன ஆடுகளையும், 'மெரினோ' இன ஆடுகளையும் இனச்சேர்க்கை செய்து 'நீலகிரி—மெரினோ' கலப்பின ஆடுகள் உருவாக்கப்பட்டுள்ளன. இக்கலப்பின ஆடுகள் ஒவ்வொன்றும் ஆண்டொன்றுக்கு 2.5 கிலோ கம்பள உரோமம் அளிக்கின்றன. இதன் மூலம் ஒவ்வொரு கலப்பின ஆட்டிலிருந்தும் ரூபாய் 73.75 வருவாய் (கம்பளி உரோமம் விற்பதன் மூலம்) கிடைக்கின்றன.

## ஆடு வளர்க்க அளிக்கப்படும் சலுகைகள்

1. தமிழ்நாட்டில் நீலகிரி, கொடைக்கானல் பகுதி தவிர்த்த மற்ற இடங்களில் ஆடுகளின் தரத்தை உயர்த்த, உயர்ரக மேச்சேரி கிடாக்களை ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக உழவர்களுக்குப் பாதி விலையில் வழங்கப்படுகின்றன.

2. ஆடு வளர்ப்பை இலாபகரமாக்க ஆடுவளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு, கடன் வசதியும், விற்பனை வசதியும் செய்து தரப்படுகின்றன.

3. முடிந்த இடங்களிலெல்லாம், வனத்துறையினரின் ஒத்துழைப்புடன் ஆடுகளுக்கு மேய்ச்சல் வசதி செய்து கொடுக்கப்படுகிறது.

4. கால்நடைப் பராமரிப்புத் துறை மூலம் ஆடுகளின் தொற்று நோய் அகற்ற தடுப்பு ஊசி போடுவதுடன், குடற் புழு அகற்ற மருந்தும் அவ்வப் பொழுது கொடுக்கப்படுகின்றன.

எனவே, ஆடு வளர்த்து ஆதாயம் பெற முன்வருமாறு தமிழக உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

**—ஆர். எம்.**

# ஆடுகளின் குடற்புழு நீக்கலும், உண்ணிகள் அழித்தலும்.

ஆட்டின் குடலிலேயே குடியிருக்கும் குடற் புழுக்களும், ஆடுகளின் மேல் இருக்கும் இரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கும் உண்ணிகளும் ஆடுகளால் வரக்கூடிய இலாபம் முழு அளவில் உங்களுக்குக் கிடைக்காமல் செய்கின்றன.

குடற் புழுக்கள் ஆடுகளின் குடலில் வசிப்பவை. அவை இரத்தத்தை உறிஞ்சி உயிர் வாழும். ஒவ்வொரு புழுவும் ஒரு நாளைக்கு 12 மி.லி. இரத்தத்தை உறிஞ்சக் கூடியவை. இத்தகைய புழுக்கள் ஓர் ஆட்டின் குடலில் சாதாரணமாகப் பல்லாயிரக் கணக்கில் இருக்கும். அவ்வளவு புழுக்களும் இரத்தத்தை உறிஞ்சி உயிர் வாழ்வதனுல், ஆட்டின் நிலை மிக மோசமாகின்றது.

இத்தகைய புழுக்கள் எவ்வாறு ஆட்டின் குடலில் போய்ச் சேருகிறது? ஆடுகளின் வயிற்றிலுள்ள பெண் புழுக்கள் பல்லாயிரக்கணக்கான, கண்ணுக்குத் தெரியாத முட்டைகளிடும். இவை ஆடு சாணம் போடும்போது சாணத்தோடு வெளியாகி நிலத்தில் சேருகின்றன. இம் முட்டைகள் பொரித்து இளம் புழுக்கள் புற்களிலும், சதுப்பு நிலங்களிலும் அடைந்து கிடக்கின்றன. ஆடுகள் இத்தகைய பிரதேசங்களில் மேயும் போது புற்களோடு இளம் புழுக்கள் விழுங்கப்படுகின்றன. ஆடுகளின் வயிற்றில் இந்த இளம் புழுக்கள் பெரியவையாகித் தங்கள் வாழ்க்கையைத் தொடர்கின்றன.

இந்தப் புழுக்களால் ஆடுகள் எந்த அளவுக்குப் பாதிக்கப்படுகின்றன? புழுக்கள் இரத்தத்தை உறிஞ்ச, குடலில் துளையிடுவதால், குடல் அழற்சி ஏற்படுகிறது. இது வயிற்றோட்டத்தில் கொண்டுபோய் விடுகிறது. இது ஆடுகளுக்கு உணவில் நாட்டமில்லாமல் செய்துவிடுகிறது. இரத்த சேதம் ஏற்படுவதால் ஆட்டின் இரத்தம் நீர்த்துப் போய்விடுகிறது. ஆடு நலிந்து, பெருமயிர் மூடி, சோகை தட்டி, தோல் போர்த்த எலும்புக் கூடாகக் காட்சியளிக்கிறது. சில ஆடுகள் இறந்து விடுகின்றன.

இதற்கு என்ன செய்ய வேண்டும்? இந்தப் புழுக்களை அழிக்க மருந்துகள் இருக்கின்றன. குறிப்பாக மயில் துத்தம் (Copper sulphate) என்ற மருந்தில் 10 கிராம் எடுத்துக் கொண்டு, அதை ஒரு லிட்டர் சுத்த நீரில் கலந்து கொள்ளவும். இதில் 30-லிருந்து 60 மி.லி. வரை "வயதுக்குத் தக்கவாறு" ஒவ்வொரு ஆட்டுக்கும் கொடுக்கலாம். பினேவிஸ் (Phenovis) என்பது மற்ருெரு மருந்து. இதை ஒரு ஆட்டுக்கு 10-லிருந்து 15 கிராம் என்ற கணக்கில் தண்ணீரில் கலந்து கொடுக்கவேண்டும். இம்மாதிரி மருந்துகளில் ஏதாவது ஒன்றைத் தகுந்த அளவில் ஒவ்வொரு ஆட்டுக்கும் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை கொடுக்க வேண்டும். இவ்வாறு குறைந்த செலவில் ஓர் ஆட்டிற்குக் கொடுக்கப்படும் மருந்தில் பல ரூபாய் பெறுமான இறைச்சி பெறலாம்.

இந்தக் குடற்புழுக்கள் சேரா வண்ணம் தடுப்பு முறைகள் இருக்கின்றன :

1. சதுப்பு நிலங்களில் உங்கள் ஆடுகளை மேய்க்காதீர்கள்; இளம் குடற்புழுக்கள் இந்நிலங்களில் அதிகமாக இருக்கும்.

2. ஒரு குறிப்பிட்ட நிலப் பரப்பில் ஒரு வாரத்திற்கு மேல் உங்கள் ஆடுகளை மேய்க்காதீர்கள். ஒரு வாரத்திற்குப் பின் அடுத்த நிலப்பரப்பிற்கு, உங்கள் ஆடுகளை ஓட்டிச்செல்லுங்கள். முதலில் மேய்த்த நிலப்பரப்பை மூன்று அல்லது நான்கு வாரங்களுக்கு விட்டு விடுங்கள். இதனுல் இரு வித நன்மைகள் ஏற்படுகின்றன. ஒன்று புல் வளரச் சாத்தியமிருக்கிறது. இரண்டாவது இளம் குடற்புழுக்கள் ஏதேனும் இருக்குமேயானுல், இந்த இடைக் காலத்தில் அவை அழிந்து போகும்.

உண்ணிகள் இரத்தத்தை உறிஞ்சி ஆடுகளைப் பலவீனம் அடையச் செய்கின்றன. இரத்த சம்பந்தமான நோய்க் கிருமிகளை நோய்வாய்ப்பட்ட ஆடுகளிலிருந்து ஆரோக்கியமான ஆடுகளுக்குப் பரப்பக் காரணமாகின்றது. உண்ணிகள் கடித்த இடம் இரணமாகித் தொந்தரவு கொடுக்கின்றது. இது இல்லாமல் இத்தகைய இரணங்கள் நிறைந்த தோல், ஓட்டைகள் விழுந்து மதிப்புக் குறைந்துபோய் விடுகின்றது.

**இந்த உண்ணிகள் எப்படி வருகின்றன?**

உண்ணிகள் ஆடுகளின் உரோமங்களின் மேல் முட்டையிடுகின்றன. இவற்றிலிருந்து இளம் உண்ணிகள் வருகின்றன. இவை இரத்தத்தை உறிஞ்சிப் பெரிதாகின்றன. பின் ஆடுகளை விட்டு விட்டு மேய்ச்சல் நிலத்தில் விழுந்து சில உடல் மாற்றங்கள் பெறுகின்றன. வேறு ஆடுகள் வரும்போது அவற்றின் மேல் தொற்றிக் கொண்டு இரத்தம் உறிஞ்சுவதைத் தொடங்குகின்றன. இவ்வாறு உண்ணிகள் பரவுவதற்கு மேய்ச்சல் நிலமே முக்கிய காரணமாக இருக்கிறது.

**உண்ணிகளை எப்படி ஒழிப்பது?**

1. உண்ணிகள் குறைந்த அளவில் இருந்தால் அவற்றைப் பொறுக்கி அழிக்கலாம்.

2. 5—10 சத டி.டி.டி. (D.D.T) அல்லது குளோர்டேன் 2 சதம் அல்லது காமா பி..எச்..சி. (Gamma B.H.C) 1 சதம் ஆகியவற்றில் ஏதாவதொரு தூளை, உரோமங்களிலேயே, தோலில் படும்படி தூவிவிடலாம்.

3. 0.5 சத பி.எச்.சி. (B.H.C), 1.5 சத டி.டி.டி. (D.D.T), 0.5 சத டாக்ஸாவின், ரோடினுன் இவற்றில் ஏதாவதொன்றின் கரைசலைத் தெளிப்பான்கள் மூலம் ஆடுகளின் மேலும், பட்டித் தளவாடங்கள் மேலும் தெளிக்கலாம்.

4. மேய்ச்சல் தரைகளை மாதம் ஒரு முறை ஏக்கரொன்றுக்கு 1 கிலோ டி.டி.டி. அல்லது 0.5 கிலோ 'லின்டேன்' அல்லது 1 கிலோ 'டாக்ஸாவினை' நீரில் கரைத்து தெளிப்பான்கள் மூலம் தெளிக்கலாம்.

5. ஆடுகள் அதிகமாக இருக்கும்போது, அவைகளை மருந்து கலந்த தொட்டிகளில் நனையும்படி ஓட்டிவிடலாம்.



# பன்றி வளர்க்கப் பாங்கான முறைகள்!

பன்றிகள், தாம் உட்கொள்ளும் உணவைத் திறமைப்படத் தக்க முறையில் இறைச்சியாக மாற்றும் சக்தி உள்ளவை. ஒரு கிலோ பன்றி இறைச்சி உண்டாக்க சுமார் 3.5 கிலோ தீவனம் தேவை. இறைச்சி கண்டுமுதல் கூட, மற்ற மிருகங்களை விட பன்றியில் அதிகம். தவிரவும் ஒரு பெண் பன்றி ஒரு தடவையில் 3 முதல் 12 குட்டிகள் வீதம், வருடத்தில் இரு முறை குட்டிகளை ஈனும். பன்றிக் குட்டிகளும் அதிவேகமாக வளரக் கூடியவை. பன்றிகளின் வீடு கட்டுவதும், மாட்டு கொட்டகைகளைப் போலல்லாமல், மலிவாக கட்டிவிடலாம். பன்றி இறைச்சி, மலிவுள்ள தரமிக்க புரதச் சத்துள்ள ஓர் நல்ல உணவு.

## இலாபகரமாக பன்றி பண்ணைகள் அமைக்க :

1. நல்ல இன பன்றிகள் தேவை.

2. தக்க பராமரிப்பு முறைகளைக் கையாள வேண்டும்.

3. தொத்து நோய்ப் பாதுகாப்பு முறைகளை அவசியம் கையாள வேண்டும்.

4. பன்றி இறைச்சி விற்பனைக்கு வசதிகள் தேடிக் கொள்ள வேண்டும்.

## பன்றி இனங்கள் :

நாட்டுப் பன்றிகள், மிகவும் நிதானமாக வளர்ந்து மிகக் குறைந்த இரண்டாந்தரமான இறைச்சியை அளிக்கக் கூடியவை.

இலாபகரமான முறையில் பன்றி பண்ணைகள் அமைக்க கீழ்க்கண்ட இனங்களை வளர்க்கலாம் :

### 1. யார்க்ஷயர் (பெரிய வெள்ளை இனம்) :

இது ஒரு பெரிய நீண்ட வெள்ளை இனம்; மற்ற இனங்களைவிடத் துரிதமாக உற்பத்தியாகும். பெட்டை பன்றிகள் அதிகம் பால் கொடுத்து நல்ல தாயாகவும் இருக்கும். அவ்வளவு சீக்கிரம் பருவத்திற்கு வராவிட்டாலும், தான் உண்ணும் உணவைத் தரமிக்க வகையில் இறைச்சியாக மாற்றக் கூடிய தன்மை உடைய இனம். வெப்ப நாடுகளில் நன்கு வளருகின்றன. நன்கு வளர்க்கப்பட்ட கிடாப் பன்றி சுமார் 300 கிலோ எடையும், பெண் பன்றிகள் 200 கிலோ எடையும் உள்ளவை.

### 2. யார்க்ஷயர் நடுத்தர வேள்ளை :

மேற்கூறிய வெள்ளை இனத்தை தழுவியது. ஆனால் அவ்வளவு எடை இறைச்சி கொடுக்காது. சீக்கிரம் பருவமடையக் கூடியவை.

### 3. பெர்க்ஷையர் :

ஆங்கில நாட்டு இனம்; கருப்பும், வெள்ளையும் கலந்தது. நடுத்தர உடலமைப்பு. சீக்கிரம் பருவமடைந்து அதிக குட்டிகள் ஈனக் கூடியவை.

## பராமரிப்பு :

பன்றிகளால் வியர்வையை வெளிப்படுத்த முடியாது. சீதோஷ்ண மாறுபாடுகள் அவைகளை சீக்கிரத்தில் பாதிக்கும். பன்றிக்குட்டிகள் பிறந்த உடன் முதல் 3 நாட்களுக்கு 90 டிகிரி வெப்பத்திற்கு மேல் வைக்கப்பட வேண்டும். இவ் வெப்பத்தை அவைகள் வளர வளரக் குறைத்துக் கொள்ள வேண்டும்.

பன்றிகளுக்குத் தக்க பன்றிக் கூடங்கள், குடி தண்ணீர் வசதி, படுத்துப் புரள தண்ணீர் தொட்டிகள் அத்தியாவசியமாகத் தேவைப்படும்.

## பன்றிக் கூடங்கள் :

நல்ல காற்றோட்டமுள்ள, வெளிச்சமான இடங்களில் பாதி திறந்தும், பாதி மூடியுமுள்ள கொட்டகைகளில் வளர்க்கப்பட வேண்டும். சுமார் 10 முதல் 11 அடி உயரமுள்ள ஒரு பக்க சுவரும், 8 அடி உயரமுள்ள ஒரு பக்க சுவரும் கொண்ட ஒரு சார்ப்பு போட்டு, பாதி இடத்தை ஓடோ அல்லது வேறு ஏதாவது கூறைச்சாமான்களைக் கொண்டு மூடி, மறு பாதியைத் திறந்த வெளியாக விட்டுவிட வேண்டும். திறந்த வெளிப் பாகத்தை சரியான அடைப்புப் போட்டு, பன்றிகள் வெளிவராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். தரையை மாத்திரம் நன்றாக இறுக்கப்பட்ட சிமெண்ட் காங்கிரீட் தளம் போட்டு சுலபமாக கழுவி விடக் கூடியதாகவும் அமைக்க வேண்டும்.

திறந்த வெளிப் பாகத்தில் தண்ணீர் தேக்கம் படுத்துப் புரள இருத்தல் அவசியம். மூடியுள்ள பாகத்தில் சிமெண்டினாலோ அல்லது மரத்தினாலோ ஆன தீவன தண்ணீர் தொட்டிகள் வைக்கப்பட வேண்டும்.

பன்றிகள் ஈனுவதற்கு தனியாக இடம் தேவை. இவ்விடத்தில் குட்டிகளை ஈன்றவுடன் அவைகளைத் தாய்ப் பன்றியிடமிருந்து மிதி படாமலும் அறைவுபடாமலும் இருக்க, தக்க பாதுகாப்பு முறைகள் தேவை. பூமியிலிருந்து 3/4 அடி உயரத்திற்கு உயர்த்தப்பட்ட இரும்பு கிராதிகளின் மேல் தாய்ப் பன்றியைக் கிடத்த ஏற்பாடு செய்தால் குட்டிகள் சேதமடையாது. ஒரு தாய்ப் பன்றிக்கும், அதன் குட்டிகளுக்கும் தேவையான இடம் 8 அடிக்கு 13 அடி.

## ஈனுதல் :

ஈனுவதற்கான பிரத்தியேகமான தனி இடத்தில்தான் பன்றிகளை ஈனச் செய்யவேண்டும். குட்டிப் போட சுமார் ஒரு வாரம் முன்னரே சினைப் பன்றியை இவ்விடத்திற்கு கொண்டு வந்துவிட வேண்டும். குட்டி போடுவதற்கு ஒரு வாரம் முன்னதாக தீவனத்தை கொஞ்சம் கொஞ்சமாக குறைத்துவிட்டால் மலச்சிக்கல் ஏற்படாது. குட்டி போடும் இடம் ஈரமில்லாமலும், தாய்ப் பன்றி படுப்பதற்கு 3/4 அடி உயரமுள்ள இரும்புக் கிராதிகள் அமைக்கப்பட்ட படுக்கும் இடமும் தயாராக இருக்க வேண்டும்.

ஆண், பெண் சேர்க்கை தனித் தனியாக நடைபெற வேண்டும். சினை ஆன சுமார் 2 மாதத்திற்கு மேல் பால் மடி விரிவடைய ஆரம்பிக்கும். நல்ல பராமரிப்பு முறையில் வளர்க்கப்பட்ட பெண் பன்றி ஒரு தடவைக்கு 8 முதல் 14 குட்டிகள் வரை ஈனலாம். இக்குட்டிகள் 1 முதல் 2 மணி நேரத்திற்குள் வெளி வந்துவிடும். சில சமயங்களில் பிறப்பு உறுப்புகள் குட்டிகளின் கழுத்தில் சுற்றிக் கொண்டு, மூச்சுத் திணறல் ஏற்படுத்தி அவைகள் இறக்கக் கூடும். குட்டிப் போடும் போது பாதுகாப்பு அவசியம்.

பெண் பன்றிகளின் மடி அழற்சி வியாதியினால் பால் குறைவு ஏற்பட்டால் குட்டிகளை உடனே தனியே பிரித்துப் புட்டிப் பால் புகட்டி வளர்க்க வேண்டும். அல்லது வேறு பால் புகட்டும் தாய்ப் பன்றியோடு சேர்த்து விடலாம். அப்படிச் சேர்த்தால், தாய்ப் பன்றியின் சொந்த குட்டிகளுக்கும், விடப்பட்ட குட்டிகளுக்கும் வயது வித்தியாசம் 3 நாட்களுக்குள் இருக்க வேண்டும்.

குட்டிகள் பிறந்தவுடன் தாய்ப் பால் குடிக்க ஆரம்பிக்கின்றன. எப்பொழுதும் வலிவு மிக்க குட்டியே அதிகம் பால் கொடுக்கக் கூடிய காம்புகளைச் சப்ப ஆரம்பிக்கின்றன. ஒவ்வொரு குட்டியும், அவைகளுக்கு என்று தனித் தனிக் காம்புகளை எப்பொழுதும் ஏற்படுத்திக் கொள்ளும். 12 முதல் 14 முலைக் காம்புகள் உள்ள பெட்டைப் பன்றிகளைத் தான் அதிகம் இனவிருத்திக்கு உபயோகிக்க வேண்டும். பிறந்த 3 வாரத்திற்கு மேல் குட்டிகள் கணிசமான அளவு வேறு தீவனங்களை உட்கொள்ளக்கூடும். 3 வாரத்திற்கு மேல் தாய்ப் பன்றியின் பால் அளவு குறையத் தொடங்கும். 8 வாரத்திற்கு மேல் குட்டிகளை தாய்ப் பன்றியிடமிருந்து பிரித்து விடவேண்டும். அப்படி பிரிக்கப்பட்ட குட்டிகள் வேகமாக வளரும். பெண் பன்றியின் இளைப்பு, எடை குறைவையும் தவிர்க்கலாம். பெரிய பன்றியிடமிருந்து வியாதியையும், குடற் புழு முதலியவைகளையும் பரிமாறிக் கொள்ள வாய்ப்பு அதிகம் ஏற்படாது. மற்றும், பெண் பன்றி மீண்டும் பலனுக்கு வர அதிக நாட்கள் செல்லாது.

பால் புகட்டும், தாய்ப் பன்றியை 8 வாரம் ஆனவுடன் அப்புறப்படுத்தி விடவேண்டும் முதலில் கொஞ்சம் கொஞ்சமாக அப்புறப்படுத்தி, பிறகு நிரந்தரமாகப் பிரித்துவிட வேண்டும். சுரப்பு நின்ற 2 முதல் 5-வது நாட்களுக்குள் பெண் பன்றிகள் பருவத்திற்கு வரும். உடனே கிடாப் பன்றியுடன் சேர்த்துவிட வேண்டும்.

கொழுக்க வைக்கப்பட்ட பன்றிகளை 43 முதல் 63 கிலோ எடை வரும் வரை காத்திருந்து பிறகு இறைச்சிக்காக கொன்று விடலாம். சாதாரணமாக வெப்ப நாடுகளில் நன்கு பராமரிக்கப்பட்ட பன்றி 5 மாதத்தில் 54 கிலோ எடை அடையலாம். ஆண் பன்றிகள் சீக்கிரம் கொழுக்கும்.

பன்றிகளுக்கு உணவு- நேரந் தவறாமல்-கொடுக்க வேண்டும். ஆண் பெண் இரு இனங்களையும் 4 மாதம் வரை ஒன்றாக வளர்க்கலாம். பிறகு இனம் பிரித்துத் தனித் தனியாக வளர்க்க வேண்டும். பெண் பன்றிகள் 7—8 மாதங்கள் வயது வந்தவுடன் இனச் சேர்க்கை செய்யலாம். அல்லது 118 கிலோ எடை அடைந்து



விட்டால் சீக்கிரமாகவும் சேர்க்கலாம். ஒரு பருவத்திற்கும் மறு பருவத்திற்கும் இடைவெளி 21 நாட்கள். பருவப் புணர்ச்சி ஏற்பட்டு 12 முதல் 36 மணிக்குள் இரு முறையாவது ஆண் பன்றியைச் சேர்க்க வேண்டும். கிடாப் பன்றிகள் 8 மாதங்களில் பொலிவிற்குத் தயாராகும். பன்றிகளுக்கு பிரத்தியேகமான இனவிருத்திக்கென்று காலம் கிடையாது. வருடம் பூராவும் இனவிருத்தி செய்யலாம். அவ்வப்பொழுது கிடாப் பன்றிக்கு கோரைப் பல்லை நறுக்கி விடவேண்டும்.

பன்றிகளுக்குத் தீவனம் அளித்தலில் பிரத்தியேக கவனம் தேவை. பன்றியின் கிரயத்தில் 80 சதவிகிதம் தீவனச் செலவே. ஏனெனில், பன்றிகள் துரிதமாக வளர்வதால் தீவனம் அதிகமாகத் தேவைப்படுகிறது. **ஒரு பசுங் கன்றைவிட சுமார் 12 மடங்கு துரிதமாக பன்றி வளருகின்றது.**

பன்றிகள் கால்நடைகளைப் போல் நார்ச் சத்து அதிகமுள்ள உணவுப் பொருள்களை அதிகம் உண்ணாதவை. தரையிலும், தரையின் உள்ளும் உள்ள கிழங்கு தீவனங்களையும் தோண்டி எடுத்து உண்ணும் சக்தி வாய்ந்தவை.

சோளம், மரவள்ளிக்கிழங்கு, சக்கரை வள்ளிக்கிழங்கு, மீன் தூள், ஆடை அகற்றிய பால், வெல்லப் பாகு, கடலைப் பிண்ணாக்கு முதலியவைகளை ஆகாரமாகக் கொடுக்கலாம். தீவனத்துடன் 'ஆண்டிபையாடிக்'கு மருந்துகளைச் சேர்த்தால் கூடுதல் எடை கிடைப்பதுடன், ஆதாயமாக தீவனத்தை இறைச்சியாக மாற்றுவதற்கு உபயோகமாக உள்ளது.

தீவன வகைகளை உடைத்தோ, அறைத்தோ கொடுப்பதால் 20 சதவிகிதம் கூடுதலாக உணவின் தரத்தை உயர்த்துகிறது.

## தீவன அளவை

**4 மாதம் வயது வரையுள்ள பன்றிகளுக்கு :**

| | |
|---|---|
| சோளம் (அறைக்கப்பட்டது) | 60 பாகம் |
| கடலைப் பிண்ணாக்கு ... ... | 18 ,, |
| கோதுமைத் தவிடு ... ... | 10 ,, |
| மீன் தூள் ... ... | 10 ,, |
| உலோகச் சத்துக்கள் ... | 2 ,, |
| வைட்டமின் (ரோவிமிக்ஸ்) ... (100 கிலோ எடை தீவனத்திற்கு) | 15 கிராம் |
| 'ஆண்டிபையாடிக்' ... (100 கிலோ எடை தீவனத்திற்கு) | 10 முதல் 100 மில்லி கிராம் |

**நாள்தோறும் கொடுக்க வேண்டிய அளவு :**

| | | |
|---|---|---|
| ஒரு பன்றிக்கு ... | 0—4 வார வயது ... | தேவையில்லை |
| | 4—8 வார வயது ... | 0.5 கிலோ |
| | 8—12 வார வயது... | 1 கிலோ |
| | 12—16 வார வயது ... | 1.5 கிலோ |

**4 மாதத்திற்கு மேல் வயதுள்ள பன்றிகளுக்கு :**

| | |
|---|---|
| உடைத்த சோளம்... ... | ... 28 பாகம் |
| உடைத்த அரிசி ... ... | ... 27 ,, |
| கடலை பிண்ணாக்கு ... | ... 12 ,, |
| கோதுமைத் தவிடு ... | ... 28 ,, |
| மீன் தூள் ... ... | ... 5 ,, |
| மொத்தம் | ... 100 பாகம் |

நாள்தோறும் கொடுக்க வேண்டிய அளவு :

| | |
|---|---|
| 4 முதல் 6 மாதம் வரை ... | 2 கிலோ |
| 6 முதல் 8 மாதம் வரை ... | 2.5 கிலோ |
| சினைப் பன்றிகள் ... ... | 3—3.5 கிலோ |
| கிடாப் பன்றிகள் ... ... | 4 கிலோ |

**நோய்களும் தடுப்பு முறைகளும் :**

பன்றிகளுக்குக் கீழ்க்கண்ட முக்கியமான நோய்கள் தோன்றக்கூடும்

1. காய்ச்சல்
2. கோமாரி நோய்
3. அடைப்பான்
4. இன்ஃப்ளுவென்சா ஜுரம்
5. சயரோகம்
6. கருச்சிதைவு
7. ஸ்வெய்ன் எரிசிபெலஸ்
8. பன்றிக் குட்டிகளின் சோகை

மேலும், குடலிலும், சுவாசப் பையிலும் புழுக்கள் ஏற்படுவதும் உண்டு. குட்டிகளுக்கு 10—12 வாரத்தில் குடற் புழு கொல்லி மருந்து கொடுக்க வேண்டும்.

**பன்றிக் குட்டிகளின் சோகை :**

இவ்வியாதி கண்ட பன்றிகள் தீனி தின்னாமலும், மெலிந்தும் காணப்படும். மூச்சு விடுவதற்குச் சிறிது கஷ்டமாக இருக்கும். தலையிலும், தோள் பட்டைகளிலும் வீக்கம் காணலாம்.

**தடுப்பு முறைகள் :**

பன்றிக் குட்டிகளில் காணும் இரத்த சோகை நோய், இரத்தத்தில் இரும்புச் சத்தும், தாமிரச் சத்தும் குறைவாக இருப்பதால் ஏற்படலாம். இவ்விரு உலோகச் சத்துக்களையும் தீவனத்தில் கலந்து கொடுத்தால் இந்நோயிலிருந்து நிவர்த்தி அடையக்கூடும்.

பன்றிக் குட்டிகளைப் பசும்புல் தரைகளில் மேயவிட வேண்டும். பொதுவாக எல்லா தொத்து வியாதிகளும் பன்றிகளுக்கு வராமல் இருக்க பின் கண்டவாறு செய்ய வேண்டும்.

1. நல்ல காற்றோட்டமுள்ள பன்றிக் கூடங்களில் பன்றிகள் வளர்க்கப்பட வேண்டும்.

2. சத்துள்ளதும், சமச்சத்து உள்ளதுமான தீவனத்தைத் தேவையான அளவு கொடுக்க வேண்டும். உலோகச் சத்துக்களும், வைட்டமின் சத்துக்களும், 'ஆண்டிபையாட்டிக்' மருந்தையும் தீவனத்தில் கலந்து கொடுக்க வேண்டும்.

3. பன்றிகள் ஈனும் கூடத்தை ( Farrowing Pen ) காற்றோட்டம் உள்ளதாகவும், சுத்தமாகவும் வைத்துக் கொள்ள வேண்டும்.

4. சுத்தமான தண்ணீரை தினமும் கொடுக்க வேண்டும்.

5. அவ்வப்போது தடுப்பு ஊசிகள் போட்டு தொத்து வியாதிகள் வாரமல் தடுத்துக் கொள்ள வேண்டும்.

# சிறு துளி பெரு வெள்ளம்

## தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியில் முதலீடு செய்யுங்கள்

TNSC BANK

டெபாஸிட்டுகளுக்கு எங்கள் வட்டி விகிதங்கள் :

1. சீசன் டெபாஸிட்டுகள்- ரூ 1000/-மும் அதற்கு மேலும் — வருடத்திற்கு
   - 15 நாட்கள் முதல் 45 நாட்கள் வரை — 3.25%
   - 46 நாட்கள் முதல் 90 நாட்கள் வரை — 3.75%
2. தவணை டெபாஸிட்டுகள்- ரூ 100/-ம் அதற்கு மேலும்

| காலம் | வருடத்திற்கு |
|---|---|
| 91 நாட்களிலிருந்து 6 மாதங்களுக்கு குறைவாக | 5.75% |
| 6 மாதங்களிலிருந்து 9 மாதங்களுக்கு குறைவாக | 6.25% |
| 9 மாதங்களிலிருந்து 1 வருடத்திற்கு குறைவாக | 7.25% |
| 1 வருடமும் அதற்கு மேலும் ஆனால் 3 வருடங்களுக்கு குறைவாக | 8.25% |
| 3 வருடங்களும் அதற்கு மேலும் ஆனால் 5 வருடங்கள் வரை | 9.25% |
| 5 வருடங்களுக்கு மேல் | 10.25% |

3. சேவிங்ஸ் கணக்கு — 5.75%
4. நடப்பு (current) கணக்கு — வட்டி கிடையாது



## தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்,

379, நேதாஜி சுபாஷ்சந்திர போஸ் ரோடு, சென்னை-600 001
தந்தி : 'URBANK' போன் : 20367 (3 லைன்கள்)
டெலக்ஸ் : MS 7225

கிளைகள் : அண்ணா நகர், அண்ணா சாலை (காமதேனு), அண்ணா சாலை (அண்ணா சிலை), அசோக் நகர், பெஸண்ட் நகர், எழும்பூர், காந்தி நகர், கிரீன்வேஸ் ரோடு, ஜவஹர் நகர், கெல்லீஸ், தங்கசாலை, மைலாப்பூர், மைலாப்பூர் குளம், நுங்கம்பாக்கம், புரசைவாக்கம், ராயப்பேட்டை, ராஜா அண்ணாமலைபுரம், சாந்தோம், சாஸ்திரி நகர், ஷெனாய் நகர், தியாகராய நகர் & திருவல்லிக்கேணி.

TNSCB : 122/75

# மனித உணவில் பன்றி இறைச்சி!

பன்றி இறைச்சி புரதச் சத்தும், இரும்புச்சத்தும் நிறைந்த சுவையுள்ள மனித உணவு. ஆட்டு இறைச்சி, மாட்டிறைச்சி, கோழி மாமிசம் ஆகிய இறைச்சிகள் பல இருந்தபோதிலும், பன்றியின் இறைச்சியிலே ஒரு தனி சுவை உண்டு!

பன்றி ஒரு தூய்மையான மிருகம்! ஆனால் அது அசுத்தமாகவும், அசுத்தமான சூழ்நிலையிலும் காணப்படுவதற்கு காரணம் அதை வளர்ப்போர் அதன் பராமரிப்பில் அக்கறையும், அன்பும் செலுத்தாததே! அது வாழ்வதற்கென்றும், ஒதுங்குவதற்கென்றும், உறங்குவதற்கென்றும் ஓர் இருப்பிடம் கட்டிக் கொடுப்பேமேயானால், அவ்விருப்பிடத்தில் அது தான் உறங்குவதற்கென்று ஒரு பகுதியையும், தான் மலம், நீர் முதலியன கழிப்பதற்கென்று ஒரு பகுதியையும் பிரித்து வைத்துக் கொள்ளும். தான் உறங்குவதற்கென்று ஒதுக்கி வைத்திருக்கும் இடத்தில், அந்த நல்ல மிருகம் ஒரு போதும் மலமோ நீரோ கழிக்காது!

பன்றி பலவகை உணவை உட்கொள்ளும். பால், காய்கறிகள் கழிவு, வாழை, பலாப் பழத்தோல், பலா இலை, மாம்பழம், மாங்கொட்டை, புளியங்கொட்டை, பனங்கொட்டை, கிழங்குகள் ஆகியவைகள் பன்றிக்குச் சிறந்த உணவாகும். இதைத் தவிர புல் பூண்டுகளையும், கோரைக் கிழங்குகள், விட்டுப்போன நிலக்கடலை ஆகியவைகளையும் உட்கொள்ளும்.

**2.5 கிலோ உணவுப்பொருட்களை உண்டு அரைக்கிலோ இறைச்சியை உண்டாக்கித் தரும் இயல்பு பன்றிக்கு உள்ளது! இதுபோன்ற சக்தி ஆடுகளுக்கோ, மாடுகளுக்கோ, கோழிகளுக்கோ கிடையாது!**

நம் நாட்டில் பன்றிகள் தாமாகவே உணவைத் தேடிக் கொள்ள வேண்டியிருக்கிறது. மக்களின் கழிவு, வீடுகளி விருந்து கழியும் காய்கறிப் பொருட்கள், எச்சில் இலை, பாதை ஓரங்களில் வளரும் கோரைப்புல் போன்ற அகப்படக்கூடிய உணவுப் பொருட்களைப் பன்றிகள் தேடி உண்டு வளருகின்றன. ஆகையால் நம் நாட்டுப் பன்றிகள் சரியாக வளருவதற்கு 2 வருடங்களாகின்றன. நாட்டு பன்றிகளின் இறைச்சி சத்தற்றதாக இருக்கிறது. மேலும் நாட்டுப் பன்றிகளின் இறைச்சியை உண்பதில் மனிதர்களுக்கு சில வியாதிகள் ஏற்படுகின்றன.

மேல்நாட்டுப் பன்றிகளாகிய வெள்ளை நிற யார்க்ஷயர், கருப்புநிற பெர்க்ஷயர் இனங்கள் இறைச்சிக்கென்றே வளர்க்கப்படும் இனங்கள். இப்பன்றிகள் மேற்கூறிய பால், காய்கறிகள், கிழங்குகள், புற்கள் இவைகளைத் தின்று 6 மாதத்தில் நன்கு கொழுத்து மனிதர்களுக்கு ஏற்றதாக வளர்ந்து விடுகின்றன.

யார்க்ஷயர் பன்றிகளை வளர்ப்பதில் ஒருவித சிரமும் இருப்பதாகத் தெரியவில்லை. நம் வீட்டின் புழக் கடையில் வைத்து கழிவுப் பொருள்களையும், மனிதர்கள் உண்ணக் கூடாத பதார்த்தங்களையும், கடலை புண்ணாக்கு, கோதுமை தவிடு முதலிய தீவனங்களையும் அளித்து நன்கு பராமரித்தால், அவைகளிடமிருந்து நல்ல லாபம் அடையலாம்.

# பன்றிகளைப் பற்றிய சில விவரங்கள்!

1. சீமைப் பன்றிகள் 6 மாதத்திலேயே 100 கிலோ எடையை அடையக்கூடும்.

2. யார்க்ஷயர் இனப் பன்றிகள் ஒரு வருடத்தில் இரண்டு தடவை குட்டிகள் போடும்.

3. தடவைக்கு ஏறக்குறைய 10 குட்டிகள் போடும்.

4. பன்றிக் குட்டிகளின் எடை நாள்தோறும் ஏறிக் கொண்டே இருக்கும்.

5. பன்றி பிறந்து 8 முதல் 10 மாத காலமான பின் வம்சவிருத்திக்குப் பயன்படுகிறது.

6. பன்றிகளின் சினைக் காலம் சற்றேறக்குறைய 4 மாதங்களாகும்.

7. ஆண் பன்றிக் குட்டிகளைக் காயடித்து இறைச்சிக்காகக் கொழுக்க வைக்கலாம்.

8. பன்றியின் கொழுப்பு சமையலுக்குப் பயன்படுகிறது.

9. பன்றியின் இறைச்சியில் 'போர்க்', 'பேக்கன்', 'ஸாஸேஜ்' என்ற 3 வகை ரகங்கள் தயாரிக்கலாம்.

10. பன்றியின் உரோமம் 'புருஷ்' தயாரிக்க உதவுகின்றது.

11. பன்றியின் உள்ளுறுப்புகளும், கொழுப்பும், மருந்துப் பொருள்கள் தயாரிக்கப் பயன்படுகின்றன.

12. பன்றியின் வாயிலாக 32.5 கோடி பவுண்டு இறைச்சியும், 5 இலட்சம் பவுண்டு ரோமமும் நம் பாரதத்தில் கிடைக்கின்றது. இதன் மதிப்பு இறைச்சியின் மூலம் 25 கோடி ரூபாயும், ரோமம் மூலம் 6 இலட்சம் ரூபாயும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

# பன்றி இன வளர்ச்சி

நமது மாநிலத்தில் ஏறத்தாழ 5 இலட்சம் பன்றிகள் உள்ளன; ஆனால் அவை மனிதக்கழிவுப் பொருளால் வாழும் நிலையிலுள்ளன. இதன் காரணமாகப் பன்றி இறைச்சியைத் தங்கள் உணவு வகைகளில் ஒன்றாய்ச் சேர்த்துக் கொள்ளுவதற்கு மக்களிடையே ஓர் எதிர்ப்புணர்ச்சி இருந்து வருகிறது. ஆனால், புரதச் சத்துக் குறைவினால் வாடும் நம் மக்கள் பன்றி இறைச்சியைத் தம் உணவில் ஒரு பகுதியாக ஏற்றுக் கொள்வார்களேயானால், விலை மலிவானதும், விரைவான இனப் பெருக்கமுடையதுமான இவ்வினம் மக்களுக்கு ஓர் வரப்பிரசாதமாகவே அமையும் என்பதில் ஐயமில்லை. பன்றி இனவளர்ச்சியில் கால்நடைத் துறை மிகுந்த அக்கறை எடுத்துக்கொண்டுள்ளது. 8 அரசுப் பன்றி இன வளர்ச்சி நிலையங்களில் தரமான வெளிநாட்டு வகையைச் சேர்ந்த வெள்ளை யார்க்ஷயர் பன்றிகளை வளர்க்கத் தொடங்கியுள்ளது. இந்த நிலையங்களில் யார்க்ஷயர் பன்றிகள் வளர்க்கப்பட்டு, பன்றி இனப்பெருக்கம் செய்வோருக்கு வழங்கப்படுகின்றன. பன்றி இறைச்சி மன்றங்கள் அமைக்கப்பட்டு அவற்றின் மூலமாகப் பன்றி இறைச்சி உண்ணும் பழக்கம் மக்களிடையே பரப்பப் படுகின்றன. இம்மாநிலத்தில் இத்தகைய மன்றங்கள் மொத்தம் 54 உள்ளன.



# ஆதாயத்தோடு ஆடு வளர்ப்பது எப்படி?

**கா**ல்நடைகளிலேயே பராமரிப்பதற்குச் சிரமமில்லாததும், தனது தீவனத்திற்கென தன்னை வளர்ப்போருக்கு எந்தச் செலவும் வைக்காமலும் அதே நேரத்தில் வருமானத்தை அள்ளித் தருவதுமான கால்நடை, ஆடு ஒன்றேயாகும்!

நமது தமிழ் நாட்டில் 73 இலட்சம் ஆடுகளும், 34 இலட்சம் வெள்ளாடுகளும் இருக்கின்றன. வெள்ளாடுகள் அனைத்தும் முக்கியமாக இறைச்சிக்காகவே வளர்க்கப்பட்டு வருகின்றன. செம்மறியாடுகளும், குறும்பாடுகளும் பட்டி மறித்துக் கிடைகள் போட்டு நிலத்தை வளம் பெறச் செய்வதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன. குறும்பாடுகளிலிருந்து கிடைக்கப் பெறும் கம்பளி ரோமம் மிகக் குறைவானது. செம்மறி ஆடுகள் இறைச்சியாகப் பயன்படுவதுடன் அதன் தோல் நல்ல விலையும் பெற்றுத் தருகின்றன. ஓர் ஆண்டுக்கு நமது தமிழ் நாட்டில் சுமார் 53 இலட்சம் ரூபாய் மதிப்பு உள்ள ஆட்டிறைச்சி உட்கொள்ளப்பட்டு வருகிறது. இறைச்சியைத் தவிர ஆடுகளிலிருந்து கிடைக்கக் கூடிய முக்கிய உபரி வருமானங்கள் உரம், தோல், கம்பளம், வெள்ளாட்டுப் பால் முதலியன. ஓர் ஆட்டின் மூலம் ஓராண்டுக்கு 0.5 டன் உரம் கிடைக்கிறது. குறைந்த பட்சம் டன் ரூபாய் 15/- என்ற அளவில் வைத்துக் கொண்டால் கூட, ஆட்டு உரத்தின் மூலம் மட்டும் நம் தமிழ் நாட்டுக்கு ஆண்டு ஒன்றுக்கு 75 கோடி ரூபாய் வருமானம் வருகிறது. ஆட்டுத் தோலின் மூலம் நமக்கு ஓராண்டுக்கு 8 கோடி ரூபாய் கிடைக்கிறது. மற்றும் தமிழ்நாட்டில் வெப்ப தட்ப நிலைக்கு கம்பளி ரோமம் நீலகிரி மாவட்டத்தில் உள்ள நீலகிரி இன ஆட்டில் மட்டும் கிடைக்கிறது. மற்ற இடங்களில் கிடைப்பது முரட்டுக் கம்பள ரோமம் ஆகும். இதன் மூலம் ஓராண்டுக்குக் கிடைக்கும் வருமானம் ரூபாய் 3 இலட்சம் ஆகும்.

வெள்ளாட்டைப் பொறுத்த வரையில் அது 'ஏழையின் பசு' என அழைக்கப்படுகிறது. வெள்ளாட்டுப் பால் மிகச் சத்து நிறைந்தது. ஊட்டம் மிகுந்தது. எளிதில் செரிக்கப்படுகிறது. வயதானோரும் குழந்தைகளும் நோயாளிகளும் உண்டு உடல் தேற வல்லது.

தமிழ்நாட்டில் மாண்டியா மேச்சேரி, திருச்சி, கருங்குறும்பை, நெல்லூர், சூலூர், கீழ்க்கரிசல் அல்லது ராமநாதபுரம், நீலகிரி ஆகிய இனங்கள் உள்ளன. இதில் திருச்சி, கருங்குறும்பை, சூலூர், நீலகிரி ஆகிய இனங்கள் ரோம இனங்களாவன. மற்றவை இறைச்சிக்காகவே வளர்க்கப்படுவனவாகும்.

ரோம இனங்களில் நீலகிரி மிக மெல்லிய உன்னத கம்பள உரோமத்தைக் கொடுக்கிறது. ஏனைய இனங்கள் முரட்டு ரோமங்களைக் கொடுக்கின்றன. இறைச்சி இனங்களில் மாண்டியாவும், நெல்லூர் இனமும் எடை மிகுதியுள்ளவை.

தலைச்சேரி, ஜம்னுபாரி போன்ற நல்ல பால் கொடுக்கும் வெள்ளாடுகளைச் சிலர் வளர்க்கின்றனர். அவைகளில் தலைச்சேரி இனம் சுமார் 750 மில்லி முதல் 1 லிட்டர் வரையும், ஜம்னுபாரி இனம் சுமார் 1.5 லிட்டர் பாலும் கொடுக்கும் தன்மை வாய்ந்தது. இவை நாட்டுப் புறத்தேயுள்ள சில பசுக்களை விட இலாபம் பயப்பவைகளாகவே உள்ளன. குறைந்த செலவில் ஓரளவு நல்ல பால் கொடுக்கும் இவ்வெள்ளாடுகளை வளர்ப்பது நல்லது.

நமது நாட்டில் ஆடு வளர்ப்பு இன்னும் பின் தங்கிய நிலையிலேயே உள்ளது. ஆடுகள் பட்டிகளில் 40 அல்லது 50 என ஒருங்கே வளர்க்கப்படலாம். விஞ்ஞான ரீதியில் அதன் தேவையைக் கவனித்து அதனால் பெறக் கூடிய பூரண பலனைப் பெற ஆடு வளர்ப்போர் முன்வருவதில்லை. இன்றைய பொழுதில் ஆடுகள் பயிரிடப்படும் நிலங்களில் கிடை போடப்பட்டுப் பட்டிகளில் அடைக்கப்பட்டு வளர்க்கப்படுகின்றன. மேற்படி நிலங்களிலே அன்றி ஏனைய வரப்பு வாய்க்கால் கரைகளிலே கிடைக்கும் புல்தான் அதற்கு முக்கிய உணவாக இருக்கிறது. இது தவிர அவற்றுக்கென மேய்ச்சல் நிலங்களும் இல்லை. அன்றி வளர்ப்போரின் அறியாமை காரணமாக நமது ஆடுகள் இரத்தத்தை உறிஞ்சும் குடற் புழுக்களால் பாதிக்கப்பட்டு, நலிந்து கிடக்கின்றன. இதுவன்றி அம்மை, அடைப்பான், குடல் வாத நோய் போன்ற நோய்களால் பீடிக்கப்பட்டு, இறக்கவும் செய்கின்றன. இந்நோய்களுக்குத் தடுப்பு மருந்து இருந்தும்—இது இலவசமாக கால்நடை வளர்ப்புத் துறையினரால் போடப்பட்டு வந்தாலும்

இதன் முக்கியத்துவத்தை உணராமல் ஆடு வளர்ப்போர் தங்களுக்கு நட்டத்தைத் தேடிக் கொள்கிறார்கள். இதுவன்றி அம்மை வந்த ஆட்டின்தோல் பதப்படுத்தும் போது ஓட்டைகள் விழுந்து மதிப்பு குறைந்து போய் விடுகிறது. ஆடு சாவது இல்லாமல் அதன் தோல் மூலம் கிடைக்கும் வருமானமும் குறைந்துவிடுகிறது.

இத்தகைய சூழ்நிலையில் இலாபகரமாக ஆடுகளை வளர்க்கப் பின்கண்ட முறைகளை மேற்கொள்ளவேண்டும்.

1. ஆடு வளர்ப்போர் தாங்கள் வைத்திருக்கும் ஆடுகளை தேவைக்குத் தக்கபடியும் இலாப நோக்கோடும் வைத்துக் கொள்ள வேண்டும். ஆடுகளை அனாவசியமாகவோ தேவைக்கு அதிகமாகவோ வைத்திருக்கக் கூடாது. 40 பெட்டை ஆடுகளுக்கு ஒரு கிடா ஆடு இருந்தால் போதுமானது. இந்த விகிதத்திற்கு மேல் உள்ள கிடாக்களை இரண்டாவது மாதத்திலேயே காயடித்துவிட வேண்டும். இப்படிக் காயடித்த கிடாக்களை அவற்றுக்கு 6 முதல் 8 மாதங்கள் நிரம்பியவுடன் விற்றுவிட வேண்டும். இவ்வாறு செய்தால்தான் அந்தக் கிடாக்களின் பூரண பலன் கிடைக்கும். அதற்கு மேல் வைத்துக் கொண்டிருப்பது நட்டத்தைத் தான் கொடுக்கும். ஏனென்றால் அந்தக் கிடாக்களின் எடை அதற்கு மேல் கூடாது. இவைகள் பலன் தரக் கூடிய பெட்டை ஆடுகளுக்குக் கிடைக்கக்கூடிய மேய்ச்சலில் பலனில்லாமல் பங்குக்கு வருகின்றன.

அடுத்தபடியாக பெட்டை ஆடுகளை 3 முதல் 5 குட்டிகள் ஈன்றவுடன் விற்பனை செய்துவிட வேண்டும். இல்லாவிட்டால் கிழட்டு பெட்டைகளைப் பராமரிப்பதின் மூலம் கிடைக்கக்கூடிய குட்டிகளின் எண்ணிக்கை குறைந்து போகும்.

2. இரண்டாவதாக ஆடு வளர்ப்போர் தங்கள் எல்லா ஆடுகளுக்கும் கட்டாயம் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை குடற் புழு நீக்க மருந்து கொடுக்க வேண்டும். குடற் புழுக்கள் ஆடுகளின் இரத்தத்தை உறிஞ்சிக் குடித்து அவற்றை நலியச் செய்யும். இவற்றால் ஆடுகள் இறப்பது உண்டு. இந்தச் சேதத்தை முதலில் தடுக்க வேண்டும். கால்நடை வளர்ப்புத் துறையினர் குடற்புழு நீக்க மருந்தை இலவசமாக பட்டிகளிலேயே வந்து ஆடுகளுக்குக் கொடுக்கின்றனர். இந்த வாய்ப்பை ஆடு வளர்ப்போர் அனைவரும் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை இவ்வாறு குடற்புழு நீக்க மருந்து கொடுப்பதின் மூலம் ஒரு ஆண்டுக்கு 5 கிலோவுக்கு குறையாமல் ஒரு ஆட்டின் எடை கூடுகிறது. அதாவது சுமார் 2.5 கிலோ இறைச்சி அதிகமாகிறது. அதன் மூலம் ஒரு கிலோ ரூபாய் 6 வீதம் 15 ரூபாய் கிடைக்க ஏதுவாகிறது. ஆனால் இதற்கு ஆகும் செலவோ மிகச் சாதாரணமாகும். அதாவது ஆண்டிற்கு 20 பைசாவுக்குள் அடங்கும். இதுபோல் ஆடுகளின் இரத்தத்தை உறிஞ்சிச் சேதம் விளைவிக்கும் மற்றொரு காரணம் உண்ணிகளும், பேன்களும் ஆகும். இவை ஆட்டுப் பட்டிகளிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் அசுத்தமாக இருக்கும்போது பெருகுகின்றன. இவை ஆடுகளின் இரத்தத்தை உறிஞ்சி நலிய வைப்பதோடல்லாமல் சில நோய்களையும் ஒரு ஆட்டிலிருந்து மற்றொன்றிற்குப் பரப்புகின்றன. இத்தகைய உண்ணிகளையும், பேன்களையும் 5 சத டி.டி.டி. (D. D. T.) கரைசலை ஆடுகளின் மேல் தெளிப்பதின் மூலம் அழிக்கலாம். கம்பளரோம ஆடுகளாக இருப்பின் தெளிப்பான் மூலம் மருந்தடிப்பதற்குப் பதிலாக மருந்து கலந்த நீர் நிரம்பிய தொட்டிகளில் அவைகளை அமுக்கி எடுக்க வேண்டும்.



அதிக பால் தரும்

ஜம்நாபாரி ஆடு!

3. மூன்றாவதாக ஆடுகளுக்கு வரும் நோய்களைப் பற்றி ஆடு வளர்ப்போர் தெரிந்து வைத்திருக்க வேண்டும். முக்கியமாக அம்மை, அடைப்பான், துள்ளுமாரி நோய் போன்ற நோய்களின் அறிகுறியையும் அவை சாதாரணமாகத் தென்படும் காலங்களையும் அறிந்திருக்க வேண்டும். அம்மை நோய் சாதாரணமாகக் கோடைக்காலத்திலும், துள்ளுமாரி நோய் மழை பெய்து புற்கள் துளிர் விட ஆரம்பிக்கும் காலத்திலும் வருகின்றன. இந்த நோய்களுக்குத் தடுப்பு ஊசிகள் இருக்கின்றன. இவை கால்நடை வளர்ப்புத் துறையினரால் இலவசமாகவே போடப்படுகின்றன. நோய் வரக் கூடிய காலங்களுக்குச் சற்று முன்னதாகவே இந்தத் தடுப்புக்களைக் கால்நடை வளர்ப்புத் துறையினரால் போட்டுக் கொள்ளவேண்டும்.

4. ஆடுகள் மூலம் முழு வருமானத்தை அடைய வேண்டுமானால், அதற்கென மேய்ச்சல் நிலங்கள் ஒதுக்க வேண்டும். தற்பொழுது மேய்ச்சல் நிலங்கள் குறைந்துவிட்டன. ஆடுகளெல்லாம் அறுவடை செய்யப்பட்ட நிலங்களில் கிடைப்பதை உண்டு வளர்கின்றன. மேய்ச்சல் நிலங்களில் தீனிப் புல் வகைகள் பயிரிடப்பட வேண்டும். இம் மேய்ச்சல் தலைப் பரப்பைப் பகுதி பகுதியாகப் பிரித்துக் கொண்டு, ஒவ்வொரு பகுதியாக ஆடுகளை மேய்த்து வர வேண்டும். ஒரு முறை மேய்ந்த பகுதி மறுபடி மேயக் குறைந்தது 2 மாதங்களாவது இடைவெளி இருக்கும்படி

பகுதி பிரித்து மேய்க்க வேண்டும். இதன் மூலம் மேயப்பட்ட பகுதியில் மறுபடி பூரணமாகப் புல் வளர மேய்ச்சல் நிலத்திற்குக் காலமும், ஓய்வும் கிடைக்கிறது. அன்றி ஆடுகள், சாணியில் வெளி வந்து அவற்றால் மறுபடியும் உட்கொள்ளப் படக் கூடிய குடற் புழுக்களின் முட்டைகள் இந்த இடை வெளியில் நலிந்து, மடிந்து மக்க ஏதுவாகிறது.

தேவையான உயிர்ச் சத்துக்கள் நல்ல மேய்ச்சல் வெளிகளிலிருந்து கிடைக்கின்றன. ஆகையால் ஆடுகளுக்கு நல்ல மேய்ச்சல் தரை இருக்க வேண்டும்.

5. •ஐந்தாவதாக, ஆடுகளுக்கு கலப்புத் தீனி கொடுத்து வளர்க்க வேண்டும். அப்பொழுதுதான் ஆடுகளின் எடை கூடி வருவாய் பெருகும்.

ஆட்டுக் குட்டிகளை 4 மாதம் வரை தாயிடம் பால் அருந்த அனுமதிப்பதுடன், சிறிது சிறிதாகப் புல் தீவனமும் உடன் கொடுக்கலாம். பிறகுகலப்புத் தீவனம் கீழ்க்கண்டபடி தயாரிக்கவும் .:

| | | பாகம் |
|---|---|---|
| சோளம் | ... | 50 |
| கடலைப் பிண்ணாக்கு | | 28 |
| கோதுமைத் தவிடு | | 20 |
| எலும்புத் தூள் (மினரல் மிக்சர்) | | 1 |
| உப்பு | ... | 1 |
| மொத்தம் | ... | 100 |

ஆடுகளுக்குச் சத்துள்ள புல் தீவனம் கொடுக்கப்பட வேண்டும். சாதாரணமாக இந்த அளவு, ஆடுகளின் எடையைக் கொண்டு கணக்கிடப்படுகிறது. எடையில் 2 முதல் 3 சதவிகிதம் ஈரமற்ற புல் தீவனம் என்றுநிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதாவது ஒரு ஆடு 60 கி. கிராம் எடை இருந்தால் அதற்கு 2 முதல் 3 கிலோ ஈரமற்ற புல் தீவனம் கொடுக்க வேண்டும்.

ஆடுகளுக்கு உப்பும், தாதுப் பொருள்களில் சுண்ணாம்பும் எலும்புச் சத்தும் தனியாகக் கொடுக்கப்பட வேண்டும்.





உப்பை ஒரு தொட்டியில் போட்டு வைத்தால் ஆடுகள் தங்களுக்கு வேண்டிய அளவு உட்கொள்ளும். தாதுப் பொருள்கள் கிடைக்க, தாதுப் பொருள் கலவை ஒன்றைத் தனியாக வைத்துவிடலாம்.



## ஆடுகளுக்குத் தேவையான அன்றாட கலப்புத் தீனி!

| | இனம் | எடை (கிலோ) | | கலப்புத் தீவனம் (கிராம்கள்) |
|---|---|---|---|---|
| 1. | ஆடு ... ... | 15 | வரை | 100 |
| | | 16—20 | ,, | 150 |
| | | 21—25 | ,, | 200 |
| | | 26—30 | ,, | 240 |
| | | 31—40 | ,, | 260 |
| | | 41—50 | ,, | 320 |
| | | 50க்கு மேல் | | 350 |
| 2. | பொலி கிடா ... | | | 450 |
| 3. | சினை ஆடு ... | | | 400 |
| 4. | தாய் ஆடு ... | | | 500 |

# திருவேற்காடு அருள்திரு தேவி கருமாரி அம்மன் திருக்கோயில்



## ஆலயம் ஆற்றும் அரும்பணிகள்

செங்கற்பட்டு மாவட்டம் திருப்பெரும்புதூர் வட்டத்தில் அமைந்துள்ள ஊர் திருவேற்காடு.

சென்னையிலிருந்து வடமேற்கில் பூவிருந்தவல்லி பெருவழிச் சாலையில் 16 கிலோ மீட்டர் தொலைவில் வேலப்பன் சாவடி என்னும் கிராமம் உள்ளது. அங்கிருந்து வடக்கே 2 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது திருவேற்காடு.

திருஞானசம்பந்தராலும், அருணகிரிநாதராலும் பாடப் பெற்ற திருத்தலமான திருவேற்காட்டில்தான் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான மூர்க்க நாயனார் அவதரித்தார். இவ்வாறு பழம்பெரும் புகழுக்குரிய திருவேற்காட்டில் அமைந்திருக்கும் தேவி கருமாரி அம்மன் திருக்கோயில் நாளுக்கு நாள் வளர்ந்துவரும் திருக்கோயிலாகும். சென்னை நகரத்திலும் சுற்றுப்புறங்களிலும் உள்ள மக்களால் போற்றப்பட்டு — வணங்கப்படும் திருக்கோயிலாக விளங்குகிறது கருமாரிஅம்மன் திருக்கோயில்.

நாள்தோறும் சென்னை பிராட்வே பேருந்து நிலையத்திலிருந்து, 50, 53 வழித் தடங்களும் வள்ளலார் நகரத்திலிருந்து 59 வழித் தடப் பேருந்தும், பெரம்பூரிலிருந்து 29-இ, வழித் தடப் பேருந்தும் திருவேற்காட்டிற்குச் செல்கின்றன. ஞாயிறுதோறும் பெரும்பாலான பேருந்துத் தொடக்க நிலையங்களிலிருந்து 40-க்கு மேற்பட்ட பேருந்துகள் திருவேற்காட்டுக்குச் செல்கின்றன.

நாளுக்கு நாள் வளர்ந்து வரும் இந்த ஆலயம் கடந்த மூன்று ஆண்டுகளில் மாபெரும் வளர்ச்சி அடைந்துள்ளது.

1972-ஆம் ஆண்டு 'மே' மாதம் 2-ஆம் நாளன்று திருவேற்காடு அருள்திரு தேவி கருமாரி அம்மன் திருக்கோயிலின் கணக்காக வங்கியிலிருந்த தொகை ரூ.75,000. அப்பொழுது ஆண்டு வருவாய் இரண்டரை இலட்சம் ரூபாய். உண்டியல் வருமானம் மாதந்தோறும் ரூ. 2,800 முதல் 3,200 வரை ஆகும்.

---

**சமய நெறிமுறைகளில் எவ்வகையிலும் தலையிடாமல், தமிழகத்தின் கலைப்பெட்டகங்களாய் அமைந்துள்ள திருக்கோயில்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு, அவைகளைப் பேணிக்காக்கும் பெரும் பொறுப்பில் முனைப்போடு செயல்பட்டு வருகிறது நமது அரசு.**

**அரசின் ஆக்கத்தாலும் அறங்காவலர்களின் ஊக்கத்தாலும் நிர்வாக அமைப்பின் செயல்திறனும் மக்களின் நல்லுணர்வுகளாலும் சமயப் பற்றுளர்களின் முயற்சிகளாலும் திருக்கோயில்கள் செம்மையாக வளர்ந்து வருகின்றன.**

**அந்தத் திருக்கோயில்கள் வெறும் வழிபடும் இடங்களாக மட்டும் அமையாமல் கலை வளர்க்கும் நிலையங்களாய், பிணியகற்றும் மனைகளாய், அறியாமை இருள்நீக்கி ஒளி வழங்கும் இல்லங்களாய்த் திகழ்ந்து சமுதாயப் பணியாற்றும் நற்கூடங்களாய் அமையவே உருவாயின என்னும் உண்மையின் அடிப்படையை அனைவரும் உணரும் வகையில் அரும்பணியாற்றும் திருக்கோயில்கள் பற்றிய செய்திகள் இங்கு சுருக்கி வெளியிடப்படுகிறது. இந்த இதழில் திருவேற்காடு அருள்திரு தேவிகருமாரியம்மன் திருக்கோயில் பற்றிய செய்திகள் வெளியிடப்படுகின்றன.**



அச்சுப் பொறியில் பயிற்சி

ஆனால், இப்பொழுது ஆலயக் கணக்கில் உள்ள தொகை ரூ. 18 இலட்சமாகும். ஆண்டு வருமானம் ரூ. 26 இலட்சமாகும். மாதந்தோறும் உண்டியல் வருமானம் ஏறத்தாழ ரூ. 80,000 ஆகும்.

அப்பொழுது எல்லாம், அறக் கட்டளை கிடையாது. 'சூப்பர் டிரஸ்ட்' மூலம் உச்சி கால பூஜை, இராக் கால பூஜை ஆகிய இரு வேளை பூஜைகள் மட்டும் நடைபெற்று வந்தன.

ஆனால் இப்பொழுது, நபர் ஒன்றுக்கு ரூ. 301 வீதம் 365 பேரிடம் பணம் சேர்த்து 'கோ' பூஜை அறக்கட்டளை என்ற அமைப்பு உருவாக்கப்பட்டு, அந்தத் தொகை முழுவதும் இந்தியன் வங்கியில் வைப்புத் தொகையாக வைக்கப்பட்டு, அதன் வட்டியின் மூலம் 'கோ' பூஜை நாள்தோறும் நடைபெற்று வருகிறது.

ஏறத்தாழ 5,001 உறுப்பினர்களிடம் ஆயுள் சந்தா ரூ. 51 வீதம் வசூல் செய்யப்பட்டு, காலை பூஜை அறக்கட்டளை என்ற பெயரில் இந்தியன் வங்கியில் வைப்புத் தொகை வைக்கப்பட்டு அதன் வட்டியின் மூலம் காலை பூஜை நடைபெறுகிறது.

சூப்பர் பவர் டிரஸ்டின் மூலம் உச்சிக் கால பூஜை நடைபெற்று வருகிறது.

பிற்பகல் 1,008 திருநாம குங்கும அருச்சனை அறக்கட்டளை என்ற அமைப்புக்கு நபர் ஒன்றுக்கு ரூ. 501 வீதம் 366 நாட்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

இராக் கால பூஜை, சூப்பர் பவர் டிரஸ்டின் மூலம் நடைபெற்று வருகிறது.

திருமதி. சீதம்மாள் அறக்கட்டளை, திருமதி. ஜெயம்மா சீனிவாசன் அறக்கட்டளை ஆகியவை மூலம் சந்நிதித் திருவிளக்குக் கைங்கரியம், விசேட நாட்களில் அபிஷேகம், பூஜைகள் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

தேவி கருமாரியம்மன் திருக்கோயில் திருமண மண்டபம் ரூபாய் 65,000 செலவில் கட்டப்பட்டு வருகிறது. மூன்றரை இலட்சம் ரூபாய் செலவில் கோவிலுக்குத் திருத்தேர் தயாராகிறது.

திருவேற்காடு குடிநீர்த் திட்டத்திற்கு ரூபாய் மூன்று இலட்சம் செலவில் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

திருக்கோயிலின் எதிரில் திருச்சாம்பற் பொய்கைத் தெப்பக் குளம் ரூபாய் நான்கு இலட்சம் செலவில் கட்டப்பட்டு வருகின்றது.

கடந்த மூன்று ஆண்டுகளில் இந்தத் திருக்கோயில் அடைந்துள்ள வளர்ச்சிகளை அறங்காவலர் குழுத் தலைவர் திரு. மணிவண்ணன் அவர்கள் பட்டியல் போட்டுக் காட்டுகின்றார்.

''பசு மடம், புற்று மண்டபம், கருவறையைச் சுற்றிக் குளிநீர் பளிங்குத் தொட்டி, அருச்சனைச் சீட்டு விற்பனைக் கூடம், நிருவாக அலுவலர் குடியிருப்பு, வேலப்பன்சாவடியில் திருக்கோயில் நுழைவு வாயில், ஐந்து சிறு குடில்கள், வெளிப் பிரகாரத்தில் திரு மதில்கள், அர்ச்சகர்கள் குடியிருப்புகள், ஊழியர்கள் குடியிருப்புகள், அலுவலகக் கட்டடங்கள், திருக்குளத்தின் பக்கத்தில் கல்மண்டபம், திருக்கோயில் மதிலுக்குள் உள்ளடங்கியவாறு 24 அறைகள், திரு மதிலைச் சுற்றிச் சேவார்த்திகள்



தையற் பயிற்சி



சிறு குடில்கள்



தட்டச்சுப் பயிற்சி



தங்கக் கவசம்.



கட்டப்பட்டு வரும் திருசாம்பற் பொய்கைத் தெப்பக் குளம்.

அறைகள்—இப்படி நீண்ட பட்டியலைத் திரு. மணிவண்ணன் அடுக்கிக் கொண்டே போகிறார்.

அந்த அளவுக்கு நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்து வரும் இந்தத் திருக்கோயிலினாலேயே திருவேற்காடு ஊரே புதிய வளர்ச்சியைப் பெற்று வருகிறது என்றால் மிகையாகாது.

திருவேற்காட்டில் ஜீவரத்தினத்தம்மாள் அளித்த நன்கொடையின் மூலம் ஆரம்பிக்கப்பட்ட உயர்நிலைப் பள்ளி ஒன்றும் அதனைச் சார்ந்த ஏழை மாணவர்கள் விடுதியும் உள்ளன.

சுழற் சங்கம் (மேற்குப் பிரிவு) ஆதரவில் சுமார் ரூ. 60,000 செலவில் ஒரு மருத்துவ விடுதி கட்டப்பெற்று, சுவாமி விவேகானந்தர் சங்க மேற்பார்வையில் திருக்கோயிலார் மருத்துவ வசதியுடன் நடைபெற்றுக் கொண்டு வருகிறது.

இந்தச் சுழற் சங்க ஆதரவில் மாணவர்களுக்கு ( Vocational Centre ) கைத்தொழில் பயிற்சிக் கூடம் ஒன்று நடத்தப் பெற்று வருகிறது. இங்கே தட்டச்சுச் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. பெண்களுக்குத் தையற் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

சூப்பர் பவர் டிரஸ்டின்கீழ் 10 மாணவர்களைக் கொண்ட அகத்தியர் வேத பாடசாலை நடத்தப் பட்டு வருகிறது.

திருவேற்காட்டை அடுத்த அர்ச்சுன மேடு என்ற இடத்தில் திரு. பாப்பையா நாயுடு அவர்களின் தந்தையார் பெயரில் கோவி சின்னசாமி நாயுடு தொடக்கப்பள்ளி நிறுவப்பட்டு நடத்தப்பட்டு வருகிறது.

அருள்திரு கருமாரி அம்மன் ஆலயத்தின் சார்பில் சித்த மருத்துவ மனையும் செயல்படுகிறது.

சைதாப்பேட்டையிலுள்ள நரிக் குறவர் பள்ளிக்கூடத்திற்கு ரூபாய் 50,000 செலவில் மாணவர் விடுதியும் திருக்கோயில் சார்பில் கட்டிக் கொடுக்கவிருக்கின்றார்கள்.

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணும் பணியாகப் பல்வேறு அரும்பணிகளைத் திருக்கோயில் தொடர்ந்து செய்து வருகிறது.

இலவசக் கண்ணொளித் திட்டம், கை ரிக்ஷா ஒழிப்புத் திட்டம், ஊனமுற்றோர் நல்வாழ்வுத் திட்டம் முதலிய அனைத்துக்கும் திருக்கோயில் உதவியுள்ளது.

சுருங்கக் கூறின், திருவேற்காடு பகுதி முழுவதும் வளர்ச்சி அடையவும் அந்தச் சுற்று வட்டார மக்கள் பற்பல நன்மைகளை அடையவும் அருள்திரு தேவி கருமாரி அம்மன் திருக்கோயிலின் பணிகளும் வளர்ச்சியும் பேருதவியாக உள்ளன என்பது உறுதி.

—மாமூலன்





தேர் தயாராகிறது

திருமண மண்டபம்





# ஊனமுற்றோர்க்கு உதவிட உறுதி கொள்வோம்


எல்.எம். வாசகம்
ஐ. ஏ. எஸ்
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர்.


குழந்தைப்பருவம் நமது வாழ்க்கையின் பிற்கால வளர்ச்சிக்கு அடிகோலும் பருவமாகும். ஆயினும், இந்தியாவிலே எண்ணற்ற குழந்தைகள் அப்பருவத்தில் பல்வேறு ஊனங்களை விளைவிக்கின்ற நோய்கள் ஏற்படுவதற்கான காரணங்கள், அந்நோய்களைத் தீர்க்கும் மருத்துவ முறைகள் இவை பற்றிய நமது அனுபவ அறிவும் எவ்வளவு சிறுமையானவை என்பதை நாம் அடக்கத்தோடு ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். அறிவியலிலும், மருந்துகள் அறுவைச் சிகிச்சை மருத்துவத் துறையிலும் நாம் குறிப்பிடத்தக்க அளவுக்கு முன்னேறிவிட்டோம் என்று பெருமிதம் அடைவது நாமே நமது உள்ளறிவை ஏமாற்றிக் கொள்வதாகும். எனவே இந்த ஆண்டில் ''உடல் ஊனமுற்றோர் உலக நாளில்'' உடல் ஊனங்களைத் தடுக்கும் பணிகள் பற்றி நாம் கருத்துச் செலுத்துவது மிகச் சரியானதாக இருக்கும்.

பொதுவாக உடல் ஊனங்களை ஏற்படுத்தும் நிலைமைகள் பற்றியும், அவற்றைப் போக்க என்ன செய்யலாம் என்பதைப் பற்றியும் சராசரி இந்தியக் குடும்பம் அறிந்திருக்கவில்லை. எனவே, அக் குடும்பம் இத்தகைய உடல் ஊனங்களைப் பற்றி எண்ணிப் பாராமல் புறக்கணிக்கிறது. இதன் விளைவாக, அந்த நிலைமைகள் நாளடைவில் வளர்ந்து பூதாகாரமாக உருவெடுத்து, அந்த உடல் ஊனத்தைக் களைய முடியாமற் போய்விடுகிறது. நம் மக்கள் அறியாமை வயப்பட்டிருத்தல் ஒருபுறமிருக்க, தாங்கள் செய்த பாவங்களுக்கு தெய்வம் தங்களுக்கு அளிக்கும் தண்டனையே இந்த உடல் ஊனங்கள் என்கிற நம்பிக்கையிலும் அவர்கள் ஆழ்ந்துள்ளனர். எனவே, உடல் ஊனத்தைக் களைந்து, இயல்பு நிலைக்கு வரச் செய்யப்படும் முயற்சிகளை, அந்த உடல் ஊனமுற்றவனே தடுக்கின்றான்; அல்லது அவனது குடும்பத்தார் 'எல்லாம் விதிப்படிதான் நடக்கும்' என்று அவனைக் கவனிக்காமல் வாளாவிருந்துவிடுகின்றனர். இப்படிப்பட்ட அறியாமையும் மூட நம்பிக்கையும் சேர்ந்துள்ள நிலைமையைப்பற்றி அறிவதன் மூலம் நமக்குத் தெரிவது என்ன? உடல் ஊனத்தை விளைவிப்பதற்கான கொடிய சூழ்நிலைகள் இன்னவெனத் தொடக்கத்திலேயே கண்டறிந்து அவற்றுக்குப் பொருத்தமான மருத்துவ அறுவைச் சிகிச்சைகள் அளிக்கப்படுமாயின் ஏராளமான குழந்தைகள் இவ்வுடல் ஊன நிலையினின்றும் காக்கப்படுவர்; அவர்கள் இயல்பான குழந்தைகளின் சரிநிகர் நிலைக்குக் கொண்டு வரப்படுவர் என்பது திண்ணம். நாம் அளிக்கின்ற இந்த மருத்துவ அறிவியல் முன்னேற்றங்கள் வகுத்த சிகிச்சையின் துணைகொண்டு மேற்சொன்னவாறு, இயல்பு நிலைமைக்குக் கொண்டுவரப்பட இயலாத குழந்தைகள் விஷயத்தில் அவர்களுக்குக் கல்விப் பயிற்சியும் வாழ்க்கைத் தொழில் பயிற்சியும் ஒரு சேர அளிக்கப்படல் வேண்டும்; அத்துடன் அறிவியல் முறையிலான உடல் நலம் பேணும் மருத்துவச் சிகிச்சையும் மாதக் கணக்காக அல்லது ஆண்டுக் கணக்காக அளித்து வரப்படுதல் வேண்டும். இவ்வுண்மையை இன்னும் மக்கள் பரவலாக அறிந்து கொள்ளவில்லை.

உலகில், உடல் ஊனமுற்ற மக்கள் என அழைக்கப்படுவோர் யாவர்? செவிடர், செவிட்டு ஊமையர், மன வளர்ச்சி எய்தாதோர், ஆண்மைத் திறன் குன்றியோர், குருடர், கை கால் முடமானோர் முதலியவர்கள். இந்தியாவில் உடல் ஊனமுற்றோர்கள் பற்றிய புள்ளி விவரங்கள் எந்த வகையிலும் மிகச் சரியானவையென்று சொல்லமுடியாது. ஆயினும், அவை நமக்கு அதிர்ச்சிஅளிக்கக்கூடிய பெரும் அளவினவாகும். உலகிலேயே மற்ற நாடுகளைக்காட்டிலும் இந்தியாவில்தான் மிக அதிக அளவில் குருடர்கள் உள்ளனர். உலகில் உள்ள குருடர்களின் எண்ணிக்கை 1,40,00,000 என்றால், இந்தியாவில் உள்ள குருடர்களின் எண்ணிக்கை நான்கில் ஒரு பங்கு அல்லது ஐந்தில் ஒரு பங்கு என்று மதிப்பிடப்படுகிறது. அதாவது 1967-ஆம் ஆண்டில் கல்வி அமைச்சகம் மதிப்பீடு செய்துள்ளபடி சற்றேறத்தாழ 43,90,000 ஆகும். இந்தியாவில் 100-க்கு ஒருவர் குருடர் எனக் கூறப்படுகிறது. இந்தியாவில் ஏறத்தாழ 20,00,000 பேர் செவிடர் எனவும் அவர்களில் ஏறத்தாழ 4,00,000 பேர் பள்ளி செல்லும் வயதுள்ள குழந்தைகள் எனவும் மதிப்பிடப்படுகிறது. இந்தியாவில், 1971-ல் உடலுறுப்பு முடமானவர்களின் எண்ணிக்கை மொத்தம் 41,60,000 என மத்தியப் புள்ளிவிவர நிறுவனம் மதிப்பிட்டுள்ளது.

இந்தப் புள்ளி விவரங்கள் நமக்குப் பெருங்கவலையளிப்பனவாக உள்ளன. அவை, நமக்குப் பிரச்சினைகள் எந்த அளவிற்குக் கடுமையாகியுள்ளன என்பதை உணர்த்துவதோடு, அவை நம்மால் இனிச் சமாளிக்க இயலாது என்னும் அளவிற்கு உயர்ந்துவிடாமலிருக்க அவற்றைத் தடுப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டியதன் அவசியத்தையும் உணர்த்துகின்றன. இந்த நோக்கில் பார்த்தால், உடலூனத் தடுப்புப் பணிகள்

குறிப்பாக முக்கியத்துவம் பெறுகின்றன.

கண்ணொளி இழப்பதற்குப் பற்பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. குழந்தைகளுக்கு ''ஏ'' வைட்டமின் சத்து பற்றாக்குறை, கண்ணின் நலனை எவ்வாறு பேணிக் காப்பது என்பதை அறியாமை, சிறுசிறு கண்ணோய்களுக்குத் தவறாகத் தெரிவிக்கப்படும் மருந்துகளைத் தாமே இட்டுக் கொள்ளுதல், போலி மருத்துவர்களிடம் பெருங்கேடு பயக்கும் வகையில் சிகிச்சை பெறுதல், மேகநோய் தொற்றிக் கொள்ளுமாயின் அதற்குத் தகுந்த சிகிச்சையைப் பெறத் தவறுதல் ஆகியவை. முக்கியமான காரணங்கள் ஆகும். இந்தக் காரணங்கள் யாவும், பள்ளிக் குழந்தைகளுக்கு முறையான கண்பரிசோதனை நடத்தப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தையும், அதனையடுத்து, கிராமங்களிலும் நகரங்களிலும் உள்ள பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்கும், கண்ணோய்களின் இயல்பு, அவற்றுக்குச் சிகிச்சையளித்தல் பற்றி எடுத்துரைக்க வேண்டியதன் அவசியத்தையும் நமக்குத் தெளிவுறுத்துகின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக, நமது குழந்தைகள் ''ஏ'' வைட்டமின் சத்து பற்றாக்குறையால் துன்புறாமற் காக்க அவர்கட்குச் சத்துணவு அளிக்க வேண்டுவதன் அவசியமும் வலியுறுத்தப்படுகின்றது.

அடுத்து நாம் உண்ணும் உணவினைப் பற்றிக் காண்போம். வயது வந்த ஒருவருக்கு நாள்தோறும் சுமார் 2400 முதல் 3000 கலோரிகள் வரை தேவைப்படுகிறது என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறிருக்க, சராசரி இந்தியர் உண்ணும் உணவில் தோராயமாக 1750 கலோரிகளே கிடைக்கின்றன; அன்றியும், அவரது உணவில் இன்றியமையா வைட்டமின் சத்துக்கள், கனிப்பொருள் சத்துக்கள், கொழுப்பு, புரதச்சத்துக்கள் ஆகியவையும் மிகக்குறைந்து காணப்படுகின்றன. இவ்வாறு, ஒருவர் உண்ணும் உணவில் காணும் சத்துக்கள் அவருக்கு உரிய அளவு தேவைப்படும் சத்துக்களைக் காட்டிலும் குறைவாகக் காணப்படும் இந்நிலைக்கு, வறுமையே முதற் பெருங்காரணமாகும் எனலாம். ஆரோக்கியமான நாட்டினை உருவாக்கவும் அதனைப்பேணி வரவும் வேண்டுமாயின், நாம் இங்கு துன்பத்தில் உழலும் இலட்சோபலட்சம் மக்களின் ''வயிற்றுக்குச் சோறிடவேண்டும்'' என்னும் பேருண்மையை அவசியத்தை, இது நமக்கு உணர்த்துகிறது.

''வயிற்றுக்குச் சோறிட வேண்டும்- இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்'' என்று மகாகவி பாரதியார் சொன்ன பொன்மொழிகள் நமது நினைவிற்கு வருகின்றன. உண்மையில், போதுமான சத்துணவு கிட்டினால் அது பலவழிகளிலும் உதவுகிறது. குறைமாதக் குழந்தைகள் பிறக்கும் எண்ணிக்கையைக் குறைத்தும் குழந்தை முழு வளர்ச்சி பெறுவதற்கு அதற்குரிய ஆற்றல் யாவும் கிடைக்க உரிய வாய்ப்பு அளித்தும், பின்னால் மனவளர்ச்சியுறாமற் போகின்றவர்களின் எண்ணிக்கையைக் குறைக்கின்றது. குழந்தைகள் பின்னர் மனவளர்ச்சியுறாமற் போவதற்கு வேறு சில காரணங்கள்; கருவுற்ற நிலையில் தாயின் உணவில் சத்துக் குறைவு, மதுப்பழக்கம், மேகநோய், சுகாதாரமற்ற சூழ்நிலையில் மருத்துவ அறிவும் பயிற்சியுமற்ற கிராம மருத்துவச்சியைக்கொண்டு பேறுகாலம் பார்த்தல், மாலைக்கண் ( Trauma ) நோயினால் ஏற்படும் துயர், தொற்றுநோய், குறிப்பாக டைஃபாயிடும் வேறு கடுங்காய்ச்சல்களும் ஏற்படுதல் ஆகியன.

உடலுறுப்புகள் ஊனமடைந்திருத்தல் என்னும் நிலை பரம்பரையாக வரலாம்; பிறப்பால் நேரிடலாம், அல்லது இடையில் ஏற்படுவதாய் இருக்கலாம்.

பரம்பரைக் குறைபாடு என்பது தலைமுறையாகத் தொடர்ந்து வருவதாகும்; இதற்குக் காரணம் பிறப்புக்கு வித்தான உயிரணுவின் இயக்கத்தில் உள்ளுக்குள் ஏற்பட்டு நிலைத்துவிட்ட ஒருவகைக் கோளாறு ஆகும். இந்த உயிரணுக்கள் ஒரு தனிமனிதனின் உறுப்பு அமைப்பில் ஒரு குறிப்பிட்ட அம்சம் இன்னவாறு அமையவேண்டுமெனத் தீர்மானிப்பதில், தத்தம் இயல்பினுக்கேற்ப, இயக்கமின்றிக்



கரந்து கிடக்கும், அல்லது மேலோங்கி நிற்கும். மேலோங்கி நிற்பவையாக வெளிப்படுத்தப் படுகின்ற இயல்பு மீறிய நிலைகளிற்சில: விரல்களின்றி அமைந்த கைகள், சிலந்தியின் கைகள் போல் தொய்ந்த கைகள், குறுகிக் குறைந்த விரல்கள், இரட்டை மூட்டுக்கள், பிளந்த மேல் அண்ணம், பிளந்த உதடு முதலிய உறுப்புக் குறைபாடுகள் ஆகும். இயக்கமின்றிக் கரந்து கிடப்பவையாய் வெளிப்படுத்தப்படுகின்ற நிலைகளிற் சில; விரல்கள் ஒன்று சேர்ந்து அமைந்த பாதம், இடுப்பு மூட்டு விலகியிருத்தல் போன்ற உறுப்புக் குறைபாடுகள் ஆகும். இத்தகைய உடலுறுப்புக் குறைபாடுகளை வழிவழியாய்ப் பெற்றுவருகின்ற குடும்பங்கட்கிடையே ஏற்படும் திருமணங்களை நேர்மையான முறையில் தவிர்ப்பதன் மூலம் பரம்பரையாக உடலூனங்கள் ஏற்படுவது தடுக்கப்படலாம்.

பிறப்பால் ஏற்படும் உறுப்புக் குறைபாடுகளில் மிக அதிக அளவில் சாதாரணமாகக் காணப்படும் குறைபாடுகள் வருமாறு: கிளந்த மேல்அண்ணம் (வாய்), உள்ளங்கை விரல்கள் சேர்ந்திருக்கும் நிலை, விரல்கள் ஒன்று சேர்ந்து அமைந்த பாதம், வளைந்து தொங்கும் கால், எலும்புகள் இல்லாதிருத்தல், இடுப்பு மூட்டு விலகியிருத்தல் ஆகியன. பிறப்பில் ஏற்படும் உடலுறுப்புக் குறைபாடுகள் அனைத்துமே பரம்பரையாய் வருபவை எனக் கூறிவிட முடியாது. அவற்றிற் பெரும்பாலானவை குழந்தையின் தாய்க்கு ஏற்பட்ட தொற்றுக் கிருமிகள், சத்துக்குறைவான உணவு, பெற்றோரின் இரத்தத்தில் (Rh Factor) "Rh" என்னும் பொருந்தாத் தன்மை ஆகியவற்றால் ஏற்படுபவையாகும். பிறப்பில் ஏற்படும் இத்தகைய உறுப்புக் குறைபாடுகள் (இயல்பின் வழுவிய நிலைகள்) பலவற்றை, உரிய மருத்துவ வசதி அளித்தும் சுகாதாரமான சூழ்நிலையை ஏற்படுத்தியும் குணப்படுத்தித் தவிர்த்துவிட முடியும்.

இடையில் ஏற்படும் ஊனங்கள் என்பன, (பேறுகாலத்தில்) பிறப்பின் போது நேரும் காயங்கள், நோயுறுநிலை, நோய்கள், விபத்துகள், சத்துக்குறைவுகள் போரின் விளைவுகள், வறுமை முதலிய காரணங்களால் விளைந்திடலாம்.

பொதுவாக, முடம் என்பது ஒருவனுக்குச் சூழ்நிலைகளால் ஏற்படுவதேயன்றிப் பிறப்பால் நேர்வதன்று. பிறப்பின்கண் உடலுறுப்புக் குறைபாடு ஏற்படுவதற்கான காரணங்களில் சில, மிகமிகப் பழையதாகிப் பிற்பட்ட நிலையிலுள்ள, தன்போக்கில், எல்லாம் தெரிந்தவராய்க் கருதி நடக்கின்ற கிராமப்பகுதி மருத்துவச்சிகளின் பத்தாம் பசலி நடைமுறைகள், உடனடிப் பேறுகால வசதிகள் கிடைக்காமை, எழுத்துவாசனையோ, பிறர் எடுத்துரைக்கப் பெற்ற அறிவோ இல்லாத, சூலுற்ற மகளிரின் புறக்கணிப்பு ஆகியன. சூலுற்ற மகளிருக்கு மகப்பேறு குறித்த அறிவைத் தீவிரமாகப் புகட்டுவதாலும், சிறந்த மகப்பேறு மருத்துவ வசதி அளிப்பதனாலும், பிறப்பில் ஏற்படும் உடலூனத்தைத் தடுப்பதில் பெரும் பயனைப் பெறலாம். எனினும், உடலூனமுற்ற குழந்தை பிறந்துவிட்டால், எடுத்துக்காட்டாக, விரல்கள் சேர்ந்து அமைந்த பாதத்துடன் பிறந்துவிட்டால், பிறப்பால் ஏற்பட்ட இக்குறைபாட்டினை, குழந்தை பிறந்தவுடனேயே, உடனடியாகச் சிகிச்சையளிப்பதன்மூலம் அகற்றலாம் அல்லது குறிப்பிடத்தக்க அளவிற்கு அந்த ஊனம் குறைக்கப்படலாம்.



உறுப்புகள் இழப்பு, பார்வை இழப்பு ஆகியனவும், நரம்பு மண்டலம், மூளை இவை சேதமுறுவதும் விபத்துக்களாலும் ஏற்படுகின்றன. பலருக்கு மரணம் விளைவிப்பதன்றியும், ஊனமின்றிச் சாதாரணமாகவுள்ள தனிப்பட்டவர்களை வாழ்நாள் முழுவதும் ஊனமுற்றவர்களாக்கி வருந்தச் செய்துவிடுகின்ற பல்வகைப்பட்ட விபத்துக்களின் நீண்ட பட்டியலில் சாலை விபத்துக்கள் தொழிற்சாலை விபத்துக்கள் தீ விபத்துக்கள் ஆகியன ஒரு சிலவாகும். விபத்துகள் அடிக்கடி நிகழ வாய்ப்புள்ள பல்வகை இடங்கள், பொருள்கள், சூழ்நிலைகள் பற்றி எடுத்துரைக்கின்ற விபத்துத் தடுப்பு குறித்த முகாம்களை முனைப்பாக நடத்துதல், கண்களுக்குக், குறிப்பாகத் தீங்கு விளைவிக்கும் எனத் தெரிகின்ற பணிகளில் குளிர்ச்சி-பாதுகாப்புக் கண்ணாடிகளை (Goggles) அணிந்து கொள்ளுமாறு வற்புறுத்துதல், இரண்டு சக்கர வண்டிகளில், (மோட்டார் சைகிள், ஸ்கூட்டர் முதலியவற்றில்) செல்வோர் தலைக்கவசம் அணிந்து கொள்ள வற்புறுத்துதல் ஆகியன, விபத்துக்களால் உடல் ஊனங்கள் ஏற்படும் அளவினைப் பெரிதும் குறைக்கும்.

இறுதியாக, மக்களுக்கு ஏற்படும் உடலூனங்களில் பெரும்பாலானவற்றுக்கு, மக்களின் ஆழங்காண முடியாத அறியாமை, அவர்களைச் சுற்றிச் சூழ்ந்து பிணித்துள்ள வறுமை, மருத்துவ வசதிகள் போதாமலிருத்தல், கிடைக்காமலிருத்தல், பல்வகைப்பட்ட விபத்துக்கள் நாள்தோறும் பெருகி வருதல், ஆகியன காரணங்களாகும். தவிர்க்க முடியாத வகையில் உடலூனங்களை ஏற்படுத்திவிடுகின்ற இந்தத் தடைகளை உடைத்தெறிய நாம் முயலுகின்ற இவ்வேளையில் நாம் ஒருவகை நச்சுவட்டத்தில் அகப்பட்டுள்ள நிலையைக் காண்கிறோம். உடலூனங்களை ஏற்படுத்தும் காரணங்களும் வாய்ப்புகளும் மொத்தமாகச் சேர்ந்து, ஒரு பெரிய நாடு முழுவதினுடைய உற்பத்தித் திறனையும் ஆற்றலையும் முடமாக்கி விடமுடியும். அதே சமயம் விரிவான பொருளாதார மறுமலர்ச்சியின் அடிப்படையில் பொதுவான, முழுமையான மேம்பாடு நமது வாழ்க்கை நிலைமைகளில் ஏற்படுமேயானால், அந்நிலையே, மேற்சொன்ன உடலூனங்களைத்தோற்றுவிக்கும் காரணங்களையும் வாய்ப்புகளையும் தடுத்திடப் பெரும்பணியாற்ற இயலும். நாட்டின் உற்பத்தித் திறன் பெருகுமாயின் அது நமது செல்வ வளத்தைப் பெருமளவிற்குப் பெருக்கிட முடியும். எனவே, "உடலூனமுற்றோருக்கான உலக நாளில், கூன், குருடு, செவிடு, முடம் என்றின்ன பல வகையில் உடலூனங்களை விளைவிக்கக் காரணமாய் இருக்கும் வாய்ப்புகள், சூழ்நிலைகளைத் தடுக்கவும் களையவும், நமது ஆற்றலுக்குட்பட்ட எல்லாவற்றையும் செய்வோம் என்னும் பொதுநலன் குறித்த உறுதி மொழியை நாம் ஒவ்வொருவரும் மேற்கொள்வோமாக!

# காவல் துறை வரலாறு



இந்தியாவில் பண்டைக் காலம் முதல் மக்களைப் பாதுகாக்கவும் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கவும் காவற்படை இருந்ததாகத் தெரிகிறது.

மௌரிய மன்னர்கள் காலத்தில் எழுதப்பெற்ற கௌடிலியரின் 'அர்த்த சாஸ்திரம்' ஒற்றர்களைப் பற்றி விரிவாகக் கூறுகிறது. ஒற்றர் படையை இக்காலத்துக் குற்றப் புலனாய்வுத்துறை (Criminal Intelligence Department) என்பதுடன் சில விஷயங்களில் ஒற்றுமையுடையது என்றும் கூறலாம். அக்காலத்தில் மதுபானத் தடையும், அதை அமல் செய்வதற்கான அரசாங்க அலுவலகமும் இருந்ததாகவும், அந்த நூல் கூறுகிறது. அக்காலத்தில் ஐயப்படக்கூடிய அன்னியர்கள் குற்றங்கள் செய்யாமல் தடுப்பதற்கான ஏற்பாடுகள் இருந்தன என்றும் தெரிகிறது. சூது விளையாட்டும் தடுக்கப்பட்டிருந்தது.

இக்காலந்துக் காவலருடைய மற்றொரு வேலை கள்ள நாணயம் செய்வதைக் கண்டுபிடிப்பதாகும். அக்காலத்தில் காவலர் எவ்வாறு கண்டுபிடித்தார்கள் என்பதை இந்நூல் விரிவாகக் கூறுகின்றது. கொலையுண்டதைக் கண்டுபிடிப்பதற்காகக் காவலர் கையாளவேண்டிய விசாரணை வகைகளையும் விரிவாகக் கூறுகின்றது.

திருக்குறளிலும் ஒற்றர் பற்றிய அறிவுரைகள் உள்ளன. பண்டைக் காலத்தில் நகரங்களில் இரவில் காவற்காரர்கள் காவல் புரிவர் என்பதும், அரசன் மாறுவேடம் பூண்டு அவர்களைக் கண்காணிப்பான் என்பதும் சிலப்பதிகாரம், பத்துப்பாட்டு, புறநானூறு போன்ற நூல்களிலிருந்து அறியலாம்.

சோழர் காலத்தில் இரவில் தெருக்களில் சுற்றிக் காவல் ரிவோர் உண்டு. ஒவ்வொரு ராமமும் அதற்காகக் குறிப் ட தொகை தரும். அது ந்காவற் கூலி என்று பெயர் ம் சிலவிடங்களில் காவற்காரர்களுக்குக் கூலி தருவதுடன் வீடுகளும் தருவதுண்டு.

ஆயிரம் ஆண்டுகட்கு முன் ஏற்பட்ட முஸ்லீம் ஆட்சியில் இரண்டுவித நீதிமன்றங்கள் இருந்தன. ஒன்றில் முஸ்லீம் மத சம்பந்தமான வழக்குகள் விசாரிக்கப் பெறும்; மற்றதில் முஸ்லீமல்லாத மக்களுக்கு நீதி வழங்கும். அரசன் இந்த நீதிமன்றத்தில் செய்யும் தீர்ப்புக்களை அமல் செய்ய ஓர் அலுவலர் இருந்தார். இவருக்குக் கீழே கொத்தவால் (Kotwal) காவலர், முஹ்டாஸிப் (Muhtasib) என்பவர் வேலை செய்வர்.



முஹ்டாஸிப்புக்குக் கீழாக வேலை செய்பவர் கொத்தவால். இவரிடம் காவலரும் ஒற்றர்களும் இருந்தனர். காவலர் முக்கியமான இடங்களைப் பாதுகாப்பார். இரவில் தெருக்களில் சுற்றி வருவர். ஒவ்வொரு தெருவிலும் குடியிருப்போர் முகவரியும் வேலையும் பதிவு செய்வார்கள் அயலூரிலிருந்து வந்து ஏமாற்றாமலிருப்பதற்காக இந்த ஏற்பாடு. கொலை நடந்தால் பிரேத விசாரணை நடத்துவர். கொத்தவால்கள் பெரிய நகரங்களிலேயே இருந்தனர். இவர்கள் சில சமயங்களில் கொடூரமாக நடந்தபோதிலும் பொதுவாக மிகத் திறமையாகச் சட்டங்களை அமல் செய்ததாகவே தெரிகிறது. இவர்களுடைய கடமைகள் அயினி அக்பரி (Ain—i—Abkarit) என்ற நூலில் விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. இந்த நூல் அக்பர் பாதுஷாவின் நாட் குறிப்புப் புத்தகமாகும்.

கிராமங்களில் காவல் பணியாற்றியவர் பவுஜ்தார் (Faujdar) எனப்படுவர். இவர் வரி வசூல் செய்வதுடன் சாலைகளைப் பாதுகாப்பது, கொல்லர்கள் துப்பாக்கி செய்யாமல் பார்த்துக் கொள்வது முதலியவற்றைக் கவனிப்பார். இவருக்குக் கீழாக இருந்தவர்கள்தாணாதார்கள் (Thanadars) தாணாதார் அலுவலகம் தாணா; முன்பெல்லாம் காவல் நிலையம் தாணா என்று அழைக்கப்படுவதுண்டு. சில கிராமங்களில் காவல்காரரர் குற்றங்கள் நிகழாமல் பார்த்துக் கொள்வர். அவர்களுக்கு ஊதியம் கிராமத்தாரே தருவர்.

முஸ்லீம் ஆட்சி வீழ்ந்தபோது பம்பாய், கல்கத்தா, சென்னை ஆகிய இடங்களில் வாணிகம் செய்து கொண்டிருந்த கிழக்கு இந்தியக் கம்பெனியார் சிறிது சிறிதாக நாட்டில் ஆதிக்கம் பெறலாயினர். இவர்கள் தங்கள் பிரிட்டிஷார் குடியிருப்புகளில் ஆங்கிலச் சட்டத்தையும், இந்தியர் வாழுமிடங்களில் நாட்டுச் சட்டத்தையும் வழக்கங்களையும் அமல் செய்தனர்.

மொகலாய பாதுஷா அவுரங்கசீபு இறந்த பின்னர் மொகலாய பேரரசு நலிவுற்றது. தென் இந்தியாவில் ஐதர் அலியும் அவருக்குப் பின் திப்பு சுல்தானும் ஆதிக்கம் செலுத்தினர். ஐதர் அலி ஆட்சியில் காவல் அமைப்பு நன்றாக நல்ல விதமாக இருந்தது. ஒவ்வொரு மாவட்டத்திலுமிருந்த உயர் அலுவலர் அமில்தார் (Amil dar), அவருக்குக் கீழாகக் கொத்தவால்களும் அவர்களுக்கு உதவியாகக் கடைநிலை ஊழியர்களும் பணி செய்தனர். கிராமங்களில் தலையாரிகளே காவலரின் கடமைகளைச் செய்து வந்தார்கள். திப்புவின் காலத்திலும் இவ்விதமே நடந்து வந்தது.



மகாராஷ்டிரர்கள் தங்கள் ஆட்சியில் பண்டை இந்து மன்னர்கள் போலவே கிராம நிருவாகத்தை நடத்தி வந்தனர். அங்குப் பழைய காவற்கார முறையே நடந்து வந்தது.

விஜயநகர அரசர்கள் சமஸ்கிருத தரும சாத்திரங்களில் சொல்லியுள்ளபடி ஆட்சி நடத்தினர். கிராமக்காவல் முறையே நடந்து வந்தது. காவற்காரர்கள் திருட்டுப் போகாமல் பார்த்துக் கொள்வர். திருட்டுப்போனால் அதற்கு ஈடுகட்டித் தருவர். நகரங்களில் ஒவ்வொன்றும் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பிரிவும் தலவாரர் (Talavaras) என்பவர் மேற்பார்வையில் இருந்தது.

அவருக்குக் கீழாகப் பலர் வேலை செய்தனர். இரவில் முரசு முழங்கியபின் யாரும் தெருவில் நடமாடக் கூடாது. அக்காலத்தில் பாரசீகத்திலிருந்து வந்த அப்துல்ரசாக் என்ற தூதர், தலைநகரத்தில் 12 ஆயிரம் காவலர்கள் இருந்ததாகக் கூறுகிறார்.

கிருஷ்ணதேவராயர் காலத்தில் ஜெக்கமய்யா என்பவர் காவல்துறை ஆணையாளராக இருந்தார். அரசர் இரவில் மாறுவேடம் பூண்டு நகரில் சுற்றிப் பார்ப்பர்.

பிரிட்டிஷார் ஆட்சியில் காவற்படை நாளடைவில் நல்ல விதமாக உருவாயிற்று. அதன் முக்கிய அம்சங்கள் மூன்று. பண்டைக்காலத்தில் பெரும்பாலும் சிவில் அதிகாரமும், இராணுவ அதிகாரமும் சேர்ந்திருந்தன. இப்போது இரண்டும் பிரிந்தன. இரண்டாவதாக அரசின் அதிகாரத்துக்கு உட்படாதவாறு நீதிமன்ற நிருவாகம் நடைபெறுகின்றது. மூன்றாவதாகக் காவற் படை தனியாகவும் அமைந்துள்ளது.

வாரன் ஹேஸ்ட்டிங்ஸ் என்னும் கவர்னர் ஜெனரல் காவற்படை பற்றிய பல ஏற்பாடுகள் செய்தார். அவருடைய ஏற்பாடுகளிலிருந்து முளைத்து வளர்ந்ததே இப்போதுள்ள காவல் துறை. சர் சார்லஸ் நேப்பியர் தம்முடைய சிந்து மாகாணத்தில் அயர்லாந்துக் காவற்படை போன்ற ஒரு காவற்படையை 1846-இல் நிறுவினார். அதற்குமுன் காவற்படை தனி அலுவலரின் கீழ் அமையாதிருந்ததால் திறமையாக வேலை செய்யவில்லை. நேப்பியர் இந்தக் குறையை நீக்கினார். சிந்து காவற்படை சிறப்புப் பெற்றது.

இதைப் பார்த்துச் சென்னை முதலிய மாநிலங்களிலும் காவற் படை சீர்திருத்தி அமைக்கப்பெற்றது. ஆயினும் கிழக்கிந்தியக் கம்பெனியின் இயக்குநர்கள் சென்னை அரசின் காவற் படை திருப்திகரமாக வேலை செய்கிறதா என்று ஆராயுமாறு 1854-இல் கேட்டுக் கொண்டனர். சென்னை ஆளுநர், காவற் படை ஒவ்வொரு மாவட்டத்திலும் தனித் தலைவரின்கீழ் பணி செய்ய வேண்டும் என்றும், மாவட்ட மாஜிஸ்திரேட்டின் கீழ் பணி செய்யக்கூடாது என்றும்,



மாநிலம் முழுவதற்கும் காவற்படையின் தனித்தலைமை அலுவலர் இருக்க வேண்டும் என்றும் பரிந்துரை செய்தார். அதை இயக்குநர்கள் 1856-ல் ஏற்றுக் கொண்டனர். பின்னர் சென்னைக் காவல் சட்டம் 1859-ல் நிறைவேறியது. இதைப் பார்த்ததும் மத்திய அரசு சென்னைச் சட்டத்தைப் பார்த்து, அதுமாதிரி இந்தியா முழுவதற்குமாக ஒரு மசோதா தயாரிக்குமாறு ஒரு குழுவை 1860-ல் நியமித்தது. இக்குழு அளித்த அறிக்கையை வைத்து 1861-ல் இந்தியக் காவல் சட்டம் நிறைவேற்றப் பட்டது.

இங்கிலாந்தில் 1829 மெட்ரப்பாலிட்டன் காவற் படை நிறுவப்படுவதற்கு முன்னர்த் துப்பறிபவர் (Detectives) இருந்தனர். ஆனால், அவர்கள் ஒருவர்க்கொருவர் உதவிக் கொள்வதில்லை. ஒருவர் பெற்ற அறிவு அவருடன் மாய்ந்து போகும். 1869 வரை இலண்டன் காவல் தலைமை அலுவலகமாகிய ஸ்காட்லாந்து யார்டு (Scotland - yard) என்பதில் சில துப்பறிபவரே இருந்தனர். 1869-இல் இவர்கள் தொகை மூன்று மடங்காகப் பெருகியது. 1878-ல் குற்றப் புலனாய்வுத்துறை என்னும் பெயருடன் விஞ்ஞான முறையில் குற்றங்களைக் கண்டுபிடிக்கும் துப்பறிபவர் நிலையம் ஒன்று அமைக்கப்பெற்றது.

இந்தியாவில் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பல ஊர்களிலும் காவற் படையில் துப்பறிபவர் இருந்தபோதிலும், அவர்கள் முறைகள் எல்லாம் ஒருமுகப்படுத்தப்பட்டு, நாடு முழுவதும் பயன்படச் செய்வதற்கான ஏற்பாடு இருக்கவில்லை.

1902-3-இல் நிறுவப்பெற்ற காவற் குழு ஒவ்வொரு மாநிலத்திலும் குற்றப் புலனாய்வுத் துறை நிறுவ வேண்டும் என்று பரிந்துரை செய்தது. அத்தகைய துறை சென்னையில் 1906-இல் நிறுவப்பெற்றது.

1928-இல் இத்துறையானது குற்றப்பிரிவு என்றும் சிறப்புப் பிரிவு என்றும் பிரிக்கப் பெற்றது. குற்றப் பிரிவினர் குற்றங்கள், குற்ற வகுப்பினர் பற்றிய காரியங்களைக் கவனிப்பர். சிறப்புப் பிரிவினர் அரசின் கண்களாகவும் காதுகளாகவுமிருந்து அரசின் கடியப் போக்குவரத்து வெளியே தெரியாதபடி பாதுகாக்கும் பொறுப்புடையவர்.

சுருக்கெழுத்துத்துறை - இது முக்கள் செய்யும் சொற்பொழிவுகளை ஆராய வேண்டிய அவசியம் அரசுக்கு ஏற்படுவதால் அச்சொற்பொழிவுகளைச் சுருக்கெழுத்து வாயிலாகப் பெறும் பொருட்டு சுருக்கெழுத்துத் துறையை ஏற்படுத்தியுள்ளனர்.

1919-ல் சென்னை அரசு காவல் சுருக்கெழுத்துத்துறை ஒன்றைத் தனியாக 24 துணை ஆய்வாளர்கள் கொண்டதாக அமைத்தார்கள். இவர்களுடைய முழுநேர வேலை மாநிலம் முழுவதிலும் தேவைப்படும் இடங்களில் சென்று சொற்பொழிவுகளைச் . சுருக்கெழுத்தில் வரைவதாகும்.

எக்ஸ் பிரிவு (X Branch): இது குற்றப்புலனாய்வுத்துறையில் குற்றப் பிரிவு, சிறப்புப் பிரிவுகளுடன் 1946-இல் நிறுவப்பெற்றது. இதன் பணி இலஞ்ச ஊழல்களைக் கண்டு பிடிப்பதாகும்.

1896-ல் இன்ஸ்பெக்டர்களும் இங்கிலாந்திலிருந்து வரும் உதவி சூப்பரின்டெண்டென்டுகளுக்கும் பயிற்சி அளிக்க வேலூரில் ஒரு பயிற்சிப் பள்ளி நிறுவப்பெற்றது. பின்னர் இங்கு துணை ஆய்வாளர்களும், காவலர்களும் பயிற்சி பெறலாயினர்.

இப்பள்ளி 1949-ல் கல்லூரியாக ஆக்கப்பெற்றது. 1948 முதல் இந்தியக்காவல் துறைக்கு (I.P.S.) நியமனம் பெறுவோர் பயிற்சி பெறுவதற்காக இந்திய அரசு ஆபுமலையில் (Mount Abu) மத்தியக் காவல் பயிற்சிக் கல்லூரியொன்று நிறுவியுள்ளது.



